


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To guard and protect your child

The Arunalu Minors Savings Account is designed to help every parent protect and guard their child's future.
By providing financially, you make your child's future more secure.

These are the Arunalu benefits:

- You can open an account at any branch with just Rs.50/-.
- Over 70 cash prizes each year to account holders who score the 1st, 2nd and 3rd highest aggregate marks in every district in the Year 5 scholarship examination.
- Withdrawals from the account for urgent medical or educational needs.
- Higherate of interest.

Arunalu is also the perfect gift for all your loved ones

ARUNALU

MINORS SAVINGS ACCOUNT

COMMERCIAL BANK

*Our Interest Is In You*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வணிகன்

## இதழ் 5

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
வணிக
மாணவர் மன்றம்

**1998 – 1999**

பொதுசன நூலகம்
-3 JUN 1999
யாழ்ப்பாணம்

125 (P)

இதழாசிரியர்

தலைவர்

1014 (P) C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மத்திய கல்லூரி
## வர்த்தக மாணவர் மன்றக் கீதம்

இராகம் : பெகாக் தாளம் : ஆதி

மத்தியின் வணிகத் துறையது மிளிர
நித்தமும் உழைக்கும் மன்றம்.
(மத்தியின்)

நவத்தார் காஸர் கந்தர் என்போர்
தவத்தால் வளர்த்தனர் நாளும்.
(மத்தியின்)

உவப்பாய்த் துறையது உயர்வாய் ஓங்கிட
ஒற்றுமை பற்றுடன் வளர்ப்போம்
துவங்கும் பல்துறை கணனிப் பொறிமுறை
துலங்கிடக் கற்றுநாம் உய்வோம்.
(மத்தியின்)

நவத்தார் – கலைப்புலவர் – நவரெத்தினம்
காஸர் – முன்னாள் அதிபர் பி.ரி.– காஸ்
கந்தர் – முன்னாள் உப–அதிபர் – கந்தசாமி
(மத்தியின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக மாணவர் மன்றம்

# 1998

போசகர்

திரு. கே. இராசதுரை
அதிபர்

பொறுப்பாசிரியர்

திரு. எஸ். நடராஜா

தலைவர் :

செல்வன் இ. றிச்சாட் லெபனான்

உப தலைவர் :

செல்வன் வே. றெயிபிராங்கிலின்

செயலாளர் :

செல்வன் இ. சுதர்சன்

உப செயலாளர் :

செல்வன் எஸ். துஷ்யந்தன்

பொருளாளர்:

செல்வன் எஸ். இன்பரூபன்

இதழாசிரியர்கள் :

செல்வன் இ. ரணேசன்
செல்வன் ஆர். காமினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியின் மாணவச் சமுதாயம்

நல் மாணவரை தாராயோ மத்தியமே
இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கு

மாணவர் என்போர் மாநிலம் சிறக்க
ஆனவை செய்யும் ஆற்றல் உடையோர்
இந்த ஆற்றல் ஏற்ற வகையில்
சிந்தனையோடு செயற்பட வேண்டும்.

கல்வி என்பது பாட நூல்களை
நல்விதமாகப் பயிலுதல் அல்ல !
நடத்தை தன்னை நல்விதமாக
அடக்கி நடத்தலே கல்வியின் நோக்கு.

ஒழுங்கும் பணிவும் உயரிய் பண்பும்
ஒழுக்கம் தன்னை உண்டாக்குவதாம் !
விழங்கும் நல்ல மாணவர்க்கெல்லாம்
களங்கம இல்லா வாழவு இதுவே !

மனிதம் மேம்பாடெய்த வேண்டுமேல்
மாணவர் மேம்பாடெய்தல் வேண்டும்
புனிதமான அன்பு சத்தியம்
தணியாத் தர்மம் சாந்தி அஹிம்சை
கனிவாய் எங்கும் காத்திடல் வேண்டும்.

உண்மை ஞானம் அறிவுத் தாகம்
தன்னை அறிதல் சமநிலை பேணல்
நல்ல சிந்தனை நல்லவை காணல்
பல்வகை ஆற்றல பகுத்தறிவாய்வு

நேர ஒழுங்கு நேரிய கொள்கை
ஆற அமர ஆய்ந்து ஓய்ந்து
தீர அறிந்து சிறப்புறச் செய்தல்
எளிமை துணிவு ஏற்ற செயல்கள்
தியாகம் தானம் நீதி செம்மை
ஞாயம் பொறுமை தியானம் திருப்தி
பொறுப்பு பரிவு இரக்கம சகிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பு இல்லா வெள்ளை உள்ளம்
தன்னை மறுப்பு பிறநலம் பற்றல்
முன்னலமாக அன்பினை வளர்த்தல்
அன்பினால் உலகில் சாந்தியை வளர்த்தல்

தென்பினால் அஹிம்சையை தீரமாய்க் கொள்ளல்
உணர்ச்சிகள்அடக்கி உத்தம அறிவைப்
பிணக்கிலா வகையில் பிரயோகித்தல்
தன்குரு தாயார் தந்தையார் பெரியோர்
மன்பெருக மக்களாய் உணர்ந்து பணிதல்.

கவிச் செடிக்குச் சிநதனை எருவும்
நல்ல அறிவாம் நீருமு வார்த்துப்
பல்கும் சந்தேகங்களும் களைந்து
ஓங்கும் வகையால் உயர்திடல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் மாணவர் ஒழுகின்
சவ்வாதாக சமூகம் மணம் பெறும்
சமூகக் கோபுரக் கலசம் எல்லாம்
சுமூகமாகத் துலங்கி ஒளிரும்.

அமைதி சாந்தி சமரசம் ஒற்றுமை
நியதியாக நீடு வாழும்
எல்லா மக்களும் எல்லாம் பெறுவர்
இல்லார் இரார் இரப்பாக இரார்
பெல்லார் இலார் எனவே மாணவர்
நல்லாராக நடப்பது கடனே என்க கூறி

மத்தியின் மணிக் கொடி நித்தியம நிலைக்க
மத்தியின் கலைஞன் கவிதையை காற்றோடு
கலந்து விடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் விரியும் போது . . . . . . !

வாழ்த்துவோர் :

அதிபர்
1. உதவி அதிபர்
2. கல்விச் செயலாளர்
3. துணை வேந்தர்
4. வணிகத்துறைத் தலைவர்
5. பொறுப்பாசிரியர்

மாணவர் மனதிலிருந்து . . . .

1. தலைவரின் பார்வையில்
2. செயலாளரின் செயற்பாட்டிலிருந்து
3. இதழ் ஆசிரியரின் இதயத்தில் இருந்து

பவளவிழாக் கண்ட வர்த்தக மன்றம்
1996, 1997 ஆண்டிற்கான பொறுப்பேற்று வரைபு
மன்றச் செயற்பாடுகளில்
அரும்பணி ஆற்றிய ஆசிரியர்

# இதழ் இரண்டு விரியும் போது . . . . !

வணிகக் கல்வி :

1. **SWOT** ஆய்வு
2. முகாமைத்துவக் கோட்பாடுகளின் பரிநாம வளர்ச்சிக் கோட்பாட்டாளர்கள் செய்துள்ள பங்களிப்பு
3. இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு
4. **SMALL BUSINESS VEATURE**

பொருளியல் :

1. சென்மதி நிலுவை புதிய அறிமுகம்
2. பொருட்கள். சேவைகள் மீதான வரியின் முக்கியத்துவமும் வரி விதிப்புத் தொடர்பான பின்னணியும்
3. பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கியல் :

1. கூலிசிரயம்
2. பங்குடமை ஒன்றின் நிதியாண்டு சேரும் விலகும் பங்காளற்கான பற்று வட்டிக் கணிப்பீடு
3. அறவிடமுடியாக் கடன்; ஐயக் கடன் ஏற்பாடு கடன்பட்டோர் கழிவேற்பாடு
4. கொள்ளல் கொடுத்தல் கணக்கும வருமான செலவுக் கணக்கும்
5. ஒப்படை கணக்கு

இந்து நாகரீகம் :

1. வர்ணக் கோட்பாடு பற்றி மாணவன் கண்ணோட்டம்
2. முருக வழிபாடு பெறும் முக்கியத்துவம்

சிறிஸ்தவ நாகரீகம் :

1. இயேசுவின் மீட்பு

புவியியல் :

1. சுற்றுச்சூழல் பாதுகாப்பும் றியோ பூமி மானாடும்

பொது அறிவும் பொது உளச்சார்பும் :

1. கணனியின்அறிமுகம்
2. கல்வியின் சிறப்பு
3. உலகு சமாதானம்
4. விஞ்ஞானத் தொழிற்பாட்டின் பின்னணியில் வர்த்தகத்தின் பங்கு
5. குடாநாட்டுப் போரும் பொருளாதார நிலைமயும் மாணவரின் உளத்தாக்கமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் ஆசிச் செய்தி

'மத்திய வணிகத்தின் - 5 வது இதழ்' 1998 ல் மலர்வதையிட்டு மகிழ்கின்றேன். கலைப்புலவர் - நவரத்தினம் அவர்கள் எமது கல்லூரியில் முதல் முதல் கட்டி வளர்த்த வணிகக் கல்வித்துறை இன்று யாழ் மாவட்டம் முழுவதும் பரவி மிகப் பிரபல்யமான துறையாகிவிட்டது.

உலக ரீதியாக வணிகத்துறைக் கல்வி இன்று முக்கியம் பெற்றுள்ளது.

உயர்கல்வி வாய்ப்புக்களையும் ? அதனூடான வேலை வாய்ப்புக்களையும் பெருமளவு பெற்றுக்கொடுக்கும் கல்விப்புலம் எதுவோ அதுவே பலராலும் நாடப்படும் துறையாக விளங்குகின்றது. ஒரு துறை இன்னொரு துறையின்வளர்ச்சிக்கு இணையாகவும் - துணையாகவும் நிற்பது தவிர்க்க முடியாததாகியுள்ளது. பொறியியல் துறை கற்போர் - கணக்கியல் துறையினை இணையாகக்கற்பதனையும் மருத்துவத்துறை மாணவருக்கு - 'மருத்துவ வணிகம்' என்ற புதிய கல்விநெறி இந்தியா போன்ற நாடுகளில் இன்று பிரபல்யமான கல்வித்துறையாக வளர்ந்து வருவதும் - கணனியற்ற எந்தத்துறைக்கல்வியும முழுமை பெறாது என்ற நிலையும், 'இன்ரநெற்' என்ற வலைப்பின்னல் - சகல துறைகளையும் பின்னிப்பிணைத்து-இணைத்து அகில உலகிலும் அவசியமாகிக் காணப்படுகிறது.

இந்த வகையில் எமது வணிகத்துறை மாணவர்கள் வணிகத்தறைச் செய்திகளையும் - வணிகத்துறைக்கல்விக்கருத்துக்களையும் இதனூடாக வெளிக்கொணர்வது பாராட்டுதற்குரியது. யாழ்-மாவட்டத்து சகல கல்லூரிகளது வணிகத்துறை மாணவர்களும் - யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வணிகத்துறையும் இணைந்து ஆகக் குறைந்தது வருடம ஒரு வணிகக் கல்விக்குரிய செய்தி - ஆய்வுகளை - வெளியிடும் நிலை விரைந்து வரவேண்டும் என இம் மலரூடாக விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

போதிய தமிழ் நூல்கள் இல்லாமையை ஏங்கி நிற்கும் - வணிகத்துறை மாணவருக்கு இது ஒரு பெரும் துணையாகுமல்லவா ? வெறும் 'தேர்வு'க்காக மட்டும் ஓடித்திரிந்து 'குறிப்புக்களை' எழுதிக் குவித்து 'தேடுதலற்ற' கற்றலை மட்டும மேற்கொள்ளும மாணவச்சந்ததிக்கு இது பயன்படாவிடினும் - தேடுதலுடனான கல்வி பாரம்பரியத்துக்கு அது ஒரு கலங்கரை விளக்காக பணன்படும் என்பது தெளிவு.

இந்த வகையில் மத்திய வணிகமும் தொடர்ந்தும் தனது அங்க இலக்கங்களை அதிகரித்து வளர வாழ்த்துகின்றேன். **" LIVE IN SERVICE GLAD AND FREE"** என்ற கல்லூரிக்கீத வரிகளை மீளவும் சமர்ப்பிக்கின்றேன்.

அன்புடன்
க. இராசதுரை
அதிபர்

வணக்கம் ! நன்றி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி அதிபர்களின் வாழ்த்து செய்தி

எமது கல்லூரியில் 1920ம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்ட வணிகக்கல்வியானது எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் வணிகக் கல்வித் துறையைத் தனித்துவமான துறையாக அறிமுகப்படுத்தியதும், வளர்த்தெடுத்ததுமான பெருமை எமது கல்லூரிக்கே உரியதாகும். கணித்ததுறை, விஞ்ஞானத்துறைகளில் இருந்த ஆர்வமானது இன்று வணிகத்துறைக்குத் திரும்பியிருப்பது இத்துறையின்முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. அரச துறையிலும், தனியார் துறையிலும் வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தரும் ஒரு கல்வித் துறையாக இருப்பதனால் வணிகக்கல்வியின் அவசியம் உணரப்பட்டுள்ளது. இத்துறையின் வளர்ச்சிக்கு தமிழில் போதுமான நூல்கள் இல்லாமை ஒரு குறையே. இதனை நிவர்த்தி செய்வதில் இத்தகைய வெளியீடுகள் பெரும் பயன் விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தருணத்தில் எமது கல்லூரியின் வணிகத்துறை தொடக்க ஆசான் கலைப்புலவன் நவரத்தினம் அவர்களை நினைவு கூராது இருக்க முடியாது. அவர் தொட்டது இன்றுவரை துலங்குவது குறிப்பிடத்தக்கது.

வணிக மன்றத்தினரின் இப்பணி தொடர்ந்தும் சிறக்க எமது வாழ்த்துக்கைகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

U. T. நாகரெட்னம்
(B.Sc, (Cey))

இ. ஓங்காரமூர்த்தி
(B.A., Dip-in-Ed., SLPS II)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செயலாளரின் ஆசிச் செய்தி

யாழ் மாவட்டத்தில் முன்னணிப்பாடசாலைகளில் ஒன்றான யாழ்ப்பாண மத்திய கல்லூரி வர்த்தகத் துறையில் சிறந்த பெறுபேற்றைப்ப ெற்று வருவது கல்விக் கமூகம் அறிந்த தொன்றாகும்.

1920ம ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக வர்த்தகத் துறையினை ஆரம்பித்த பெருமையும் இப்பாடசாலைக்கே உரியதாகும். வர்த்தகத் துறை இன்று பல்முனை கொண்ட வளர்ச்சிப்போக்குடையதாக காணப்படுகின்றது. இதற்கு ஏற்ப இத்துறையை நாடிச் செல்லும் மாணவர்களும் மிகுந்த போட்டி நிலையிலும் தம் திறன் உயர்த்தி நிற்கின்றனர்.

கடந் வருடம (1997இல்) இக் கல்லூரி மாணவர்களில் மூவர் வர்த்தகத் துறையில் நான்கு திதரச்சித்தி பெற்றதுமட்டுமன்றி அகில இலங்கை ரீதியிலும் இரண்டாவது, எட்டாவது பதின்நான்காவது இடங்களையும் யாழ் மாவட்ட ரீதியாக முதலாவது, மூன்றாவது, நான்காவது இடங்கைப் பெற்றமையும் எமக்கெல்லாம் பெருமையம் மகிழஞுச்சியையும் ஏற்படுத்தும் விடயமாகும். இவர்களை நெறிப்படுததிய பொறுப்பாசிரியர், அதிபர், ஏனைய ஆசிரியர்கள் பாரட்டப்படவேண்டியவர்கள்.

இத்துறை மாணவர்கள் தம்முடைய அயராத ஊக்கத்தினாலும், உழைப்பாலும் கூட்டுப் பொறுப்பாலும் துரிதமுடன் செய்றபடுவதன் விளைவாக மத்திய வணிகம் என்னும் மலரினை வெளியீடு செய்கின்றனர். இவ் ஐந்தாவது மலர் பர்வேறு வழிகளிலும் சிறப்புற்ற மாணவர்களுக்கு பெரும் வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என நல்லாசி கூறுகின்றேன்.

**சுந்தரம் திவகலால்**
வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விச்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை வேந்தரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வர்த்தக மன்றம் மத்திய வணிகம் என்னும் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த இரு தசாப்தங்களாக, துரிதமாக வளர்ந்து வரும் கற்கைநெறிகளுள் வர்த்தகக் கல்வியும் ஒன்றாகும். இன்றைய சமூகப் பொருளாதார மாற்றங்களினால், இக் கற்கை நெறி சர்வதேச ரீதியில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதனை அன்று உணர்ந்த காலஞ்சென்ற வர்த்தக ஆசிரியர் கலைப்புலவர் நவரட்ணம் அவர்கள் தீர்க்கதரிசனத்துடன் செயற்பட்டதனால் இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வர்த்தகக் கல்வியில் ஒரு முன்னணிக் கல்லூரியாகத் திகழ்கின்றது.

வர்த்தகக் கல்விக்குத் தேவையான நூல்கள் தமிழ் மொழியில் போதியளவு இல்லாத நிலையில், வளர்ந்து வரும வர்த்தகத்துறை, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம பற்றிப் புதிய பல கருத்துக்களையும் தகவல்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ள இத்தகைய சஞ்சிகைகள் வெளிவருவது அவசியமாகும். மேலும் மாணவர்க்ள தமது எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளவும் இவை வழிகோலுகின்றன.

எனவே, காலமாற்றத்திற்கேற்ப, கருத்துச் செறிவுள்ள மாணவர் ஆக்கங்களைத் தாங்கி 'மத்திய வணிகம்' தொடர்ந்தும வெளிவர என் வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் பொ.** பாலசுந்தரம்பிள்ளை
யாழ் பல்கலைக்கழக
துணைவேந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத் துறைத் தலைவரின் ஆசிச் செய்தி

நவீன உலகில் புகழ்பெற்று வருகின்ற ஒரு துறையாக வணிகத் துறை மாற்றம் பெற்றுள்ளது. நகரத்தொழில் வாய்ப்புக்களை வழங்குவதிலே அதற்கு ஒப்பாக எத்துறையும் விளங்காத காரணத்தால் மாணவர்களை ஈர்ப்பதிலே முதன்மை பெறுமத் துறையா கவணிகத்துறை காணப்படுகின்றது. இவ்வாறு பெருகிவரும் மாணவர்களது அறிவுப்பசியைப் போக்கவதற்கு தமிழில் போதுமான நூல்கள் இல்லை என்பதால் அவற்றுக்கு பதில் சஞ்சிகைகளின் உதவியை மாணவர்கள் பெரிதும் நாடுகின்றனர். அத்தகைய மாணவர்களது தேவையைப்பூர்த்தி செய்யும் புகழ்மிக்க கஞ்சிகையே மத்திய வணிகம் என்பதாகும்.

இலங்கையில் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான யாழ் மத்திய கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும் மத்திய வணிகம் மாணவர்களிடையே பிரபல்யமான ஒரு சஞ்சிகையாகும். இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களதும் மாணவர்களதும் பயனுள்ள கட்டுரைகள்அடங்கியுள்ளன. வியாபாரக்கல்வி, கணக்கியல், பொருளியல், வணிகப்புள்ளிவிபரவியல் போன்ற பிரதான பாடங்களுக்கான கட்டுரைகள்இதில் அடங்கியிருப்பது இதன் பெருமைக்கு காரணமாகின்றது.

வருடாவருடம் வெளிவரும் மத்திய வணிகம் இவ்வாண்டு மேலும் மெருகுடன் வெளிவருகின்றது. இந்த சஞ்சிகை எதிர்வரும ஆண்டுகளிலும் காலம் தப்பாது ஆண்டு தோறும் வெளிவர வேண்டும் என்ற எனது ஆவலை வெளியிடுவதுடன், அவர்களது முன்னேற்றத்தக்கு இறைவனது ஆசியையும் வேண்டிக்கொள்கின்றேன்.

**க. தேவராஜா**
**தலைவர்**
வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்றக் காப்பாளரின்
# அன்பு கனிந்த ஆசிகள்

உலகை ஒரு நொடியில் குறுகவைக்கும் உயர் தொடர்ப சாதனங்களும் உலகே என் உருவில் உள்ளடங்கும் என உரைக்கும வலைப்பின்னல் தொலைநுட்பமும் வளர்ந்து நிறைந்து நிற்கும வர்த்தகத் துறையில் கல்வி கற்கும் என் அருமை மாணவச் செல்வங்கள் தம் அயராத உழைப்பினாலும் தேடிக்கற்கும் திறன்களின் ஊடே தம் உழைப்பர் உயர்ந்து நிற்கின்றனர்.

பல்வேறு இன்னல்களிற்கு மத்தியிலும் மாணவர்களின் அரும் பெரும் முயற்சியினால் மத்திய வணிகம் மலர் ஐந்து வெளிவருவது மிகவும் போற்றவதற்கு உரியதாகும். குழு உணர்வுடனும், கூட்டுப் பொறுப்புடனும் தம் ஆளுமையை வெளிப்படுத்தி உள்ளனர். இம் மலர் விரியும் போது சிந்தைக்கு விருந்தாகவும் உள்ளத்துக்கு உவகையாகவும் அறிவிற்கு அகல் விளக்காகவும் ஆற்றலிற்கு வெளிப்பாடாகவும் விளங்கும்.

கல்வி சமூகம் வணிகர் சமூகமும் மாணவர் தம் ஆக்கத்திற்கு என்றும் உரம் கொடுத்து உறுதுணையாய் செயற்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மாணவர் தம் பணி சிறப்புற்று வளம் பெறவும வர்த்தக மாணவர் மன்றம தொடர்ந்து தம் பணி செழிப்புடன் ஆற்றவும ஆனைமுகன் பாதம் பணிந்து வாழ்த்துகிறேன்.

"மத்தியின் வணிகத் துறையது மிளிர
நித்தமும் உழைக்கும்மன்றம் !"

சு, நடராஜா
மன்றக் காப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவரின் பார்வையிலிருந்து . . . . . .

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தோட்டத்திலே சிறப்புற வளர்ந்து நிற்கும் வர்த்தகச் செடியில் மலருகின்ற "மத்திய வணிகம் மலர் 5" மலருவதையிட்டு பெரிதும் உவகையடைகின்றேன். வர்த்தகம் செடிக்கு நீர் ஊற்றி அதை வளர்த் தேடுப்பதில் அரும்பாடுபட்ட ஆசான்களை இன்று நினைவுகூறுவது எனது தலையாய கடமையாகும்.

இன்று வர்த்தகமென்றால் உலகமே வியக்கும் அளவுக்கு உலகளாவிய ரீதியில் உதவி வருகின்றது. இங்கிலாந்திலிருக்கும் ஒருவருக்கும் இன்ரெநற் மூலம் நொடிப்பொழுதில் செய்தி அனுப்புகிற அளவுக்கு வர்த்தகம் வளர்ந்துள்ளது என்றால் மிகையாகாது.

இன்று உங்கள் கையிலே தவழ்கின்ற "மத்திய வணிகம் மலர் 5" எமது அயராத உழைப்பாலும் விடா முயற்சியாலும் தனி வைராக்கியத்தாலும் உருவான ஒன்றாகும். எமது ஊக்கத்துக்கு ஆர்வமளித்த அதிபர், ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

ஏனெனில்,

"தனி ஒரு மாணவன் சாதிக்க வேண்டியது ஏராளம் இருக்கிறது
நாளை அல்ல இன்றே உனது நாள்"

என்ற பொன் மொழிக்கு இணங்க உருவான ஒரு மலரினை உங்களுடைய கையில் கையளிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

"வர்த்தக துறையது மிளிர என் நல்லாசிகள்"

**CENTRAL'S FLAG MUST NE'ER BE LOWERED**

நன்றி !

இ. றிச்சார்ட் லெபனான்
தலைவர்
வர்த்தக மாணவ மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செயலாளரின் செயற்பாட்டில் இருந்து . . . .

மத்திய வணிகம் மலர் 5 மாண்புறு தோற்றத்தை பார்த்து மகிழும் உங்கள் அனைவருக்கும் அன்புடன் செயலர் நான் அளிக்கும் செய்திகள் பல.

முன்முகப்பு அட்டையில் உலகையே உருவகித்துள்ளோம். ஒரு நொடிப்பொழுதில் ஒற்றை விரலில் நீங்கள் காணும் உலக தோற்றமது உற்று நோக்குங்கள். உங்கள் சிந்தனையை ஒரு நிமிடம் நிறுத்தி பாருங்கள். ஒற்றை அழுத்தியில் உலக சுழற்சியை காட்டுகின்றது. இன்ரநெட்டால் சூழப்பட்ட உலகத்தில் நடக்கும் விஞ்ஞானத்தின் விந்தைகளை கண்டு கொள்ளலாம். தொடர்பாடலின் மூலம் உலக செயற்பாடுகளை தொடர்புபடுத்தும் தொலைதொடர்பு சாதனங்களை தொலைக் காட்சிகளை செய்மதி மூலம் தொடர்புகளை ஏற்படுத்தும் செய்திகளை கண்டு கொள்ளலாம். நுட்பம் நிறைந்த போக்குவரத்து சாதனங்களை மின்னல் வேகத்தில் தரையிலும் வானிலும் தரித்து நிற்காது செல்லும் ஊர்திகளை காண்பீர்கள். மக்கள் பெருக்கத்தின் உந்தலால் விளைந்த உயர்மாடி கட்டிடங்களும தொழில் நிறுவனங்களையும் காண்கிறீர்கள். யந்திர மனிதர் மூலம் அறுவைச் சிகிச்சை கூட நிகழ்த்த முடியும் என்பதனை எடுத்துக் காட்டும் றோபோவும் வர்த்தகத்தின் உண்மைத் தன்மையை உணர்த்தி நிற்கும் அளவீட்டு பொறிகளும் அட்டையை அலங்கிக்கின்றன.

உலகில் காணும் நுட்பங்கள் யாவற்றையும் நுண்ணியமாக எடுத்துக் காட்டும் தொலை நோக்கியுடன் இணைந்து நிழல் பட காட்டியும் திரையில் காணும் நுட்பங்களை எடுத்து இயம்பும் வரைபுகளும் நினைத்த இடத்தில் நினைத்தவருடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலை தொடர்பு சாதனம் இன்னும் பல்வேறுபட்ட விபரிக்க முடியாத சிந்தனையின் வெளிப்பாடுகளையும் பல்வேறு நுட்பங்களையும் நுணுக்கமாய் காட்டி நிற்கிறது மத்திய வணிகத்தின் அட்டைப் படம்.

நன்றி !

செல்வன் சா.சுதர்சன்
செயலாளர்
வர்த்தக மாணவர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியரின் இதயத்திலிருந்து !

வணிகத்துறை வளர்ச்சி பல்வேறு முகங்களாய் பல்லாயிரம் பிரிவுகளாய் பரந்து வருகின்றது. இக்காலகட்டத்தில் இவ்வளர்ச்சியின் பேறாய் பல உயர்வான நூல்கள் தோன்றிட வேண்டும் எம்மண்ணில்.

இந்தப பேரவாவின் வெளிப்பாடாகத்தான் எம்மன்றத்தின் மத்திய வணிகம வெளிவருகின்றது. இம் மலர் 5ல் விரிவுரையாளர்கள் ஆக்கிய சிறந்த ஆக்கங்களும், எமது கல்லூரி ஆசிரியர்களின் ஆக்கங்களும பழைய மாணவர்களுடைய ஆக்கங்களும் மாணவர்களாகியநாம் தேடிப் பெற்ற சிறந்த கட்டுரைகளும் உள்ளடங்கும்.

இம் மலரில் ஒவ்வொரு இதழ்களையும் ஒவ்வொன்றாக நுகரின் அதில் இருந்து பெறும் அறிவால் உங்கள் மனம் இன்புற வேண்டும் என்பது தான் எமது விருப்பம். இந் நூல் மத்தியத் தாயின் மாணவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் வெளிப்பாடாகவே இது வெளிவருகின்றது. இம்மலரின் வாசனை தொடர்ந்து தன் அறிவாகிய வாகனையை வீசும் என்றும் இம் மலர் உங்கள் கைகளில் தவழ விடுகின்றோம். அவற்றில் காணப்படும் சிறப்புக்களையும் அறிவுக் கருத்துக்களையம் உணர்ந்து பயனடைவீர்கள் என எண்ணுகின்றேன். எமது சிறு முயற்சி பெரு வெளியீடாக வருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அத்தனை மாணவர்களுக்கும் இம் மலர் உரித்துடையதாகும்.

"LIVE IN SERVICE GLAD AND FREE"

இ.றணேசன்
இதழாசிரியர்
வர்த்தக மாணவர் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழாக் கண்ட வர்த்தகத் துறை

1920 – 1998, 78 ஆண்டுகள் கடந்து விட்டன. மனித வாழ்வில் 78 ஆண்டுகள் என்பது பெரும் பாய்ச்சல்களாகும். அன்று மத்திய கல்லூரியில் ஏற்றி வைத்த வர்த்தக தீபம இன்று யாழ்ப்பாணம் முழுவதும் அகல் விளக்காக காட்சி தருகின்றது. அறிவொளி பரப்பும் பல்கலைக்கழகத்திலும் முதன்மைத் துறையாக விளங்குகின்றது. வெட்டுப் புள்ளியிலும் உயரிடம் பெற்றுக்கொண்டமை வர்த்தக கல்வியின் உயர் நிலையை காட்டுகின்றது.

1920ம் ஆண்டில் எமது கல்லூரி அதிபராக இருந்த அருட் சகோதரர் புள்டோஷனால் வர்த்தக கல்வி ஆரம்பிக்கப்பட்டது. இத் துறைக்குப் பொறுப்பாக வர்த்தக ஆசிரியர் கலைப்புலவர் நவரத்தினம் [F.C.I.(Birm), F.C.T.S. (Inc), CommercialTeachers' Diploma] நியமிக்கப்பட்டார். வர்த்தக துறையின்தந்தையாக இருந்து செயற்பட்ட அவருடைய தன்னலமற்ற சேவை இன்று வர்த்தக துறையின் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கியது. அவரிடம் கற்ற நல்மாணவர்கள் பலர் இன்று ஆற்றும் பல்வேறு பணிகளும இதற்கு கான்றாகும். அவரைத்தொடர்ந்து பல ஆசிரியர்கள் இத்துறையில் ஆசான்களாகவும தந்தைகளாகவும் இருந்து வழிகாட்டி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார்கள். அவர்களின் சேவைகளே இன்றைய வர்த்தக துறை வளர்ச்சிக்கு படிக்கற்களாகும்.

ஆரம்ப காலத்தில் வர்த்தகப்பிரிவுக்கென கல்லூரிக்கட்டிடத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது.ஆரம்ப காலத்தில் ஆங்கில மொழியிலேயே வர்த்தகப்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. லண்டன் வர்த்தக கழகம இலங்கை வர்த்தக கழக பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்றினார்கள். இப் பரீட்சைகள இலங்கையில் நிறுத்தப்பட்டதும் இலங்கை சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரப்பரீட்சைக்கு வர்த்தக மாணவர்களும் தோற்றினார்கள். பின்னர் க.பொ.த. சாதாரண பரீட்சை நடைமுறைக்கு வந்ததும் அப்பரீட்சைக்கு வர்த்தக மாணவர்கள் தோற்றினார்கள்.

கலைப் புலவர் திரு. கே. நவரட்ணம் முப்பத்தெட்டு ஆண்டுகளை அதாவது ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தெட்டுவரை வர்த்தகவியற் பாடங்களை சிறந்த முறையில் கற்பித்து இத்துறையில் பெரும் பணியாற்றியமையினால் வர்த்தகக்கல்வியின்பிதாவாகப்போற்றப்படுகின்றனார். ஆரம்ப காலத்தில் அவருடைய மாணவர்களாக இருந்தோர் கணக்காளர்களாகவும், சுருக்கெழுத்தாளர்களாகவும் திகழ்கிறார்கள. திறமைச்சித்தி அடைந்தோரில் திரு.எ.நமசிவாயம், திரு. நடராஜா, திரு.கே.குமாரவேலு ஆகியோர் பெருமைப்படக்கூடிய பழைய மாணவர்களாவர். கலைப்புலவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இன்றும் உயர்பதவிகளிலே இருப்பதையிட்டு பெருமைப்படுகின்றோம். அவரிடம கல்வி பயின்று இல்ணடன் வர்த்தகப்பட்டப் பரீட்சையில் முதல் முலில் சித்தியடைந்தவர் திரு.எ.நமசிவாயம் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் வர்த்தகப்பாடநூல்கள் தமிழில் இல்லாமையால் கலைப் புலவர் அவர்கள் ஆரம்ப கணக்குப்பதிவியல், உயர்தராதர கணக்குப்பதிவியல், அரம்ப வணிகம், இக்கால வாணிபம ஆகிய நூல்களை தமிழில் எழுதி வெளியிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு உதவினார். அவருடைய நூல்கள்இன்றும் பாவனையில் இருப்பதைதயிட்டு பெருமையடைகின்றோம். கலைப் புலவர் வர்த்தக கலை ஆசிரியராக மட்டுமன்றி மாணவர்களுக்கு சமய, சமூக, கலாச்சார ஆசானாகவும் இருந்து வழி நடத்தினார். அவருடைய அரும்பணியை இன்றும நினைவு கூர்வோமாக.

1956 ல் கல்லூரிப்பழைய மாணவனான திரு.கை. கந்தசாமி வர்த்தகப்பாட உதவியாசிரியராக நியமிக்கப்பட்டார். 1958ல் கலைப் புலவர் திரு. கே. நவரட்ணம 38 வருடகால சேவையை பூர்த்தி செய்து மத்திய கல்லூரியின முதலாவது வர்த்தக ஆசானாக இணைந்து கொண்டார். 1960 ஆடி திரு. எஸ்.டி. ஜெயசிங்கம் யாழ் தொழீல்நுட்பக்கலலூரியின் சிரேஷ்ட விரிவுரையாளராக பதவியேற்றார். அந்நாட்கள் திரு.இ.ரி. இராஜரட்ணம விசேட பயிற்சி பெற்றவர் கணக்குப் பதிவியல் ஆசிரியராகவும் திரு. என்.எஸ்.இரத்தினசிங்கம் திரு.எஸ்.எக்ஸ்.அல்போன்ஸ்சும் ஆரம்ப வணிகத்தை சிறிது காலம் கற்பித்தனர். 1964 ல் திரு. கே. கந்தசாமி பலாலி ஆசிரிய கலாசாலைக்கு வர்த்தகப்ப யிற்சிக்காக செல்ல திரு.என். பாலசிங்கம இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரி உயர் வணிக தராதரத்துடன் வர்த்தக ஆசிரியராக இணைந்து கொண்டார். 1967ல் திரு. கே. கந்தசாமி ஆசிரியப்ப யிற்சியை பூர்த்தி செய்து விஷேட பயிற்சி பெற்ற வர்த்தக ஆசிரியராக மீண்டும் இணைந்து கொண்டார். 1968 ல் வ.க. பாலசுப்பிரமணியம் விசேட பயிற்சி பெற்ற வர்த்தக ஆசிரியராக மத்திய கலலூரியில் இணைந்து கொண்டார்.

இக் காலப்பகுதியில் கல்வித் திணைக்களத்தால் வர்த்தகக்கல்விக்கு வேண்டிய தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. குறிப்பாக தமிழ் தட்டச்சுப்பொறிகளும பெறப்பட்டன. 1969ல் சுருக்கெழுத்து தட்டெழுத்து கற்பிப்பதற்கென தனிப்பட்ட அறைகளும கட்டப்பட்டது. பகுதிநேர வர்த்தக ஆசிரியராக க.பொ.த. உயர்தர வகுப்பில் வர்த்தகம் கற்பிப்பதற்கென திரு.சி.ஒ.வி.கே. முதலியார் (B.Com.) நியமிக்கப்பட்டார். 1969ல் பண்டாரவளைக்கு ஆடி மாதத்தில் நியமனம பெற்றுச் சென்றார். அதன் பின்திரு. ஆர். இலங்காதுரை (B.Com) க.பொ.த. உயர்தர வகுப்பு வர்த்தக ஆசிரியராக பதவியேற்றார். 1969 ல் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் திருப்திகரமான பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றன. முதன் முதலாக 1969 சித்திரையில் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் திரு.எஸ்குகனேந்திரன், கே.சிவராஜா ஆகிய இரு மாணவர்கள் திறமையான பெறுபேறுகளைப் பெற்று கனிஸ்ட பல்கலைக்கழகம் பலாலிக்கு உயர்கல்விக்காகச் சென்றனர். 1970 ல் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய பி.பேபின், என் முகமட் அலி வர்த்தகத்தில் விசேட சித்தியும் கணக்கியலில் திறமைச் சித்தியும பெற்றனர். எம்.சபுறுடீன் வர்த்தகத்தில் விசேட சித்தியும், தமிழ் மொழியில் திறமைச் சித்தியும் ஐந்து பேர் மூன்று பாடங்களில் சித்தியும் பெற்றனர். 1969ல் இராணியின் சாரணதாக தெரிவு செய்யப்பட்ட நான்கு பேரும் வர்த்தகத்துறை மாணவர்கள் என்பதில் பெருமை கொள்கின்றோம்.

1969 புரட்டாதி 28ம் திகதி அன்றைய அதிபர் திரு. இ.சபாலிங்கத்தால் வர்த்தக மாணவர்மன்றம அங்குராப்பணம் செய்யப்பட்டது. திரு.கே. கந்தசாமி உப போசகராக நியமிக்கப்பட்டார். 1970ம் ஆண்டு (ஒக்டோபரில்) ஐப்பசியில் வர்த்தகத்துறையின் ஐம்பதாண்டு நிறைவை பொன் விழாவாக வர்த்தக மாணவர் மன்றத்தினர் கொண்டாடினர். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கலாநிதி எஸ்.எஸ்.டி சில்வாவும் சிறப்பு விருந்தினராக சி.ஏ.எம். செக்குலாவேலவும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகத்துறையின் ஆரம்பகர்த்தாவகிய கலைப்புலவர்திரு.கே. நவரத்தினம அவர்களின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. இவ்விழாவிற்கென மேற்கொள்ளப்பட்ட பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படடனர்.

1971 தை மாதத்தில் உயர் பணிக தராதரப்பத்திரமும் விசேட பயிற்சியும் பெற்ற செல்வி பொ.செல்லையா யாழ் மத்திய கல்லூரியில் வர்த்தக ஆசிரியராக கடமையேற்றார். வணிக மாணவ மன்றத்தின துணைக் காப்பாளராகவும சேவையாற்றினார். 1972ல் திரு கிருபாநத்தன் (B.Com), திரு.ஆர்.ஏ,திலகரட்ணம்(B.Com), திரு. நாகராஜா(B.Com) ஆகியோர் வர்த்தக பகுதி ஆசிரியராக பதவியேற்றனர். திரு.கிருபானந்தன் யாழ் தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளராகச் செல்ல 1975 ல் திரு. ஆ.சபாநாயகம் வர்த்தக ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1978 ல் திரு. ஆ.சுபாநாயகம்? சோமஸ்கந்தாவிற்கும் திரு.ஏ.திரகரட்ணம் சம்பத்தாசியார் கல்லூரிக்கும் மாற்றலாகிச் சென்றனர். 1979ல் திரு.எஸ். உலகநாதன் (B.Com) எமது கல்லூரியில் வர்த்தக ஆசிரியராக குறுகிய காலம சேவையாற்றினார்.

1975 புரட்டாதி 17ம் திகதி பாடசாலை வங்கியொன்று தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக்கிளை முகாமையாளரின் ஒத்துழைப்புடன் வடமாநிலக் கல்வி அதிபதி மஜித் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இவ்வங்கி மூலம் சிக்கனம், சேமிப்பு ஆகிய பழக்கங்களையும் நிதிப்புழக்கம் தலைமைத்துவம், பொறுப்புணர்ச்சி ஆகிய பண்புகளையும மாணவர்களிற்கு பயிற்சியளிக்கக்கூடியதாக இருந்தது. திரு. வ.க. பாலசுபபிரமணியம் ஆசிரியரின் மேற்பார்வையில் இவ்வங்கி செயற்படுத்தப்பட்டது. இவ்வங்கி மாணவர்களிடம் சேமிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. 1981 ல் திரு. வ.க. பாலசுப்பிரமணியம கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்க மாற்றலாகிச் செல்ல பாடசாலை வங்கியின் மேற்பார்வையாளராக செல்வி பொ.செல்லையா கடமையாற்றினார். 1980 ல் திரு.என். சாம்பசிவம் (B.Dev. Studies (Hons.) விசேட வர்த்தகப் பயிற்சி பெற்ற ஆசிரியராக இணைந்து கொண்டார். இவ் வர்த்தக மாணவ மன்ற பொறுப்பாசிரியராகக் கடமையாற்றி 1989ல் வெளிநாடு சென்றார். 1984ல் திரு. கே.கந்தசாமி மத்திய கல்லூரியின் உப அதிபராக நியமிக்கப்பட்டார்.

1988 ல் திரு. சு. நடராஜா(B.Com Hons) வர்த்தகப்பகுதி ஆசிரியராக கடமையேற்றார். 1989 ல் திரு. கே. நாகேந்திம், செல்வி க. இராமலிங்கம் (B.Com) எமது கல்லூரியின் வர்த்தக ஆசிரியர்களாக இணைநது கொண்டனர்.

பொறுப்பாசிரியர் திரு. சு. நடராஜாவின் விடாமுயற்சியினாலும் அயராத உழைப்பினாலும் வர்த்தக மாணவ மன்றம் துரித வளர்ச்சியடையத் தொடங்கியது. 1989 பங்குனி மாதததில் இம்மன்றம் தமக்கென தனியான யாப்பொன்றினை உருவாக்கி, ஒருங்குடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படத் தொடங்கியத. 1989 மே மாதம் இம்மன்றம் இலட்சினை ஒன்றை ஒருவாக்கிக்கொண்டதுடன் தனக்கென தனியான நூல் நிலையத்தையும் ஆரம்பித்தது. இம்மன்றத்தின் மாணவர்கள் மன்றத்திற்காகவும கல்லூரிக்காகவும பல்வேறு செயற்பாடுகளையாற்றி பெரும்புகழ் ஈட்டிக் கொண்டனர். 1990ம் ஆண்டில் மத்திய வணிகம் என்னும் வர்த்தக மலரை வெளியிட்டு தமது மன்றத்தின் செயற்பாட்டை மிகச்சிறந்ததாக்கிக் கொண்டனர். 1991 ல் இடம் பெயர்ந்த மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு விதமான உதவிகளையும் நன்கொடைகளையும் வழங்கி யாழ்ப்பாண மக்களிடையா நற்பெயரை பெற்றுக் கொண்டனர். பாடசாலை மட்டத்தில் பட்டிமன்றங்கள், கவியரங்ககுள், விவாதமேடைகள், கலந்துரையாடில்கள், கட்டுரைப்போட்டிகள் ஆகியவற்றை மிகச்சிறப்பாக நடத்தினர். 1992 யாழ் கோட்ட மட்ட கட்டுரைப் போட்டியை நடாத்தி அதில் வெற்றி பெற்றவர்களிற்று வர்த்தகக் கிண்ணங்களையும், சான்றிதழ்களையும் வழங்கி வர்த்தக மாணவ மன்ற ஒன்றுகூடல் நிகழ்வினையும்சிறப்பாகக்கொண்டாடினர். 1993 ல் மத்திய வணிக மலர் 2 வெளியீடு செய்யப்பட்டது. இம்மன்றத்தின் வளர்ச்சி மேம்மேலும் சிறப்புற்று வருகின்றது. 24.05.91 இல் எமது கலலூரியில் கூட்டுறவுச்சங்கம (வரைவுற்றது) வடமாநில கல்விப்ப ணிப்பாளர் இரா.சுந்தரலிங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் மாணவர்களின் கல்வி சார் கற்றல் சாதனங்களும் முத்திரைக்கான பொருட்களும் கூட்டுறவு சங்கம மூலம் வழங்கப்பட்டது. கல்வி செயற்பாடுகளிலும் மாணவர்களின் பெறுபேறுகள் 1990ம் ஆண்டின் பின்னர் அதிகரித்து வந்தது. உதாரணமாக 1992ம ஆண்டு ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற செல்வன் க.கிருஷ்ணகுமார் 4A பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டார். 1993ம் ஆண்டு செல்வன் டின் ராஜ்குமார் 300 புள்ளிகளிற்கு மேல் பெற்றுக் கொண்டார்.

1993ம் ஆண்டு வர்த்தகத்துறைக்கென ஓர் ஆய்வுகூடமும் நூலகமும் யாழ்ப்பான பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் திரு கந்தையா தேவராஜா அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது. இவ்வாய்வு கூடத்தில் மறைந்த கலைப்புலவர் நவரட்ணம் உப-அதிபர் கைலாசபிள்ளை கந்தசாமி ஆகியோரின் திருவுருவப்படங்களை கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.கோ.சி.வேலாயுதம் அவர்களும் வணிகத்துறை தலைவரும்திரைநீக்கம செய்தனர். காலம் செய்த கோலத்தினால்இன்று அவை உருக்குலைந்த நிலையில் வேறு செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்படுகின்றது.

1996ம்ஆண்டு மாணவர்கள் செல்வன் சி.கஜேந்திரன் 4A பெறுபேற்றைப்ப ெற்றதுடன் அகில இலங்கையில் இரண்டாவது இடத்தையும் யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டார். இவருடன் செல்வன் சா.தயாளன் செல்வன் மா.காண்டீபன் 4A பெறுபேற்றை பெற்றதுடன்மாவட்டத்தில் 3ம் 4ம் இடங்களை பெற்றுக் கொண்டனர். செல்வன் தி. நடனசபேசன் 3A, B பெறுபேற்றை பெற்றுக் கொண்டதன் மூலம் எமது வர்த்தகத்துறைக்கும் பாடசாலைக்கும பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தனர். இவர்களது செயற்பாடுகளும இவர்களின் வளர்ச்சிக்காக நித்தமும் உழைக்கும்மன்றத்தினதும் செயற்பாடுகள் என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவை. மேலும் வர்த்தகத்துறையும் வர்த்தக மன்றமும் சிறப்புடன் வளர்ச்சியடைய ஒற்றுமையாய்மாணவர்கள் எல்லோரும் செயற்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**த. சுரேஷ்குமார்**
2000 வர்த்தகப் பிரிவு மாணவன்

ஆதாரம்
50வது ஆண்டு பொன்விழா மலர்
75 ஆவது ஆண்டு பவள விழா மலர்
(வர்த்தக மாணவர் மன்றனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வணிகம் நான்காவது மலரினை வெளியீடு செய்வதற்கு பிரதம சிறப்பு விருந்தினராக வருகை தந்தவர்கள்




முன்னாள் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா
முன்னாள் வர்த்தக ஆசிரியை செல்வி பொன்.செல்லையா

எமது மன்றத்தின் வருடாந்த செயற்பாடுகளில் ஒன்றான
கற்கை நெறி தொடர் கருத்தரங்கில்



யாழ் பல்கலைக்கழக வணிகவியல் துறைத் தலைவர் திரு.க.தேவராசா விரிவுரையாளர்
திரு. ரி. வேல்நம்பி மன்றத் தலைவர் செல்வன் டி. றிச்சாட் லெபணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற (4A) மாணவர்களுக்கு
தங்கப் பதக்கம் அணிவிக்க வந்த பிரதம சிறப்பு விருந்தினர்கள்



மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.கந்தசாமி வலயம் 2 இன்
கல்விப் பணிப்பாளர் திரு. எஸ்.சிவராசா

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற (4A, 3A,B)
மாணவர்களும் அதிபரும் மன்றக் காப்பாளரும்



செல்வன் தி. நடனசபேசம் செல்வன் சா. தயாளன் செல்வன் ம. காண்டீபன்
திரு. கே. இராசதுரை (அதிபர்) சு. நடராசா (மன்ற காப்பாளர்) செல்வன் ஸ்ரீ கஜேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பணி ஆற்றிய ஆசிரியர்

சமூகத்திலே சாதாரண தரத்திலிருந்து உயர் தரத்திற்கு போகும் மாணவர்களை நான்கு துறைகள் வரவேற்கின்றன. இவ்வாறான துறைகளில் இன்று முக்கியத்துவம் வகிப்பது வணிகத்துறையேயாகும். இவ்வணிகத் துறைக்கு அடியெடுத்து வைக்கும் எமது மாணவர்களிற்கு அத்திவாரம் இட்டவர் எமது ஆசிரியர் திரு நாகேந்திரம் ஆவார். ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சியில் மிகுவம் பெரும்பங்கு வகிப்பர்கள் ஆசிரியர்கள் ஆவார்கள். இவ்வாறு நோக்கின் எமது மாணவர்களின் வளர்ச்சிப்பாதையில் கற்பித்தல் வழியில் அனுபவமும் திறமையும் உடையவராக ஆசிரியர் திரு நாகேந்திரம் அவர்கள் காணப்படுகின்றார். மிகவும் பரந்த நோக்கில் காணப்படும் வணிகத் துறையில் கற்பதற்கு இலகுவாக சிறிய உதாரணங்கள் மூலம் மிகவும கருத்தாழம் மிக்கதாகவும் மாணவர மனத்தில் நீங்காது இடம் பிடிக்கத்கூடியவாறு வணிகக்கல்வியை புகட்டினார். இன்று யாழ் மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கும் க.பொ.த. உதயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் நன்றாக அமைவதற்கும் முக்கிய பங்காற்றினார். குறிப்பாக கணக்கீட்டுத்துறையை எடுத்து நோக்கினால் மாணவர்களிற்கு ஓர் கசப்பாக அமையும் பாடமாகும். இக் கசப்பீனை மாணவர்களுக்கு எவ்வாறு இனிப்பாக மாற்றி கொடுக்க முடியுமோ அவ்வாறு கொடுத்து அதனுடன் மாணவர்கள் மனதில் இலகுவாகப் பதியக்கூடியதாகவும மிகச் சிறப்பாக கற்பித்தார். அதன் மூலம கண்கீடு ஓர் இலகுவான பாடம் என்பதனை நிரூபித்து காட்டியுள்ளார். இவ்வாறு யாழ் மத்திய கல்லூரியின் வர்த்தகத் துறை வளர்ச்சிக்கு 1990 – 1995 வரை சேவையாற்றி வருகின்றார். தனது 33 வருட ஆசிரிய சேவையைப்பூர்த்தி செய்து 1997ம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். அவரது சேவை எல்லோர்க்கும போற்றுவதற்குரியதும் மறக்கமுடியாததும் ஆகும்.

பா. பிரதாப்
2000 வர்த்தகத்துறை மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SWOT ஆய்வு

**Mr. S. Raveendra , B.A.**
Assistant Manager, Commercial Bank, Jaffna.

## SWOT ஆய்வு என்றால் என்ன ?

ஒரு தனிநபரோ அல்லது ஒரு நிறுவனமோ ஒரு செயற்பாட்டை அல்லது செயற் திட்டத்தை முன்னெடுக்கும போது, அக்குறிப்பிட்ட செயற்பாட்டினது அல்லது செயற்திட்டத்தினது சிறப்பான செயற்பாட்டினையும், வெற்றியையும் கருத்தில் கொண்டு தந்திரோபாயத் திட்டமிடல் செய்முறையை (Strategic Planning Process) வகுக்கும் போது உள்ளக, வெளியக சூழல் (Internal & External) ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## உள்ளக சூழல் ஆய்வானது (Internal Environment Analysis)

செயற்திட்டத்தினதும் அதனைச் செயற்படுத்தும் நபர்களினது அல்லது நிறுவனத்தினது பலங்களையும (Strenths) பலவீனங்களையும் (Weaknesses) ஆய்வு செய்வதாக அமையும்.

இதன் மூலம் பலங்களை மூலதனமாக்கி உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும், பலவீனங்களை இனங்கண்டு அதனை இயன்றளவு குறைப்பதற்கான நடவடிக்கைகளையும மேற்கொள்ள முடியும்.

## வெளியக சூழல் ஆய்வானது (External Environment Analysis)

செயற் திட்டத்திற்கான சந்தர்ப்பங்கள் (Opportunity) அல்லது வாய்ப்புக்களையும அது எதிர்நோக்கக் கூடிய அச்சுறுத்தல்களையும் (Threats) ஆய்வு செய்வதாக அமையும். இதன் பெறுபேறாக சந்தர்ப்பங்களை நன்மையைப் பெறும் பொருட்டான வாய்ப்புக்களைப் பயன்படுத்தவும், அச்சுறுத்தல்களைத் தோற்கடிக்கச் செய்வதற்கான அல்லது வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறியவும் முடியும்.

ஆகவே **SWOT** ஆய்வு என்பது -

**S** treanths (பலங்கள்)
**W** eaknesses (பலவீனங்கள்)
**O** pportunities (சந்ர்ப்பங்கள்)
**T** hreats (அச்சுறுத்தல்கள்)
என்பவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் உபயோகங்களாவன (Uses)

உற்பத்திப் பொருள் இனங்காணல் (Product Identification) செயற்திட்டத்தினை இனங்காணல் (Project Identification) திறமைசார் ஆற்றல்களை இனங்காணல் (Competency Identification)

முயற்சியாளன் ஒருவன் உற்பத்திப் பொருள் அல்லது செயற்திட்டத்துக்கான **SWOT** ஆய்வினை மேற்கொள்கின்ற வேளையில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்க வேண்டும்.

1. நிதிசார் அம்சங்கள்
2. பௌதீக வளங்கள்
3. முகாமைத்துவமும் செயற்பாட்டாளர் இயலுமைகளும்
4. சந்தையும் உற்பத்திப் பொருளும்
5. மூலப் பொருட்களின் வழங்கல்
6. உற்பத்திச் செய்முறை
7. சமூகச் சூழல்

**SWOT** ஆய்வின் ஓரே பார்வையில் விளங்கிக் கொள்வதற்கான இலகுவான அமைப்பு வரைபடம் மறுபக்கத்தில். . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SWOT ஆய்வு அமைப்பு வரைபடம்

நேரான காரணிகள் | எதிர்மறையான காரணிகள்

தற்போது

| | | | |
|---|---|---|---|
| | பலங்கள் | பலவீனங்கள் | |
| முயற்சியாளரால் கட்டுப்படுத்தக் கூடியது | பின்வருவனவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது<br>- ஒழு ங்கமைத்தல், முகாமைத்துவ காரணிகள்<br>- சந்தைப்படுத்தற் காரணிகள்<br>- தொழில்நுட்பக் காரணிகள்<br>- நிதிக் காரணிகள் | | முயற்சியாளரால் கட்டுப்படுத்தக் கூடியது |
| உள்ளகச் சூழல் | (பயன்படுத்துவதற்கு) | (நீக்குவதற்கு) | உள்ளகச் சூழல் |
| வெளியகச் சூழல் | | | வெளியகச் சூழல் |
| முயற்சியாளனின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது | பின்வருவனவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது<br>- அரசியற் சூழல்<br>- பொருளாதாரச் சூழல்<br>- சமூக, கலாசாரச் சூழல்<br>- தொழில் நுட்பச்சூழல்<br>- குடியியற் சூழல் | | முயற்சியாளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது குடியியற் சூழல் |
| | (நன்மையைப் பெறும் பொருட்டு) | (தோற்கடிக்கும் பொருட்டு) | |
| | சந்தர்ப்பங்கள் | அச்சுறுத்தல்கள் | |

எதிர்காலத்தில்

நேரான காரணிகள் | எதிர்மறையான காரணிகள்

பலங்களும் பலவீனங்களும் உள்ளக, கட்டுப்படுத்தக்கூடிய சூழலைக் கருதும் வேளையில் சந்தர்ப்பங்களும் அச்சுறுத்தல்களும் வெளியக, கட்டுப்படுத்த முடியாக சூழலைக் கருதுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SWOT ஆய்வின் அலகுகள் (பகுதிகள்)

### பலங்கள்

பலங்கள் என்பவை முயற்சியாளரின் கட்டுப்பாட்டினுள் உள்ளவையும், தற்போது ஏற்படுபவையுமாகும். பலவீனங்கள் மறைந்து போவதற்கு பலங்கள் பயன்படுத்தப்பட்டு நன்மைகளின் பொருட்டு உள்ளடக்கப்பட வேண்டும்.

0 மலிவான மூலப்பொருட்கள்
0 ஒப்பீட்டுரீதியில் மலிவான விலை
0 தொழில்நுட்ப நிபுணத்துவம்
0 உற்பத்திப் பொருளின் புதிய முன்னேற்றங்கள்
0 வாடிக்கையாளர்களுடனான சிறந்த தொடர்பு வலைப்பின்னல் பங்கீட்டு முறைமை போன்றவை
0 சிறந்த பொதியிடல்
0 அதிசிறந்த தொழில்நுட்பம்
0 உற்பத்திப் பொருளின் இயல்புகள் போன்றவை.

### பலவீனங்கள்

பலவீனங்கள் என்பவை முயற்சியாளரின் கட்டுப்பாட்டினுள் உள்ளவையும தற்போது ஏற்படுத்தியவையுமாகும். அவை குறைந்த நிலையில் அல்லது காணப்படாமல் அல்லது பலவீனமான நிலையில் காணப்படும் அம்சங்களாகும். பலவீனங்கள் சாத்தியமான அளவுக்கு நீக்கப்பட வேண்டும்.

0 மூலப்பொருட்களின் கிடைப்பனவுத் தன்மை மீது எவ்வித கட்டுப்பாடு இன்மை.
0 தொழில்நுட்ப பழமையாதல்
0 அனுபவமற்ற முகாமையாளர்கள் - உரிமையாளர்கள்
0 தொழிற்படு மூலதனக் குறைவு
0 மேன்படுத்தலில் குறைவு
0 வரையறை செய்யப்பட்ட உற்பத்தி வாழ்க்கைக் காலம்
0 தாழ்ந்த உற்பத்திப் பொருள் வடிவமைப்பு
0 பலவீனமான விற்பனை முயற்சி
0 உற்பத்திப் பொருளின் உயர்ந்த விலை
0 உரிமையாளரின் தொழில்நுட்ப நிபுணத்துவமின்மை
0 மூலப்பொருட்களின் உயர்ந்தவிலை

### சந்தர்ப்பங்கள்

சந்தர்ப்பங்களென்பவை முயற்சியாளரின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அல்லது அவரது செயற்றிட்டக் கருத்தினை எதிர்காலத்தில் சாத்தியமாக்கக்கூடிய சூழலிலுள்ள நேரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சாதகமான காரணிகளாகும். எவ்வாறெனினும் அவை பெரும்பாலும் முயற்சியாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகும். இவை பலங்களிலிருந்து வேறுபட்டவை. பலங்கள் தொழிலின் நேரான உள்ளகக் காரணிகளாகும்.

0 சிறு அளவான, பலவீனமான போட்டியாளர்கள்
0 இலக்குச் சந்தையின் உயர்ந்து செல்லும் வருமானம்
0 வளர்ந்து செல்லும் கேள்வி
0 தொழில்நுட்ப உதவி கிடைக்கத்தக்கதாக இருத்தல்
0 கடன்கள் மீதான குறைந்த வட்டி
0 இது போன்ற பொருட்கள் சந்தையில் இல்லாமை
0 உள்ளூரில் பொருளுக்கான அருமைத் தன்மை
0 சாதகமான அரச கொள்கை
0 சாதகமான அரச நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னுரிமைகளும்

### அச்சுறுத்தல்கள்

அச்சுறுத்தல்களென்பவை சூழலில் காணப்படும் எதிர்மறையான அல்லது பாதகமான வெளியக் காரணிகள் என்பதுடன் முயற்சியாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகும். அவை நீக்கப்படாவிட்டால் அல்லது தோற்கடிக்கப்படாவிட்டால் தொழிலை பாதகமான முறையில் தாக்குகின்றன. அச்சுறுத்தல்கள் முயற்சியாளனின் கட்டுப்பாட்டுக்கு அப்பாறப்ட்டவை என்றவகையில் பலவீனங்களில் இருந்து வேறுபடுகின்றன. அச்சுறுத்தல்களை ஆய்வு செய்வதன் நோக்கம் அவற்றுக்கெதிராக எல்லைகளை ஏற்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுகொள்ளலாகும். அதாவது, அவற்றைத் தவிர்க்க முயற்சி செய்தல் அ ல்லது தடைசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்மறையான தாக்கத்தினைக் குறைத்தல்.

0 உயர்ந்து செல்லும் மூலப்பொருட் செலவு
0 அரசின் பணித்துறையாட்சி
0 மூலப்பொருட் பற்றாக்குறை
0 இயற்கை அழிவுகள்
0 இலஞ்சத்தின் செல்வாக்கு
0 மாறும் அரச விதிகள்
0 அதிகளவான போட்டி
0 ஓய்வற்ற ஊழியப்படை
0 திறனுள்ள ஊழியத்தை இழுத்தெடுக்கும் தன்மை
0 போதுமானளவு கிடைக்காத வலு
0 தாழ்நிலை உட்கட்டுமானம்
0 கள்ளக்கடத்தல்.
0 ஏனையவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ கோட்பாடுகளின் பரிணாம வளர்ச்சிக்கு கோட்பாட்டாளர்கள் செய்துள்ள பங்களிப்பு

(**செல்வன் எஸ். சுதர்சன்**, 1999 வர்த்தகப் பிரிவு, யாழ் மத்திய கல்லூரி)

மிகத் தொன்மையான காலத்திலிருந்தே உலகில் முகாமைத்துவ நுட்பங்கள் நடைமுறையில் இருந்ததற்கான சான்றாதாரங்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன. கிறிஸ்துவுக்கு முந்திய காலப்பகுதியில் இருந்ததாகச் சொல்லப்படும் மொகஞ்சதாரோ – ஹரப்பா போன்ற நாகரிகங்களில முகாமைத்துவக் கலையும் காணப்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. பல ஆண்டுகளிற்கு முன்னர் எகிப்திய பிரமிட்டுக்கள் நிருமாணிக்கப்பட்டபோது பல்வேறு முகாமைத்துவ நுட்பங்க்ள அங்கு பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன. எனினும் முகாமைத்துவம ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட துறையாக வளர்ச்சியடையத் தொடங்கியது கைத்தொழில் புரட்சியின் பின்னரே எனலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி பத்தொன்பதாம் நூற்றாண்டில் விரிவடைந்த கைத்தொழில் புரட்சி முகாமைத்துவக் கோட்பாடுகளின் விருத்திககு அடித்தளமிட்டது. பேரளவிலான உற்பத்திகள், பரந்தளவிலான விநியோகம், உயர் தரத்திலான தொழில்நுட்பம், அதிகளவான ஊழியர் படை போன்ற கைத்தொழில் புரச்சியின் விளைவுகள் காரணமாக பகுத்தறிவு ரீதியிலான முகாமைத்துவ அணுகுமுறைகள் எழ வேண்டியதாயிற்று. பல்வேறு முகாமைத்துவ அறிஞர்கள் பல ஆய்வுகளை நடத்தியும், தமது சொந்த அனுபவங்களைக்கொண்டும் முகாமைத்துவக் கோட்பாடுகளை உருவாக்கினர்.

## முகாமைத்துவ கோட்பாடு அல்லது எண்ணக்கரு

குறிப்பிட்ட குறிக்கோளினை அடைவதற்காக கிடைக்கத்தக்க வளங்களைத்திறமையாகப் பயன்படுத்துவதற்கு முகாமையாளர்களுக்கு வழிகாட்டுகின்ற தத்துவங்களையும் நடைமுறைகளையும் உள்ளடக்கியதே முகாமைத்துவ கோட்பாடு ஆகும். முகாமையாளர்கள் தமது பணிகளை திறம்பட நிறைவேற்ற இக்கோட்பாடுகள் மேற்கோள்களாக விளங்ககின்றன. குறிப்பிட்ட நிறுவனத்தைப்பற்றியும அங்கு பணிபுரியும் ஊழியர்களைப் பற்றியும், மற்றும் நிறுவனக் கட்டமைப்பில் உள்ளடக்கியுள்ள சிக்கலான அம்சங்களைப் பற்றியும் முழுமையான புரிந்துணர்விற்கு முகாமைத்துவக் கோட்பாடுகள் வழிவகுக்கின்றன. சுருங்கக் கூறுவதாயின் முகாமைக் கோட்பாடுகளின் புரிந்துணர்வின்றி முகாமையாளர்கள் செயற்படுகையில் எதிர்பார்த்த விளைவுகளை அவர்களால் அடைய முடியாது போகலாம்.

முகாமைத்துவக் கோட்பாடுகளின் வரலாற்றுக்கால விருத்தியும் வகைகளும், முகாமைத்துவக் கோட்பாடுகள் அவை எழுந்த காலப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வரலாற்றுக்கு முந்திய காலப்பகுதி
(Pre-Historic Period) 1890 ஆம் ஆண்டுக்கு முன்னர்

2. மரபு வழிக் கோட்பாடுகள் அல்லது பழமைக் கோட்பாடுகள்
(Classical Theories) 1890–1920 க்கு இடைப்பட்ட காலப்பகுதி

3. நடத்தையில் கோட்பாடுகள்
(Behavioural Theories) 1920 – 1934 க்கு இடைப்பட்ட காலப்பகுதி

4. நவீன கோட்பாடுகள்
( Modern Theories) 1934 இற்குப்பின்னரான காலப் பகுதி.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு காலப்பகுதியினுள்ளும் பல முகாமைத்துவ அறிஞர்கள் பல்வேறு கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். இவற்றுள் மிக முக்கியமான கோட்பாடுகள் கீழே ஆராயப்படுகின்றன. இக்கோட்பாடுகள் வரலாற்றின் வெவ்வேறு காலப் பகுதிகளில் உருவாகியிருந்தாலும் நடைமுறைப் பயன்பாட்டில் இவையாவும் ஒன்றிணைக்கப்பட்டவையாகவே உள்ளன.

**வரலாற்றுக்கு முந்நிய காலப் பகுதி**

இக்காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க கோட்பாடுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. எனினும் பெருமளவில் முகாமைத்துவ நுட்பங்கள் மீதான ஆய்வுகள் இடம்பெற்றன. இவ் ஆய்வுகளின் பயனாக எழுந்த கோட்பாடுகள் மரபு வழிக் கோட்பாடுகளாக பின்னர் கருதப்பட்டன. மேலும், திட்டமிடப்பட்ட ஆய்வுகளைப் பார்க்கிலும், தமது சொந்த அனுபவங்களை அடிப்படையாக வைத்தே பல அறிஞர்கள் முகாமைத்துவ எண்ணக்கருக்களையும் அணுகுமுறைகளையும் விளக்குவதற்கு முனைந்தனர்.

**மரபு வழிக் கோட்பாடுகள்**

1890–1920 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முகாமைத்துவ அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட கோட்பாடுகள் மரபுவழிக் கோட்பாடுகள் எனப்படுகின்றன. இவை பெரும்பாலும் நடைமுறை முகாமையாளர்களாக விளங்கிய அறிஞர்களது சொந்த அனுபவத்தைப் பிரதிபலிப்பதான அமைந்தன. சகல நிறுவனங்களையும முகாமை செய்யக்கூடிய சர்வ வியாபாரத்தன்மை பொருந்திய முகாமைத்துவ தத்துவங்கள் மற்றும் மற்றும் நடைமுறைகளை மரபுவழிக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. வினைத்திறன், இலாபம், செலவுக்குறைப்பு, தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி, விதிகள், கட்டுப்பாடுகள், நிதிகள் ஊக்குவிப்புக்கள் போன்ற அம்சங்களே மரபுவழிக் கோட்பாடுகளில் மேலாதிக்கம் செலுத்துகின்றன. ஒரு இறுக்கமான நிறுவனக் சூழலில் முகாமை செய்வதற்கான "ஒரு மிகச்சிறந்த வழி" யினைக் (One Best Way) கண்டுபிடிப்பதில் மரபுவழிக் கோட்பாட்டாளர்கள் முனைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழிக் கோட்பாடுகளாக பல கோட்பாடுகள் உள்ள போதிலும் பின்வரும் கோட்பாடுகளே முக்கியத்துவம பெற்று விளங்குகின்றன :

1. ஹென்றி பயோலினது நிருவாக முகாமைக் கோட்பாடு
Hentry Fayol's Administrative Management Theory

2. எவ்.டபிள்யு. ரெயிலரினது விஞ்ஞான முகாமைக் கோட்பாடு
F.W. Taylor's Scintific Management Theory

3. மக்ஸ் வெபரினது அதிகார அணுகு முறை அல்லது பணிந்துரையாட்சிக் கோட்பாடு
Max Weber's Bureaucratic Approach

## நிர்வாக முகாமைக் கோட்பாடு

இக் கோட்பாட்டை முன்வைத்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி பயோல் (1841 – 1925) முகாமைத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார். ஏனெனில் நிறுவனமொன்றை முகாமை செய்வதற்குரிய தத்துவங்களை முதன்முதலில் அறிமுகப்படுததியவர் இவராகும். நிலக்கரிச் சுரங்கமொன்றில் பொறியியலாளராகப் பணிபுரிந்த பயோல் 1916 இல் தனது அனுபவங்களை எல்லாம் ஒன்றுதிரட்டி " பொதுக் கைத்தொழில் முகாமை" (General Industrial Management) எனும் புத்தகத்தை வெளியிட்டார். முகாமைத்துவத்திற்கான வரைவிலக்கணத்தினை இதில் பயோல் அறிமுகப்படுத்தியதுடன் ஐந்து முகாமைத் தொழிற்பாடுகளையும் பதினான்கு முகாமைத் தத்துவங்களையும முன்வைத்தார். நிறுவனமொன்றில் இடம்பெறும் நடவடிக்கைகளை பயோல் பின்வருமாறு ஆறு பெரும் பிரிவுகளாக அடையாளம் கண்டார்.

1. தொழில்நுட்ப நடவடிக்கை (Technical Activity) பொருட்கள் சேவைகளின் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்டது.

2. வர்த்தக நடவடிக்கை (Commercial Activity) பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்துடன் சம்பந்தப்பட்டது.

3. நிதி நடவடிக்கை (Financial Activity) சிறப்பான மூலதனப் பயன்பாட்டுடன் தொடர்பு பட்டது.

4. கணக்கீட்டு நடவடிக்கை (Accounting Activity) வருமான செலவீடு, இலாபம் போன்றவற்றைக் கணிப்பதுடன் சம்பந்தப்பட்டது.

5. பாதுகாப்பு நடவடிக்கை (Security Activity) நிறுவன வளங்களைப்பாதுகாப்பதுடன் தொடர்புபட்டது.

6. முகாமைத்துவ நடவடிக்கை (Management Activity) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ நடவடிக்கையினுள் இடம்பெறுகின்ற ஐந்து அம்சங்களையும் பயோல் முகாமைத்துவத் தொழிற்பாடுகளாகக் கருதியதுடன் இவற்றின் அடிப்படையிலேயே முகாமையாளர்கள் செயற்படுகினற்னர் எனவும் கூறினார். மேலும் நிறுவனத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய பின்வரும் 14 முகாமைத்துவத் தத்துவங்களையும் பயோல் முன்வைத்தார்.

(1) தொழிற்பிரிப்பு, (2) அதிகாரம், (3) ஒழுக்கம் / கட்டுப்பாடு, (4) கட்டடளையிடல் ஒழுங்கு / ஏவல் ஒருமைப்பாடு, (5) ஒருங்கிணைந்த வழிநடத்தல் / வழிகாட்டல் ஒருமைப்பாடு, (6) பொது நலனார்வம், (7) ஊதியம், (8) மையப்படுத்தல் / ஒருமுகப்படுத்தல், (9) படிமுறை அதிகாரம் / முகாமை வரிசை, (10) ஒழுங்கு, (11) சமதன்மை / சரி ஒப்புரவு, (12) நிலையான பதவிக்காலம் / சேவைக்கால உறுதி, (13) முயற்சியில் முற்றுகை, (14) ஒற்றுமையே பலம் / குழுமமாகப் பணியாற்றல்.

பயோல் அறிமுகப்படுத்திய முகாமைத் தொழிற்பாடுகள் மற்றும் தத்துவங்களில் அநேகமானவை இன்னும் நிறுவனங்களில் பரவலாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதனாலேயே பயோல் முகாமைத்துவத்தின் தந்தை எனப்படுகின்றார்.

எனவே, மேலே குறிப்பிட்டதைப் போன்று முகாமைத்துவக் கோட்பாட்டாளர்கள் முகாமைத்துவ ஆய்வுகளை மட்டுமன்றி தமது சொந்த அனுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு முகாமைத்துவக் கோட்பாடுகளின் வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிப்பு செய்துள்ளனர்.

உசாத்துணை நூல்கள் : வீரகேசரி பத்திரிகை, தினகரன் பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழு

*(The Securities and Exchange Commission of Sri Lanka)*

**செல்வன் கு. விசாகேசசர்மா**, 1997 உயர்தர பழைய மாணவன்

இலங்கையில் இன்று பங்குச்சந்தையானது மிக வேகமாக வளர்ச்சியடைந்து இருப்பதுடன், ஆசியாவிலேயே ஓர் சிறந்த பங்குச்சந்தையாக கருதப்படுகின்றது. இந்த பங்குச் சந்தையின்முக்கியமான நிறுவனங்களில் ஒன்றே இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகும். இது 1987ம் ஆண்டின் 36ம் இலக்கச் சட்டத்தின் மூலம் பிணைகள் கவுன்ஸில் (Securities Council) உருவாக்கப்பட்டது. இது 1991ம் ஆண்டின் 26ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் மூலம் இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நோக்கங்களாவன, இலங்கையில் பிணைகள் சந்தையை ஒழுங்கு படுத்தல், பிணைகள்தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பங்குப்பரிமாற்று நிலையங்கள் (Stock Exchanges), பங்கு வர்த்தகர்கள், பங்குதாரர்கள் ஆகியோருக்கு அனுமதிப்பத்திரம வழங்குதல், நட்டவீட்டு நிதியம் ஒன்றை தாபித்தல், இத்துடன் தொடர்பான விடயங்களில் ஈடுபடல் ஆகியவற்றிற்காக தாபிக்கப்பட்டதே இதுவாகும். மேலும், இந்நிறுவனத்தின் அங்கத்தவர்களாக (Members) மத்திய வங்கியின் ஆளுநரால் நியமிக்கப்பட்ட அவ் வங்கியின் ஒரு பிரதி ஆளுநரும்; நிதி அமைச்சரவையால் சட்டம், நிதி, வியாபாரம், நிர்வாக அம்சங்களில் அனுபவமும் திறமையும் உள்ள ஆறு(6) நபர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வாறு தெரிவு செய்த மொத்தம் ஏழு (7) பேரும் நியமன அங்கத்தவர்களாவர். இவர்களைவிட பின்வருவோர் பதவி வழி அங்கத்தவர்களாக இருப்பர்.

1. தற்போதைய திறைசேரியின் பிரதிச் செயலாளர்.
2. தற்போதைய கம்பனி பதிவாளர்.
3. 1959ம் ஆண்டின் 23ம் இலக்க தத்துவக் கணக்காளர்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவர்.

எனவே? ஆணைக்குழுவில் மொத்தமாக பத்து (10)ப் பேர் அங்கம் வகிக்கின்றனர். மேலும் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களின் பதவிக் காலம் மூன்று வருடமாகும்.

**ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் (Objects)**

பின்வருவன ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் ஆகும் :

(அ) ஒழுங்கான முறையிலும் நியாயமான முறையிலும் பிணைகளை வழங்குதலிலும் அவற்றில் வர்த்தகம மேற்கொள்வதிலும் ஈடுபடக்கூடிய ஒரு சந்தையினை உருவாக்கிப்பராமரித்தல்.

(ஆ) முதலீட்டாளர்களில் நலன்களைப் பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அனுமதியளிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது பங்கு வர்த்தகரின் தவறினார் உருவாகும் நிதி நட்டங்களில் இருந்து முதலீட்டாளர்களைப்பாதுகாப்பதற்கு ஒரு நட்டவீட்டு நிதியத்தைச் செயற்படுத்துதல்.

(ஈ) பிணைகள் சந்தையினை ஒழுங்கு படுத்தலும், உயர்ந்த நியமங்கள் அச்சந்தையில் பேணப்படுவதை உறுதிப்படுத்துதல்.

**இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கடமைகளும் தொழிற்பாடுகளும்** (Duties and Functions)

(அ) பங்குப் பரிவர்த்தனை நிலையமாக செயற்படுவதற்கு நிறுவனம் ஒன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதலும், அந்த நிறுவனம் தனது நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் நடாத்துவதை உறுதிப்படுத்தலும்.

(ஆ) எந்த நபருக்கும் பங்குத்தரகராக அல்லது பங்கு வர்த்தகராக (Stock Dealers) செயற்படுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும், அவர்களின் நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தலும்

(இ) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம் ஒன்றை நடாத்துவதற்கு முகாமைக்கம்பனி ஒன்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும், அந்த அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்தின் நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தலும்.

(ஈ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கு அல்லது முகாமைக் கம்பனிக்கு அல்லது அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது பங்குத்தரகர்களுக்கு அல்லது பங்கு வர்த்தகருக்கு காலத்திற்குக் காலம் பணிப்புரைகளை வழங்குதல்.

(உ) அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது பங்கு வர்த்தகரின் பிழை காரணமாக முதலீட்டாளருக்கு ஏற்படும் நிதிரீதியான நட்டங்களுக்கு நட்டவீடு வழங்குதல்.

(ஊ) பிணைகள் சந்தை அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(எ) ஆணைக்குழுவின் வேலைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளையும், உத்தியோகத்தர்களையும் வேலைக்கமர்த்தல்.

(ஏ) பிணைகள் சந்தை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையும், செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.

(ஐ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்தின் முகாமைக்கம்பனியை அதன் நடவடிக்கைகள் தொடர்பாக ஒவ்வொரு வருடமும் ஆகக்குறைந்தது இரண்டு அறிக்கைகளை ஆண்டுக் குழுவுக்குச்சமர்ப்பிக்குமாறு வேண்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பிணைகள் பரிவர்த்தனை நிலையங்களிலும் பங்குத்தரகர்களினதும் பங்கு வர்த்தகர்களினதும் அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களினதும் நடவடிக்கைகளை, அவை சட்டத்திற்கிணங்கவும், விதிகளுக்கு இணங்கவும், சுற்றறிக்கைகட்கிணங்கவும் செயற்படுகின்றனவா? என்பதைத் தீர்மானிப்பதற்காக பரிசோதனை நடாத்தல்.

**இலங்கை பிணைகள்; பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதி (Fund)**

இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழு தனது நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியினை பின்வரும மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்கின்றது :

(அ) பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி.

(ஆ) அனுமதிப்பத்திரம் வாங்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையம்; பங்குத்தரகர்கள்; அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் காலத்திற்கு காலம் பரிசோதனை செய்வதற்கு அறவிடப்படும் கட்டணங்களும்; அவற்றின் அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பக் கட்டணங்களும்; புதுப்பிப்பதற்கான கட்டணங்களும்.

(இ) நன்கொடைகள், பரிசுகள், மானியங்கள்.

**நட்டவீட்டிற்கான விண்ணப்பமும், நட்டவீட்டு நிதியும்**

பங்குத்தரகரின் அல்லது பங்கு வர்த்தகரின்தவறு காரணமாக நிதிரீதியான நட்டத்தை அனுபவித்தவர்கள் அந்த நட்டம் ஏற்பட்டடு மூன்று மாத காலத்தினுள் ஆணைக்குழுவின் நட்டவீட்டுக் குழுவிற்கு உரிய விண்ணப்ப பத்திரத்தில் நட்டவீடு கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்திற்கு ஆதாரமாக குழு கோரும் ஆவணங்களையும் அத்தாட்சிகளையும் விண்ணப்பதாரி ஒப்படைக்கத் தவறினால் குழு அவரின் கோரிக்கையை நிராகரிக்கலாம். விண்ணப்பதாரியிடம் கோரியுள்ள நட்டவீடு நியாயமானதெனக் காணப்படுமிடத்து குழு நட்டவீடாகச் செலுத்தப்படவேண்டிய தொகையை மதிப்பீடு செய்து கொடுப்பனவை மேற்கொள்ளும்.

அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குத்தருகரின் அல்லது பங்கு வர்த்தகரின் தவறு காரணமாக முதலீட்டாளருக்கு ஏற்படும் நிதி ரீதியான நட்டத்தை ஈடு செய்வதற்காக ஆணைக்குழு ஒரு நட்டவீட்டு நிதியத்தை தாபித்து பேணிவருகிறது.

**பங்குப் பரிவர்த்தனை நிலையமொன்றை அல்லது பங்குத்தரகர் தொழிலை அல்லது பங்கு வர்த்தகர் தொழிலை ஆரம்பித்தல் :**

(அ) எந்தக் கூட்டுருவாக்கப்பட்ட நிறுவனமும் ஏற்கனவே பங்குப்பரிவர்த்தனை நிலையம் ஒன்றை நடாத்திக்கொண்டு வருமானால் அல்லது பங்குப்பரிவர்த்தனை நிலையம ஒன்றை எதிர்காலத்தில் நடாத்துவதற்கு விரும்புமானால் ஆணைக்குழுவுக்கு அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அல்லது எந்த நபரும் ஏற்கனவே ஒரு பங்குத்தரகர் தொழிலை அல்லது பங்கு வர்த்கர தொழிலை நடாத்தி வருபவராக இருப்பின் அல்லது எதிர்காலத்தில் அவ்வாறான தொழிலைச் செய்ய விருப்பமுள்ளவராக இருப்பின், ஆணைக்குழுவுக்கு அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

**தனிப்பட்ட நபருக்கு பங்குத்தரகராக அல்லது பங்கு வர்த்தகராக அனுமதிப்பத்திரம் வங்கப்படுவதற்கு நிறைவு செய்ய்பட வேண்டிய நிபந்தனைகளும் விதிகளும்.**

1) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2) தகுதியான பொருத்தமான நபராகவும் நல்ல நிதி நிலையையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3) சட்டத்தின்படி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட பங்குப் பரிவர்த்தனை நிலையமொன்றில் அங்கத்தவராக இருப்பதுடன், அந்த பரிவர்த்தனை நிலையததினால் விண்ணப்பதாரி பங்குப் பரிவர்த்தனைச் செயற்பாடுகளில் போதியளவு பயிற்றப்பட்டவர் என அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

4) நிதியமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய தொகையை அல்லது அதற்குச்சமனான வங்கி உத்தரவாதத்தை சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பங்குப்பரிவர்த்தனை நிலையமொன்றில் பாதுகாப்பு நிதியாக வைத்திருத்தல் வேண்டும்.

5) அத்துடன் விண்ணப்பதாரி அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குப் பரிவர்த்தனை நிலையம் எதனதும் அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டவராகவோ அல்லது வெளியேற்றப்பட்டவராகவோ இருத்தல கூடாது.

**பங்குத்தரகரின் அல்லது பங்கு வர்த்தகரின் அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தி வைத்தல்**

(அ) சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்தின் விதிகள் பிரமாணங்களின் கீழ் பங்குத் தரகர் அல்லது பங்கு வர்த்தகர் எதுவும ஏற்பாடுகளை மீறி நடந்தால்

(ஆ) பங்குதாரரின் அல்லது பங்கு வர்த்தகரின் நிதி நிலைமை மோசமடைந்தால்.

(இ) பங்குத் தரகர் அல்லது பங்குவர்த்தகர் அனுமதிப்பத்திரம் வாங்கப்படுவதற்கான தகுதியை இழந்தால்.

(ஈ) பங்குத்தரகர் அல்லது பங்கு வர்த்தகர் தனது நடவடிக்கைகளை நிர்வகிப்பதில் ஒழுங்கீனமாக அல்லது தவறாக நடத்தார் எனக் குற்றம் காணப்பட்டால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை பிணைகள். பரிவர்த்தனை ஆணைக்குழுவும் அலகுப்பொறுப்பாட்சி நிறுவனமும்** - Securities and Exchange Commission of Sri Lnaka and Unit Trusts

கொழும்புப்பங்குச் சந்தையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்ற பொறுப்பு இலங்கை பிணைகள், ஆணைக்குழுவினதாகும். அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் பற்றிய விதிகளை ஆககுகின்ற பொறுப்பும் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைககுவினதாகும். இவ் ஆணைக்குழுவினால் உருவாக்கப்படுகின்ற விதிகள் அவ்வப்போது அராசங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும். இலங்கையில் இதுவரை ஐந்து அலகுப்பொறுப்பாட்சி நிறுவனம உருவாக்கப்பட்டுள்ளது.

1. சீபேங்க் (Ceybank)
2. கொம்ட்றஸ்ட் (Comtrust)
3. பிரமிட் (Pyramid)
4. நாமல் (Nmal - National Equity fund)
5. சென்ச்சரி (Century)

எனவே இலங்கையின்பங்குச் சந்தை நடவடிக்கையில் இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழு பெரும்பங்கு வகிப்பதுடன் பங்குதாரர்கள், பங்கு முதலீட்டாளர்கள் தொழில்பாட்டிற்கும் பெரிதும் உதவுவதுடன் அலகுப்பொறுப்பாட்சி நிறுவனத்தை கட்டுப்படுத்தி நிர்வகித்து வருகின்றது.

உசாத்துணை நூல்கள் :
பங்குச் சந்தை - எம். சித்தீக்
மத்திய வங்கி அறிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SMALL BUSINESS VENTURE

**Lt. T. Nagaratnam , B.Sc. (Cey).**
Deputy PrincipalJaffna Central College

When we think of very old era of the world, human beings ate meal and yams and their shelter was atural caves. The need were very few but today our needs are aboundant in contrast to our ancestors.

We consums different type of foods, use varieties of clothing and even our shelter are different sophisticated type. Now we can travel from one place to another very fast. Now we have fax facilities. We can communicate with the far foreign countries very fast0 We can view the live telecast of anything which may take place in a furthest place.

In contrast to the old era now the populaiton very much larger, so high volume of needs are required.

So it is a difficult task to keep pan with the expanding of needs. Hence it is very important to find sophisticated means to generate the needs.

We may think that of plenty of resources are found that country will prosper to it's maximum but it is not so. there are many countries blessed with valuable resources are not flourishing well there are many countries even with little resources prosper well the reason being skillness, Talant and toiling are also needed along with resources. So if any venture so to be flourished, that venture must be supplied with good services, resources and skill labourers. entrepreneur also must be wealthy enough to invest mony on that. It is very risky to invest large amount of money because :

1. Skillful labourere may die

2. Business centre may catch fire

3. Another similar competitive business centre may be set up near by.

the entre preneur must be dynamic and innovative. entrepreneur must has the ability to innovate the new model the people has the crazy to charge their wish. they may like to go in for a modern sophisticated model entrepreneur wish is to attain higher social status.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In the small business the owner is the manager of the firm the owner has a direct influence on the management the initial capital required to set up the firm is provided by the owner and his friends. A portion of the capital is borrowed from a bank commodities produced by a small business venture is distributed over a small area. A small portion of the needs of the country is met by small firm. It uses small machinararies and they are not sophisticated and up to date. Sometimes the machines are operated using hands.

Usually chances are very remote to barrow loan from outsiders because nobody will belives that the loan will be repaid. In case of lending loan private agencies may need security.

The small ventures have to cpmpete with large firm. It is very difficult Large industries capture great portion of the total demand. High skilled technisians are absorbed by large manufacturers because they are well paid there.

But if small businessman act carefully these problems could be avoided and they can steer through to success. entrepreneurs have take risk and face the challenge and conquer them by timely decisions. There are many small ventures have grown into famous large firm due to the personal abilities of entrepreneur.

There are many areas where people who do not like to consume anything which is produced in the large scale production there are some items which could be produced only in small scale. In different areas people enjoy different tasts. so different type of production may be done in accordance with taste of the people)

There are some items which could not be produced using machines. In the production some times man skills predominate over the machinary technology.

Above facts shows that small entrepreneur can also thrive afftiveatly. If a small businessman select a venture which depends mostly on the man skill; the venture will be very much success and make the venture valuable and feasible. The collective production and employment generated by the small business sector is more than the large business sector.

Mainly there are two categories of ventures found in Sri Lanka. Onw is agricultural and the other is industrial but these are interdependence farmers use the equipments and tools produced by the industries. Indistries also use agricultural products to produce some food stuffs. For a long time to com eSri Lanka will remain agro industrial country.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One must be very happy to be a entrepreneur because it is an independent job through which any one can develop.

World must be proud to have more and more entrepreneurs because they develop the country economically. A lot questions may transit the entrepreneur's mind about the ventures but everything depend on his fate. Quality of a entrepreneur may be either inhereat of developed through educaton and experience.

Sucess of the ventures depend on the : (1) Innate aspirtations; (2) Analytical abilities; (3) innovative qualities; (4) Social attribute' (5) Physical condition and moral attitude; (6) Will power; (7) Hard work; (8) Skillness; (9) Financial condition; (10) Out side support; (11) Knowledge; (13) courage to take risk; (13) Enduarance; (14) Huminitity; (15) Pleasing atmosphere with friends; (16) Optimism; (17) Tick heart etc.

Entrepreneur : (10 should not believe the hearsays; (2) must be willing to exchange of views with other; (3) should have modern communication facilities (mass media); (4) should not think of making quidk profit.

Before starting a business. you must analyse and start a business which must be legitmate and the resources must be abundunt it must has long term sustenonee.

If a business to be run successively following instruction mus tbe observed:

1) Choose a suitable it must be easily accessible & hygenic.

2) Before producing a item, taste of the people and then the production must be made accordingly.

3) It must be attractive and comely there must be proper market orrentation. the compatiable period (season) and the suitable place must be selected - plactic, bangles & ice cream have good sales during Nallur Festival at Nallur.

So the thinking must be realistic by incorporating the constraints such as political, economic and Legal.

Analyse the intention of the Govt. sometimes Govt. may ban the import products. Then demand and market of locally produced things will rise will steeply. If the people are poor they cannot buy expensive things sometimes govt. may ban some goods all of a sudden which will affect the entrepreneur very badly.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sometimes these contraints may drustically and adversely affect the entrepreneur. So before starting a business it is a must to analysis the contraints, acutely. Otherwise the business will not be potential ) It is a cruical task.

The entreprenur may have infrastructaies but without alone he can't proved his venture. He may need adequate capital. training and advise in areas such as technical matters, marketing and finance right at the commencement of a business.

A entrepreneur before embarking on a venture he must analyse it whether it is feasible or infeasible to his capacity he must consider (1) Capacity, (2) Geography (3) denised (4) Technique (5) Ramaterial (6) Skill Labourer (7) Exportily Opportunity.

Entrepreneur has to evaluate th eprice of the product for the maximum demand and good market potential. the venture has to be centred on technical aspects location of machinaries and training having known all these he has to evaluate the costs incurred in maintaining these businessman with a view to make profit get the support of a Bank which levy least interest on the credit. He can get assistance from IDB, DSI, SLBD, NERD, CISIR etc. The assistances are (1) Financial assistance came into effect; (2) Leasing of machinary and equipment, (3) Training of Entrepreneurs (4) Advisory services on production and marketing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்மதி நிலுவை – புதிய அறிமுகம்

**ஆ. சௌந்தரலிங்கம்**, விரிவுரையாளர்,
பொருளியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு நாடு உலகின் ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளும பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களை ஒரு ஒழுங்கான வகையில் சுருக்கமாகத் தருகின்ற ஒரு புள்ளிவிபர அறிக்கை என்று சென்மதி நிலுவையை குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு நாட்டில் வசிப்பவர்களுக்கும், ஏனைய நாடுகளில் வசிப்பவர்களுக்குமிடையே இடம்பெற்ற பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களைக்காட்டுகின்ற ஒரு ஒழுங்கான பதிவேடு எனவும் இதனைக் குறிப்பிடலாம். அவ்வாறு இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களைப்பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். பொருட்களின் ஏற்றுமதிகளி, இறக்குமதிகள், நேரடி முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானங்கள், நேரடி முதலீடுகள் தொடர்பாக வெளியே அனுப்பப்பட்ட வருமானங்கள் தனியார் துறையினர் மற்றும் பொதுத்துறை சார்பாக பெற்றுக்கொண்ட மாற்றல்கள், அனுப்பப்பட்ட மாற்றல்கள் ஏனைய வழிகளில் பெற்றுக்கொண்ட வருமானங்கள், அனுப்பப்பட்ட வருமானங்கள், ஏனைய நாடுகளுடன்இடம்பெற்ற மூலதன மாற்றல்கள், நீண்டகாலக் குறுகிய கால தனியார் முதலீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், மத்திய அரசின் முதலீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், மற்றும் அரசு மத்திய வங்கி என்பவற்றின் சொத்துக்கள் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், பன்னாட்டு நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்கள், சி.எ.உ. ஒதுக்கீடுகள் என்றவாறு பல்வேறு கொடுக்கல் வாங்கல்கள் சென்மதி நிலுவை அறிக்கையில் இடம்பெறுகின்றன.

**பொருத்தமான வடிவத்தின் அவசியம்**

ஒரு நாட்டின் பொருளாதாரம் தொடர்பான தரவுகள், புள்ளி விபரங்கள் போன்றவை பல்வேறு காரணங்களுக்காகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரம் சம்பந்தமான கொள்கையினை உருவாக்குதல் அக்கொள்கையின் வெளிப்பாட்டினை அல்லது விளைவுகளைக் கண்காணித்துக் கொள்ளுதல், பொருளாதாரம் சம்பந்தமான எதிர்வு கூறுதலை மேற்கொள்ளுதல், பொருட்சந்தை மற்றும்நிதிச்சந்தை நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல், கல்வி சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல காரணங்களுக்காக பொருளாதாரத் தரவுகள் உரிய முறையில் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். சென்மதி நிலுவைத் தரவுகளும், புள்ளிவிபரங்களும் கூட இத்தகைய பொருளாதாரப் பகுப்பாய்வுக்கு உட்படுகின்றன. இப்புள்ளி விபரங்கள் சரியான முறையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமாயின்அவை இலகுவான முறையில் முரண்பாடுகளுக்கு உட்படாத வகையில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இந்த விடயத்தில் உலகின் எல்லா நாடுகளும் தமது சென்மதி நிலுவை அறிக்கையைத் தயாரிக்கும்போது ஒரு பொதுவான அமைப்பு முறை ஒன்றினைப் பின்பற்றுவது சிறந்தது எனக் கூறப்படுகின்றது. எல்லா நாடுகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட முறையில்லாது பொதுவான முறையைப்பின்பற்றி சென்மதி நிலுவை அட்டவணையைத் தயாரிப்பது பல நன்மைகளைக் கொடுக்கும். நாடுகளின் பொருளாதார நிலைமைகளை ஒப்பீடு செய்வதற்கும் இது உதவி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னைய வடிவம்**

1977 இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேடு ஒன்று அதன் நான்காவது பதிப்பாக வெளியிடப்பட்டது. அந்தக் கையேட்டினை அடிப்படையாகக்கொண்டே இன்றுவரை இலங்கையின் சென்மதி நிலுவை தொடர்பான புள்ளி விபரங்கள் தயாரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள், மாதாந்த செய்தித் திரட்டுக்களில் இந்த சென்மதி நிலுவை தொடர்பான புள்ளிவிபரங்களை முன்னைய வடிவத்தில் நாம் அவதானித்து வந்தோம். இத்தகைய சென்மதி நிலுவைக் கையேடானது ஐக்கிய நாடுகளின் தேசியக் கணக்குகள் முறைக்கு அமையத் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தக் கையேடானது தயாரிக்கப்படும்போது பன்னாட்டு நாணய நிதியத்தில் அங்கம் வகிக்கும நாடுகளைச் சேர்ந்த சென்மதி நிறுவைப் புள்ளிவிபரங்களின் தொகுப்பாளர்களின் ஆலோசனைகள், தேவைகள், கருத்துக்கள் என்பனவையும் கவனத்தில் கொள்ளப்பட்டுத் தயாரிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**புதிய அறிமுகத்தின் / வடிவத்தின் தேவை**

இவ்வாறான 1977ம் ஆண்டின் சென்மதி நிலுவைக் கையேட்டின்நான்காவது பதிப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சென்மதி நிலுவை அட்டவணை இன்றைய காலத்தின் தேவைக்குப்போதுமானதாக இருக்கவில்லை. இன்று வெளிநாட்டு வர்த்தகத்தில் பணிகளின் பங்கு பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. நிதித்துறை சார்பாக புதுப்புது அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. இவை சென்மதி நிலுவை அட்டவணைத்தயாரிப்பு சம்பந்தமாக புதிய அம்சங்களைக்கருத்திற் கொள்ள வேண்டிய தேவையை வேண்டி நிற்கின்றன. பல நாடுகளிலே சந்தை சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன. இவை நாடுகளுக்கிடையே காணப்பட்ட வர்த்தகத் தடைகளைப் பெருமளவுக்கு நிக்கிவிட்டன. மூலதனக்கட்டுப்பாடுகளைத்தளர்த்திவிட்டன. இதன் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளில் உலக மயப்படுத்தல் அதிகரிக்கப்படடது. ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னர் உலக நாடுகள் மரவு ரீதியான பொருட்களையே ஏற்றுமதி, இறக்குமதி செய்து வந்தன. அவையும பல்வேறு சுங்கத் தடைகளால் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. ஆனால் தற்போது நிலைமை எவ்வளவோ மாறிவிட்டது. சில வகையான திருத்தங்கள், பதனிடல் போன்றவை மேற்கொள்ளப்பட்ட பின் ஏற்றுமதி செய்வதற்காக அதாவது மீள் ஏற்றுமதிக்காக பல பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலும் தொடர்பூட்டல், கட்டவாக்கம், கணனி சார்பான பணிகள், உரிமைப் பங்குகள், உரிமைக்கட்டணங்கள், தனிப்பட்ட காலச்சாரப் பொழுதுபோக்குப் பணிகள் போன்ற விடயங்கள்இன்று வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கிய பங்கினைப் பெற்று விளங்குகின்றன. மேற்குறிப்பிட்டவிடயங்கள் கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு வெளிநாட்டு வர்த்தகத்தில் இடம்பெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று சர்வதேசப் படுகடன் நெருக்கடிகள் உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றன. இந்நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முகமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டடு வருகின்றன. படுகடன், மன்னிப்பு, படுகடன் குறைப்பு, தண்டனை வட்டி விதிப்பு, நிலுவைகளை மீள்அட்டவணைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் இது தொடர்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி பன்னாட்டு மூலதன மாற்றல்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைகள், பத்திரங்கள், பணச் சந்தைக் கருவிகள் மற்றும் நிதிசார் ஆவணங்கள் என்பன சர்வதேச வர்த்தக நடவடிக்கையில் கூடிய பங்கினையும் முக்கியத்துவத்தினையும் பெற்று வருகின்றன. சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்டிருக்கும்மேற்கண்ட அபிவிருததிகள் சென்மதி நிலுவைத்தரவுகளைத் தொகுக்கும்போது கவனத்தில்எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டே பன்னாட்டு நாணய நிதியம் சென்மதி நிலுவைக் கையேட்டின் திருத்தப்பட்ட ஐந்தாவது பதிப்பை அண்மையில் வெளியிட்டது. இந்த திருத்தப்பட்ட சென்மதி நிலுவைக் கையேட்டினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையும் 1997 இலிருந்து அதன் சென்மதி நிலுவையைப்புதிய வடிவில் தொகுக்கத் தொடங்கியுள்ளது.

**வேறுபாடுகளும், அனுகூலங்களும்**

இப்போது நாம் சென்மதி நிலுவையின் புதிய வடிவமைப்பானது எவ்வாறு பழைய வடிவமைப்பிலிருந்து வேறுபடுகிறது என்பதனை சுருக்கமாக நோக்குவோம். பழைய அமைப்பு முறையில் நடைமுறைக் கணக்கானது பொருட்கள் கணக்கு, பணிகள் கணக்கு என இரண்டாகப்பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய அமைப்பு முறையில் இது பொருட்கள், பணிகள், வருமானம், நடைமுறை மாற்றல்கள் என்று நான்காகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும முக்கியமான மாற்றம ஆகும். இதன்படி பழைய முறையில் பணிகள் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்த முதலீட்டு வருமானம் புதிய முறையில் வருமானம் என்ற தனித்தலைப்பின் கீழ் காட்டப்பட்டு அதன்கீழ் ஊழியர்களுக்கான இழப்பீடு, நேரடி முதலீடு, ஏனையவை என்ற உப பிரிவுகளும் காட்டப்படுகின்றன.

பழைய அமைப்பு முறையில் மாற்றம் கொடுப்பனவுகள், பணிகள் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இப்போது புதிய முறையில் அது நடைமுறை மாற்றல்கள் என்ற தனியொரு தலைப்பாக நடைமுறைக் கணக்கில் காட்டப்படுகிறது. இதன்கீழ் தனியார் மாற்றல்கள் ஒரு அம்சமாக இடம்பெறுகிறது. இந்தத் தனியார் மாற்றல்களில் இருந்தும் முன்னைய அமைப்பின் கீழ் இருந்த அலுவல்சார் மாற்றல்கள் என்று குறிப்பிடப்பட்டவற்றில் இருந்தும் ஒருபகுதி பிரித்தெடுக்கப்பட்டு மூலதனக் கணக்குக்குக் கொண்டு செல்லப்படுகிறது. பொதுவாகத்தனியார் மாற்றல்கள் என்று கூறும் போது அது வெளிநாட்டுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும், இடம்பெயர்ந்திருப்போரும் அனுப்புகின்ற பணத்தினைக் குறித்து நிற்கிறது. அது புதிய முறையின் கீழ் நடைமுறைக்கணக்கில் இடம்பெறுகிறது. ஆனால் வெளிநாடுகளில் புதிதாகக் குடியமர்ந்தோர் அந்நாடுகளில் அவர்கள் வீடு மற்றும் சொத்துக்களை விற்றுப் பணம் அனுப்பும்போது மூலதன மாற்றல்களாகக் கருதப்பட்டு மூலதனக் கணக்கில் இடம் பெறுவது இங்கு முக்கிய மாற்றமாகக்காடடப்படுகிறது. எனவே சுருக்கமாகக் கூறினால் மாற்றல்களில் ஒரு பகுதி நடைமுறைக் கணக்கிலும் ஒருபகுதி மூலதனக் கணக்கிலும் இடம்பெறுவது இங்கு முக்கியமான ஒரு மாற்றமாகும்.

முதலாவதாகக்குறிப்பிட்ட மாற்றமானது அதாவது முதலீட்டு வருமானத்தை வருமானம் என்ற தனியொரு பிரிவுக்குள் காட்டும் புதிய முறையானது நடைமுறைக் கணக்கு மீதியை எவ்விதத்திலும் பாதிக்காது. ஆனால் மாற்றல்களைப் பிரித்து அதில் ஒரு பகுதியை மூலதனக்கணக்குக்கு மாற்றும்போது அது நடைமுறைக்கணக்கு மீதியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கும். மேற்தரப்பட்ட அட்டவணைப்படி நடைமுறைக் கணக்குப்பற்றாக்குறையானது இப்புதிய மாற்றத்தினால் பத்து மில்லியன் என்ற அளவால் குறைந்திருப்பதை அவதானிக்கலாம்.

முன்னைய அமைப்பின் கீழ் மூலதனக் கணக்கானது மூலதனமும், நாணயத் தங்கமும என்று தலைப்பிடப்பட்டு அதன் உப பிரிவுகளாக நாணயமல்லாத் துறை, நாணயத் துறை என்ற இரண்டு பிரிவுகள் காணப்பட்டன. ஆனால் புதிய அமைப்பின் கீழ் மூலதனக் கணக்கானது மூலதன நிதிக் கணக்கு என்று பெயர்பெறுகிறது. அதன் உப பிரிவுகளாக லலதனக் கணக்கு, நிதியியற்கணக்கு, நாணயத்துறை என்பன அமைந்து காணப்படுகின்றன. மூலதனக் கணக்கு என்ற தலைப்பின்கீழ் முன்னர் மாற்றல் கொடுப்பனவுகளில் இடம்பெற்று வந்த சில விடயங்கள் மூலதன மாற்றல்கள் பொது, அரசு மாற்றல்கள், ஏனைய துறை மாற்றல்கள் என்ற உப பிரிவுகளின் வடிவில் இடம்பெறுவதைக் காணலாம். இன்னும சிறப்பாகக்கூறினால் இம்மூலதனக் கணக்கு ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி மற்றும் நிதிசாராத சொத்துக்களின் கையேற்பு, விற்பனை மறறும மூலதன மாற்றல்களையும் கொண்டிருப்பதுடன் அரசால் பெறப்பட்ட செயற்றிட்ட உதவிகள், அரச படுகடன் மன்னிப்பு (இலங்கைக்கு இது பொருத்தமில்லை) அரசால் பெறப்பட்ட செயற்றிட்ட உதவிகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி இருக்கும். புதிய அமைப்பின் கீழ் நிதியியற் கணக்கு என்ற புதிய தலைப்பு காணப்படுகிறது. முன்னைய அமைப்பு முறையின் கீழ் நாணயமல்லாத்துறை என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்றுவந்த அனைத்து விடயங்களும் இங்கு இடம்பெறுவதுடன் அதற்கு மேலதிகமாக இதுவரையும நாணயத்துறையில் இடம்பெற்றுவந்த வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்ற விடயங்களும் இங்கு சேர்க்கப்பட்டிருப்பதைக்காணலாம். எனவே, இப்போது சென்மதி நிறுவையின் பொதுவான நிலுவையானது வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கியதாகக் காட்டப்படுகிறது. இது சிறப்பான ஒரு அம்சமாகும். இவ்வாறு வர்த்தக வங்கிகளின் சொத்து, பொறுப்புக்களை நிதியியற் கணக்குக்கு மாற்றுவதற்கான காரணங்கள் வருமாறு :

1. வர்த்தக வங்கிகள் இப்போது முன்பிலும் சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுக் கடன்பாடுகுளை மேற்கொள்வதற்கும், ஓரளவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே, இவற்றின் அதிகரித்த செயல்பாடுகள் நிதியியற் கணக்கில் தனித்துச் சேர்க்கப்படுவது பொருத்தமானதாகும்.

2. வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும பொறுப்புக்களும் கருத்தில் எடுக்கப்பட்ட பின்னர் பெறப்படுகின்ற சென்மதி நிலுவையின் பொதுவான நிலுவை கூடியளவக்கு கருத்துள்ளதாக விளங்குகின்றது. இவ்வாறு பெறப்படுகின்ற இப்புதிய மீதி பண நிரம்பலின் மீதான வெளிப்புறக்கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை நேரடியாகப் புலப்படுத்துகின்றது.

மேலும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நிதியியற் கணக்கில் சேர்த்துக் காட்டுகிற செயல்பாடானது சென்மதி நிலுவையின் பொருவான நிலுவையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக பழைய முறையின்படி இலங்கையின் சென்மதி நிலுவையின்பொதுவான நிலுவை 630 இலட்சமாக இருந்தது. புதிய அமைப்பு முறையின்படி இது 130இலட்சமாகமாறியுள்ளது. காரணம் வர்த்தக வங்கிகளின் சொத்து மற்றும பொறுப்பு மாற்றங்களை நிதியியற் கணக்கில் சேர்த்ததுதான்.

இவ்வாறு சென்மதி நிலுவை அட்டவணையின் புதிய அமைப்பானது பழைய அமைப்பு முறையிலிருந்து பல்வேறு அம்சங்களில் வேறுபட்டு இருப்பதுடன், சில அனுகூலங்களையும் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்கள் சேவைகள் மீதான வரியின் முக்கியத்துவமும் வரிவிதிப்பு தொடர்பான பின்னணியும்

*செல்வன் ஜெ. பிரதாபன் . பழைய மாணவன், உயர்தரம் – 1997*

பொதுவாக எல்லா பொருளாதாரங்களும் தங்களுடைய நாட்டின் சமூக மேம்பாடுகளை அல்லது நலன்களைக் கருத்திற்கொண்டு, தனியாரால் உற்பத்தி செய்ய முடியாது எனக் கருதப்படும் பல்வேறு பொதுப் பொருட்களை அரசாங்கத்துறை உற்பத்தி செய்து பார்க்க வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொதுப் பொருட்கள் மீதும் மற்றும் சேவைகள் மீதும அரசாங்கம கணிசமான அளவு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான முதலீடுகளுக்கு ஏற்படும் செலவினங்களை ஈடு செய்து கொள்வதற்கான வருமானங்களை இவை பல்வேறு வழிகளில் பெற்றுக் கொள்கின்றன. பிரதானமாக அவ்வழி முறைகளை வரிவருமானம், வரி அல்லா வருமானம் என வகைப்படுத்த முடியும். இவற்றுள் குறைவிருத்தி நாடுகளை பொறுத்தவரை வரி வருமானங்கள் முக்கிய இடத்தை வகிப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையின் மொத்த அரசிறையில் பெரும்பகுதி வரி மூலம் கிடைத்த வருமானத்திலிருந்தே பெறப்பட்டது. மொத்த வரி வருமானத்தில் மிகவும் கூடுதலான இடத்தைக்கொண்டிருப்பது மொத்த விற்பனை வரி ஆகும். ஆனால் இவ்வரி முறை உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பெருமளவு பாதிப்பதாகக்கருதி 1996ம் ஆண்டு அதனை பொருட்கள் சேவைகள் வரியாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பொருட்கள் சேவைகள் வரி மொத்த விற்பனை வரியைவிட சமத்துவத்தைப் பேணுவதாகவும், பரந்த அடிப்படையில் கூடுதலான வருமானம் பெறக்கூடியதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு பல்வேறு நன்மைகளை கொண்டுள்ள போதிலும் இவற்றுக்கு எதிராக பல கண்டனங்களும் காணப்படுகின்றது. எனினும், இன்று உலகில் பல்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுவது இதன் சிறப்பினைக் குறிக்கின்றது.

1981ம் ஆண்டின் 69ம் இலக்க மொத்த விற்பனை வரிச் சட்டமானது இலங்கையில் தொழில் நடவடிக்கை எதனையும் மேற்கொள்பவர் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் சேவைகளை வழங்குபவர், இலங்கையிலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகள் தொடர்பாக மொத்த விற்பனை வருமானம் பெறுகின்றவர் மொத்த விற்பனை வரிக்கு உட்படுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 25,000/- மேல் காலாண்டுக்கு வருமானம் பெறுபவர் அல்லது வருடத்திற்கு ரூபா 100,000/- மேல் வருமானம பெறுபவர் மொத்த விற்பனை வரிக்கு உட்படுவார். இதனுடைய வரி வீதம் காலத்துக்குக்காலம் நிதி அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும். மேலும் இவ்வரி மூன்று வகையான சேர்க்கைகளைக் கொண்டு அறவிடப்படும். முதலாவதாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள்மீது வேறுபட்ட வரிவிதமும் அறவிடப்படும். இரண்டாவதாக உயர்தொழில்கள், சேவைகள்மீதும்; மூன்றாவதாக மொத்த சில்லறை வர்த்தகத்தின்மீதுமு விதிக்கப்படும். அதேவேளை உற்பத்தி சார்ந்த (தேயிலை, இறப்பர், தெங்கு, உற்பத்திப் பொருட்கள், நெல், மிளகாய்) வியாபாரம் சார்ந்ததுமான (பாண், புத்தகம், மருந்துப் பொருட்கள், கறுவா, கராம்பு) பொருள் தொகுதிகளிற்கு மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அறவிடப்படும் மொத்த விற்பனை வரி இரட்டைத் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது. அவை வருமானத் தொழிற்பாடு, பொருளாதாரத் தொழிற்பாடு என்பனவாகும். ஆனால், சில்லறைப்பொருட்களின் உற்பத்தி அதன் மொத்த விற்பனை சில்லறை வியாபாரம் என பல்வேறு மட்டங்களில் அறவிடுவதனால் வரிக்கு வரிவிதித்தல் என்ற தன்மையைக்கொண்டுள்ளது. இதனால் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தி செலவினை விட பலமடங்கு நுகர்வோர் வழங்க வேண்டி ஏற்படுகிறது என்ற காரணத்தினால் இதற்கு மாற்றிடாக பொருட்கள் பண்டங்கள் மீதான வரி அறிமுகப் படுத்தப்பட வேண்டும் என 1993ம் ஆண்டிலிருந்து உணரப்பட்டு வந்துள்ளது. இதனடிப்படையில் இதன் முன்னேற்றங்கள், நடைமுறைப் பிரச்சினை என்பன ஆராயப்பட்டு 1996 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ம் திகதி பாராளுமன்றத்தில் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில் பொருட்கள், சேவைகள் மீதான வரி ஒரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்திக்காக ஒரு வியாபார நிறுவனத்தால் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படும் கட்டணம பொருட்கள் சேவைகள் மீதான வரியாகக் கொள்ள முடியும். இங்கு சேர்க்கப்பட்ட பெறுமதி என்பதை ஒரு உற்பத்தியாளன் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு ஏனைய நிறுவனங்களிடம் கொள்வனவு செய்த ஊழியமல்லாத உள்ளீடுகளுடன் விற்பனைக்கு முன்னர் சேர்த்துக் கொண்ட பெறுமதியைக் குறிக்கும் என அலன் எரயிட் அவர்கள் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். அதாவது ஒரு நிறுவனத்தின் வெளியீட்டுப் பெறுமதியில் இருந்து உள்ளீட்டு பெறுமதியைக் கழிக்கலாம். பெறுமதி மீது விதிக்கப்படும் வரி எனக் குறிப்பிடலாம். இதனைக் கணிப்பிடுவதற்கு பல வழிமுறைகளைக்கையாள முடியும். கழித்தல் முறை, கூட்டுதல் முறை, வரிவரவு முறை, செலவு முறை ஆகிய முறைகளில் இதனைக் கணிப்பிடலாம். இதன் மூலம இரட்டை வரி விதிப்பு முறையை தவிர்க்க முடியும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. மேலும் ஒரு நிறுவனத்தின் ஆண்டு நிகர வருமானத்தில் 200,000 ரூபா வரி விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மொத்த விற்பனை வரி வருடாந்தம் ரூபா 100,000 வருமானத்திற்கு மட்டுமே வரி விடுதலை வழங்கியிருந்தது., மேலும் உள்ளூர் உற்பத்தி இறக்குமதிகள் 6 சதவீதம், 10 சதவீதம், 15 சதவீதம் என விருத்திமுறை அடிப்படையில் வரி வீதம் குறிக்கப்பட்டுள்ளதோடு தொழில்கள் சேவைத்துறையில் உள்ளவர்கள் மீது 2%, 5%, 10%, 20% என்ற அடிப்படையிலும மொத்த சில்லறை வியாபாரத்திற்கு 1%, 5%, 10% என்ற விகிதத்திலும் வரி அறவிடப்படும என புதிய சட்டவரைபு கூறுகிறது. இதன் மூலம் வறிய மக்கள் வரிச்சுமையினால் நசுக்கப்படுவதைக் குறைக்க முடியும் என அரசாங்கம எதிர்பார்க்கிறது. இவ்வரி முறையானது உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளால் பின்பற்றப்படுகிறது. இதனுடைய உயர் சேகரிப்பு வீதம், செயற்திறன், நடுநிலைத்தன்மை என்பன காரணமாகவே இது பிரபல்யமாகியுள்ளது. 1960 ஆம ஆண்டுக்கும் 1970 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அனேகமாக வளர்ச்சி அடைந்த நாடுகள் தமது வருமானத்தில் பெரும்பகுதியை நேர் வரிமூலம் பெற்றமையாகும். இவ்வருமான விதிமுறை தனியாரின் உற்பத்தி நடவடிக்கையில் ஊக்கமின்மையை தோற்றுவித்ததனால் முதலீடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. எனவேதான் இதற்குப் பிரதியாக வருமானம் பெறும் வேறு வழிகள் ஆராயப்பட்டது. இவற்றில் மொத்த விற்பனை வரியும பல குறைபாடுடையதாக அமைந்ததால் பல நாடுகள் பெறுமதி சேர்க்கப்பட்டட வரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்தது. 1970 களில் நோர்வே, அயர்லாந்து, பெல்ஜியம், இந்தியா, பிரித்தானிய நாடுகள் அறிமுகம் செய்திருந்தது. ஐரோப்பிய யூனியன் என்ற அமைப்பினுள் சேர்வதற்கு இவ்வரிமுறை பிரதான தேவையாகக் காணப்பட்டது.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வரிமுறை மேலும் உலகரீதியில் பரவலாக்கம் செய்யப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக பல நாடுகள் முழு அளவில் செயற்படுத்தி வருகிறது. யப்பான், பாகிஸ்தான், கனடா, பின்லாந்து, தாய்லாந்து போன்ற நாடுகளை இதற்கு உதாரணமாக கூறலாம். ஆனால், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இவ்வரியினைக் கடைப்பிடிக்கவில்லை. எனினும் இதனை அறிமுகம செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. உலகில் தற்போது சுமார் 60 நாடுகளில்இவ்வரிமுறை பின்பற்றப்படுகின்றபோதிலும் இவற்றில் 40 நாடுகள் குறைவிருத்தி நாடுகளாகும்.

**இதன் பொருளாதார விளைவுகள்**

பொருட்கள், சேவைகள் வரியின் விளைவுகளில் பிரதானமாக குறிப்பிடுவது பணவீக்கம அதிகரிக்கும் என்பதாகும். இவ்வரியினை அறிமுகப்படுத்தும் போது உடனடியாக பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரிக்கலாம் என அனுபவரீதியாக உணரப்பட்டுள்ளது. ஆனால் 35 நாடுகளில் இவ்வரியின் மூலமான பணவீக்க விளைவினை ஆராய்ந்தபோது 22 நாடுகளின் பணவீக்கம் விரும்பத்தக்கதாக இருந்துள்ளது. அதேவேளை 7 நாடுகளில் ஒரே அளவான பணவீக்கம் காணப்பட்டு இருந்தது. மேலும் 6 நாடுகளில் பணவீக்கம் ஏற்பட்ட போதிலும அந்நாடுகளின் பணக்கொள்கை இதற்குக் காரணமாக அமைந்திருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் இலங்கை மொத்த விற்பனை வரிக்கு விதிக்கப்பட்ட வருமான எல்லையை தற்போது ரூபா 200,000 ஆக அதிகரித்துள்ளது. அதே வேளை சலுகை வரிவீதங்களை அளித்துள்ளது. மேலும் பல்வேறு விலக்களிப்புக்களும இதில் காணப்படுகின்றன. பொதுவாக வங்கியியல், நிதிச் சேவைத் துறை, கப்பல் சேவைப்பிரிவு, மாகாண சபைகளின் மொத்தச் சில்லறை வர்த்தகம என்பன விலக்களிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வரிமுறை மூலம பணவீக்கம் பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதில் பெருமளவு உண்மை இருக்காது.

மேலும் தேய்வீதமான விளைவுகளை பொருட்கள் சேவைகள் வரிமுறை ஏற்படுத்த முடியிம் எனக் கருதப்படுகின்றது. அதாவது செல்வந்தர்கள், வறியவர்கள் என்ற வேறுபாடின்றி இவ்வரி சம அளவில் அறவிடப்படுவதனால் வறியவர்கள் சார்பு ரீதியாக கூடுதலாக வரிச்சுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்படும் என்பதாகும். இதற்காக வரிவிலக்களிப்புக்களை மேற்கொள்வதோடு பல்வேறு பொருத்தமான வரி வீதங்களை நிர்ணயிக்க முடியும் எனக்கருதப்படுகிறது. ஆனால், இது வேறுசில பிரச்சினைகளை தோற்றுவிக்க முடியும். வரிவிலக்குத் தொகைகயினுடன் உற்பத்தியாளர்கள்தமது வரிவருமானத்தை மறைப்பதற்கு முயற்சிக்கலாம். என்றாலும் இவ்வரிமுறை குறைந்த வரிவீதத்துடன் பரந்தளவான வரிவருமானத்தைப் பெற்றுத்தருவதோடு உயர்ந்த செயற்பாட்டுடன் சீராக நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையக்கூடும். மேலும் நிர்வாக முறையினை முன்கொண்டு செல்வதற்கு இவ்வரிமுறை உதவுவதோடு வரிக்குறிப்புத்தன்மையையும் குறைக்கும் என எதிர்பாக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து நாடுகளினதும பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைவதில் அந்நாட்டின் அரசிறை முக்கிய பங்கு வகிக்கின்றது. குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை அரசிறையானது பெருமளவு வரிவருமானத்திலேயே தங்கி இருப்பதனால் அதனை அளவிடுவதற்கு சிறந்த கருவி ஒன்று அவசியமானதாகும். இந்த வகையில் பல்வேறு துறைகளில் பொருட்கள், சேவைகள்மீதானவரி பலநாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் சேவைகள்மீதான வரி வரிகுறிப்பின்மை, அதிகரிக்கும் செயற்றிறன், நடுநிலைமைத்தன்மை போன்ற பல சாதகமான விளைவுகளைக் கொண்டு காணப்படுகின்ற போதிலும், தேய்வீதமான விளைவுகள், பணவீக்கம் போன்ற பல பாதகமான விளைவுகளையும் கொண்டுள்ளது. இதனை நன்கு திட்டமிட்டு பொருளாதார வளர்ச்சியை பாதிக்காத வகையில் அமையும் போது அரசிறை மூலம் சமூக நலனை அதிகரிப்பதால் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை அடையக்கூடியதாக இருக்கும்.

உசாத்துணை நூல்கள் :

மத்திய வங்கி ஆண்டறிக்கை
பொருளியல் நோக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்
## (Economic Growth and Development)

(செல்வன் க. கமலாகரன், வர்த்தக மாணவன் – உயர்தரம் 1998)

பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி பற்றிய சிந்தனைகள் 1950 களைத்தொடர்ந்து வந்த காலப் பகுதிகளிலேயே பிரபல்யம அடையத்தொடங்கின. 1950 கள் 1960 களில் இப் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பன ஒரே கருத்திலேயே பயன்படுத்தப்பட்டன. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அபிவிருத்தி என்பது ஒரு பொருளாதார செயன் முறையாக மட்டுமே கருதப்பட்டமை.

2. ஆரம்பத்தில் முயற்சியாளர் குழாமிடம் செல்லும் வளர்ச்சியானது. புதிய முதலீடுகள், வேலைவாய்ப்புக்கள், வருமானப் பரம்பலின் மாற்றம் என்பனவற்றின் ஊடாக சகலரையும் சென்றடையும் என எதிர்பாத்தமை.

3. புதிதாக சுதந்திரம் பெற்ற குடியரசுகள் மேற்கொண்ட நலச்சேவைகள் அதாவது இவற்றின் வரி மானிய செயன்முறைகள்.

எனினும் பல நாடுகளின் அனுபவங்கள் இதனைப் பொய்ப்பித்தமையால் வளர்ச்சியினின்றும் அபிவிருத்தி வேறுபட்டதென்றும் அபிவிருத்தியின் ஒரு கூறாக மட்டுமே வளர்ச்சி காட்டப்படலாம் எனவும் 1970 களைத் தொடர்ந்து காலங்களில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### பொருளாதார வளர்ச்சி

பொருளாதார வளர்ச்சி என்பது மொத்த மெய்த்தேசிய உற்பத்தியில் ஏற்படும் தொடர்ச்சியான வளர்ச்சியாகும். இது ஒரு நீண்டகாலச் செயற்பாடாகும். இவ்வளர்ச்சியானது நேர்ப் பெறுமானம் கொண்டதாகவும இருக்க வேண்டும். மேலும பொருளாதார வளர்ச்சி என்பதை விரிவாக நோக்கும்போது சனத்தொகை வளர்ச்சி வீதம், உற்பத்தித் திறன் என்பனவும கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் பொருளாதார வளர்ச்சியின் மறைமுக எதிர்பார்க்கையாக வாழ்க்கைத்தர மேம்பாடு உள்ளது. எனவே வாழ்க்கைத்தர மேம்பாட்டினை அடைவதற்கு சனத்தொகை வளர்ச்சி வேகத்தை விட உற்பத்தி வளர்ச்சி வேகம் அதிகமாக காணப்பட வேண்டும். அத்துடன் உற்பத்தித்திறன்அதிகரிப்பு என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். உற்பத்தித் திறன் என்னும போது தொழிற்நுட்ப செயற்பாடு மூலதன உருவாக்கம் என்பனவும் முக்கியமானவையாகும். இவற்றின் மூலமாக தலா பொருளாதார வளர்ச்சி ஒன்று தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகள்

பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை இரு வகைப்படுத்தலாம் :

1. உற்பத்திக் காரணிகளின் உபயோகம் அதிகரித்தல்.
2. உற்பத்திக் காரணிகளின் வினைத்திறனை அதிகரித்தல்.

உற்பத்திக் காரணிகளின் பிரயோகத்தினை அதிகரித்தல் என நோக்கும் போது :

1. மொத்த முதலாக்கத்தை அதிகரித்தல்
2. உற்பத்தியில் நேரடியாக பங்களிப்புச் செய்யும் வசதிகளை ஏற்படுத்தல். அதாவது பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல். கைத்தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்புகள், சமூக நல சேவைகளை அதிகரித்தல். பொதுப்பணிகள் மேற்கொள்ளப்படுதல். பொருளாதார கீழ்க்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் - அதாவது போக்குவரத்து, துறைமுகம், தொடர்பு, மின்சாரம், நீர்ப்பாசனம் போன்றவற்றினை வழங்கல்.
3. சிறந்த சந்தைப் பொருளாதார முறைமையினைப் பின்பற்றல்.
4. வெளிநாட்டு நிதி மூலதனத்தினை பெற்றுக்கொள்ளல்
5. மனித மூலதன வளர்ச்சியை (கல்வி, சுகாதாரம்) போன்றவற்றின் பயன்பாட்டை அதிகரித்தல்.
6. முயற்சியாண்மையினை ஊக்குவிக்கும் வகையிலான நடவடிக்கைகள்.

உற்பத்திக் காரணிகளின் வினைத்திறன் அதிகரித்தல் எனும் போது

1. மனித திறன்கள் அடங்கிய மனித மூலதனத்தை அதிகரித்தல்
2. தொழில்நுட்ப முன்னேற்றம் பயன்பாடும்
3. முகாமைத்துவம்

போன்ற வழிகளைக் குறிக்கும்.

பொருளாதார வளர்ச்சியை அளவிடும் அளவுகோல்

1. மொத்த தேசிய உற்பத்தி
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி

ஊழிய இடப்பெயர்வும் நகராக்கமும் மாதிரியும் :

விவசாயத்துறையில் ஊழியத்தின் வினைத்திறன் குறைவடைதல் காரணமாக இங்கு காணப்படும் மேலதிக ஊழியர்கள் கைத்தொழில் சேவைத் துறைகளை நோக்கி இடம் பெயருவர். இதனால் நகராக்கம் ஏற்பட்டு இதனுடன் இணைந்து பொருளாதார வளர்ச்சி இடம்பெறும்.

( ) தொழிற்துறை முகாமைத்துவ ரீதியான முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வறுமை ஒழிப்பு இடம்பெறும். இது வருமான பரம்பலில் தங்கியுள்ளது.

பொருளாதார வளர்ச்சியானது பொருளாதாரக் காரணிகளிலேயே நேரடியான தொடர்பினைக்கொண்டுள்ளது. ஆனால் சமூக வளர்ச்சி என்பது மறைமுகக் காரணியாகவே செயற்படுகின்றது. எனினும் ஒரு நாட்டினது முன்னேற்றத்தில் பொருளாதாரக் காரணிகள் மட்டுமன்றி பொருளாதாரமற்ற காரணிகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை மறுத்தல் இயலாததாகும்.

**அபிவிருத்தி**

அபிவிருத்தி என்னும் போது அது பொருளாதார வளர்ச்சியைப் போன்ற குறுகிய நோக்கமுடைய தொன்றல்ல. அபிவிருத்தி பற்றிக் காலத்துக்கு காலம் பல வரைவிலக்கணங்கள் பொருளியலாளர்களினால் முன் வைக்கப்பட்டது. அதாவது உற்பத்தி அதிகரிப்பு, தொழில்நுட்ப மாற்றம், நிறுவனக் கட்டமைப்பு மாற்றம், வறுமை ஒழிப்பு, வேலையின்மை குறைதல், வருமானச் சமமின்மையைக்குறைத்தல், வாழ்க்கைத்தர உயர்வு, வினைத்திறன் அதிகரிப்பு, சமூக கலாசார அம்சங்களில் ஏற்படும் மாற்றம், நிலைய வேறுடைய தன்மை போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதான ஓர் பல் பரிமானச் செயற்பாடு எனக்குறிப்பிடப்பட்டது.

**அபிவிருத்திப் பொருளியலின் தோற்றம்**

அபிவிருத்திப் பொருளியலின் தோற்றத்தினை தூண்டிய காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம் :

1. சர்வ உலகுக்கும் பொருந்தக்கூடியதாகக்காணப்பட்ட சமூக விஞ்ஞானம் என்ற பொருளியலில் காணப்பட்ட குறைபாடு.
2. அரசியல்நிலையிலிருந்து தோற்றம பெற்ற காரணியான குடியேற்ற நாட்டு வாத முடிவு.
3. இதுவரை இருந்த பொருளாதார அமைப்புக்கள் எதிர்நோக்கிய பிரச்சனையிலிருந்து முற்றிலும் வேறுபாடான பிரச்சனைகளை குடியேற்ற நாடுகள் எதிர்நோக்கியமை. உதாரணம் : வறுமை, மூலதனப்பற்றாக்குறை, திறமையின்மை.
4. 1930 களில் உலகப் பெரு மந்தத்துடன் தோற்றம் பெற்ற கெயின்சியப் பொருளாதாரம்.

போன்றவற்றினை முக்கியமாக குறிப்பிடலாம்.

இக்காரணிகளே அபிவிருத்திப்பொருளியலின் உள்ளடக்கத்தினையும் தீர்மானிப்பவையாக காட்டலாம். இந்தவகையில் அபிவிருத்திப்பொருளியலின் நோக்கங்களாக பின்வருவனவற்றைக்குறிப்பிடலாம்.

**1. பொருளாதார வளர்ச்சி :**

இது பொருளாதார வளர்ச்சி வீதம் மூலம் கணிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **வாழ்க்கைத் தரம் :**

0 இது மானிட அபிவிருத்திச் சுட்டெண் (HDI)

0 பௌதீக வாழ்க்கைப்பண்புச் சட்டெண் (PQLI)

0 கல்விச் சுட்டெண்

0 போஷாக்குச் சுட்டெண் போன்றவற்றின் மூலம் கணிப்பிடப்படும்.

3. **வறுமை நிலை :**

இது சனத்தொகையும் வருமான மட்டமும் என்பதன் மூலம் கணிப்பிடப்படும்.

4. **தொழில்வாய்ப்பு:**

தொழில் செய்யும் வீதம், வேலையின்மை கீழ் உழைப்பு என்பதன் மூலம் அளவிடப்படும்.

5. **வருமானப்பரம்பல் :**

லோறன்ஸ்வளையி, கினிக்குணகம் என்பதன் மூலம் அளவிடப்படும்.

6. **நியாயத்துவம் :**

இது வருமான ஏற்றத்தாழ்வுகள் மூலம் கணிப்பிடப்படும்.

7. **பேண்தகு அபிவிருத்தி :**

சூழல் பாதுகாப்பும் கொள்கைகளும், நுட்பங்களும் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன என்பதனைக் கொண்டு கணிப்பிடப்படும்.

இவையே அபிவிருத்தி பொருளியலின் நோக்கங்களாக குறிப்பிடத்தக்கவை ஆகும்.

தேசிய வருமானத்தின் வருடாந்த வளர்ச்சி வேகம்
ஆள்வீத தேசிய உற்பத்தி
ஆள்வீத வருமானம்
ஆள்வீத தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வேகம்
சென்மதி நிலுவையின் சாதக பாதக நிலை.

**பொருளாதார வளர்ச்சியின் மூலம ஏற்படும் நன்மைகள்:**

(1) உற்பத்தியின்இயலளவு பெருக்கமடையும்

(2) உற்பத்திக்காரணிகளின் உபயோகம அதிகரிக்கும்

(3) கட்டமைப்பு மாற்றமடையும் இது 3 வழிகளில் ஏற்படும்

**(அ) உற்பத்திக்கட்டமைப்பு :**

உற்பத்திக்கட்டமைப்பு எனும் போது பொருளாதாரத்தில் விவசாயத்துறையினரின் உற்பததி குறைவடைந்து, கைத்தொழில்ப்பொருட்களின் உற்பதி அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) **தொழில் வாய்ப்பு :**

விவசாயத்துறையில் தொழில்வாய்ப்புக்களின்சார்பளவுப்பங்களிப்பு குறைவடைந்து கைத்தொழில் மற்றும் சேவைத்துறைத்தொழில் வாய்ப்புக்களின்பங்களிப்பு அதிகரிக்கும்.

(இ) **வருமானக்கட்டமைப்பு :**

வருமானக்கட்டமைப்பு எனும் போது கைத்தொழில் சேவைத்துறையில் ஈடுபட்டோரின் வருமானம் அதிகரிக்க விவசாயத்துறையில் ஈடுபட்டோரின் வருமானம் குறைவடையும். இதனால் ஆள்வீத வருமானம் அதிகரிக்கும்.

**பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும் :**

மக்களின் உயர்ந்த வருமான மட்டங்களின் அடிப்படையில் உணவுப் பொருட்களின்வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி குறைவடையும். கைத்தொழில்ப் பொருட்கள் சேவைகளின் வருமானம சார் கேள்வி நெகிழ்ச்சி குறைவடையும்.

**குறைவிருத்தி :**

குறைவிருத்தி என்பதனை அடையாளம் காணும் போதே அபிவிருத்தியின்தேவை என்பதும் உணரப்படுகின்றது. இந்தவகையில் குறைவிருத்தி என்பதனை நோக்கும் போது ஆரம்பகாலங்களில் ஒரு நாட்டின்மனித பௌதிக வளங்களின் குறைபாவனை அதாவது உத்தம்டத்திற்கு குறைவான பாவனை குறைபாவனை எனப்படுகின்றது. ஆனால் உத்த மட்டம் என்பது குறித்த பல விவாதங்கள் எழுப்பப்பட்டமையால்இது குறைவிருத்தி என்பதனை வெளிப்படுத்தும் பூரண வரைவிலக்கணமாகாது எனபதல் குறைவிருத்தி என்பது பின்வரும் பண்புகளைக் கொண்டதாக அமையும் எனக் குறிப்பிடப்பட்டது.

1. பொருட்கள் சேவைகளின் உற்பத்திக் குறைவு
2. வாழ்க்கைத்தரக்குறைவு
3. வறுமையும் வருமானச் சமமின்மையும்
4. வறுமையும் வருமானச் சமமின்மையும்
5. நவீன அரசாங்கங்கள், நிறுவனங்கள் முகவர்களது தீர்மானக் கொள்கைகளில் காணப்படும் திறமையின்மை.

இங்கு அபிவிருத்திப்பொருளியலின் உள்ளடக்கத்தினையும குறைவிருத்தி என்பதனையும நோக்கும்போது அது குறைவிருததி நாடுகளின் அபிவிருத்தி கருதியே எழுதப்பட்டது என்பது வெளிப்படையாகும். எனவே குறைவிருத்தி நாடுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டவையாகும்.

1. குறைந்த வாழ்க்கைத்தரம்
2. குறைந்த உற்பத்தித்திறன்
3. முதலாம் தர பொருட்களின் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் தங்கியிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கைத்தொழிற்துறை ஆரம்பநிலையில் [illegible]
5. [illegible] நாடுகளில் தங்கியிருத்தலும் அவற்றின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் [illegible] நாடுகள்.
6. வேலையின்மை, [illegible] வளங்களை [illegible] பயன்படுத்த முடியாமை [illegible]

குறைவிருத்தி நாடுகளின் குறைவிருத்திக்கான காரணங்கள் :

1. மனித, பௌதீக வளங்களின் [illegible] பாவனையின்மையும், தொழில்நுட்ப பின்னடைவும்
2. [illegible] கிரமமான [illegible]
3. வெளிநாட்டு பொருளாதாரத்தில் [illegible] சுயமின்மையும் இருப்புக்களின்மையும்.
4. குறைந்த வருமானத்தினை [illegible] ஏற்படுத்தும் நச்சுவட்டச் செயற்பாடு
5. சமூக, அரசியல் [illegible]
6. கீழ்க்கட்டுமான வசதிகள், சுகாதாரம் [illegible] போன்றவற்றின் குறைவு
7. [illegible] குறைபாடுகள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

அபிவிருத்தியினை அளவிடும் குறிகாட்டிகள்

(அ) பொருளாதார வளர்ச்சி :
இங்கு பொருளாதார வளர்ச்சி [illegible] மொத்த தேசிய உற்பத்தி [illegible] அதிகரித்துச் செல்வதைக் குறிக்கும்.

(ஆ) வறுமைக் குறிகாட்டி :
இங்கு 1. சார்பு வறுமை
2. நேரடி வறுமை
என்பன முக்கியமானதாக கொள்ளப்படும்.

(இ) தொழிலின்மை :

$$\text{இங்கு 1. வேலை வாய்ப்பு வீதம்} = \frac{\text{தொழில் வாய்ப்பு பெறுவோர்}}{\text{சனத்தொகை}} \times 100$$

$$\text{2. வேலையின்மை வீதம்} = \frac{\text{வேலை தேடுவோர் எண்ணிக்கை}}{\text{ஊழியப்படை}} \times 100$$

3. [illegible]
[illegible] குறைந்த வேலை [illegible]

[illegible] அளவிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) *நியாயத்துவம் :*

இது தீவிரமான வருமான ஏற்றத்தாழ்வுகள் காணப்படாத நிலையைக் குறிக்கும்.

(உ) *வருமானப்பரம்பலின் சமத்துவம் :*

இது 1. சார்பு வருமானப்பரம்பல்
2. முழுவருமானப்பரம்பல்
3. லோறன்ஸ் வளையி
4. கினிக்குணகம்

போன்றன மூலம் அளவிடப்படும்.

(ஊ) *வாழ்க்கைத் தரம் :*

இது 1. பௌதீக வாழ்க்கைச்சுட்டெண்
2. மானிட அபிவிருத்திச் சுட்டெண்
3. கல்விச் சுட்டெண்
4. போசாக்குச் சுட்டெண்
5. சுகாதாரம்
6. குடியிருப்பு வசதிகள்

என்பதன் மூலமாக அளவிடப்படும்.

(எ) *நிலுவை பேறுடைய அபிவிருத்தி :*

இங்கு 1. சூழல் பாதுகாப்பு
2. தர உயர்வுகள்
3. தொழில்நுட்ப பாவனை
4. விசேட தேவைகளுக்கேற்ப வடிவமைத்தல்

போன்றன முக்கிய அம்சங்களாக உள்ளன.

எனவே அபிவிருத்தியின்முக்கிய குறிகாட்டிகளாக இவற்றைக் கருதலாம்.

இங்கு நாம் இதுவரை நோக்கியவற்றிலிருந்து அபிவிருத்தி என்பதை சுருக்கமாகக்குறிப்பிடுவோமாயின்அபிவிருத்தியின் ஓர் அங்கமாகவே வளர்ச்சி என்பது காணப்படுவதுடன்அபிவிருத்தியானது ஓர் பரந்துபட்ட செயன்முறையாகவும் காணப்படுகின்றது. இது குறைவிருத்தி நாடுகளின் எழுச்சியுடன்தொடர்புபட்டதாகவும் அரசியல் பொருளாதார, சமூக, கலாசார பண்பாட்டுச்சங்கங்களையும், நிறுவன ரீதியான, பொருளாதார, பொருளாதாரமற்ற காரணிகளையும் உள்ளடக்கிய செயன்முறையாகவும் இச் செய்முறையானது நிலைத்து நிற்கக்கூடிய தன்மை கொண்டதாகவும் அமைவதே அபிவிருத்திச் செய்முறையாகக்கொள்ளப்படுகின்றது.

அபிவிருத்தியின் வெற்றி தோல்வியானது தனியே ஒரு நாட்டின்தேசிய அபிவிருத்தியுடன்மட்டுமன்றி, சர்வதேச உறவுகள், வர்த்தக ஆதிக்கம்போன்ற காரணிகளிலும் தங்கியுள்ளதெனலாம். ஏனெனில் குறைவிருத்தியின் நச்சுவட்டத்தை உடைத்தல் என்பதில் சர்வதேச உறவுகள் முக்கியம் பெறுவதனாலும் இன்றைய பொருளாதார செயற்பாடுகள் யாவும நாடுகளுக்கிடையிலான சர்வதேச உறவுகள் மூலமே மேற்கொள்ளப்படுவதனாலும் அபிவிருத்தி என்பது சர்வதேச உறவுகளில்தங்கியுள்ளது என்பது மிகையான கருத்தாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூலிக் கிரயம் - Labour Cost

**செல்வன் ஆர். வித்தியானந்தன் - வர்த்தகம் - உயர்தரம் 1998**

### தொழிலாளருக்கான ஊதியம் - Labour Remuneration

- உற்பத்தி நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆளணியினரை, பதவிகளை முகாமை திட்டமிட்டுக் கொள்ளும். அதற்கேற்ப உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.
- ஒரு பதவி ஏற்படுத்தப்படும் போது அதற்குரிய கல்வி / சம்பளமும் திட்டமிட்டு அமைக்கப்படுகின்றது.

### கூலிக்கிரயம் - Labour Cost

- நிறுவனம் அல்லது காரியாலயம் என்பவற்றில் ஈடுபட்டுள்ள கூலியாட்கள் வழங்கும் உழைப்புக்காக அல்லது சேவைக்காக நேராக / மறைமுகமாக செய்கின்ற கொடுப்பனவுகளே கூலிக் கிரயம் ஆகும்.

### கூலிக் கிரயத்துள் அடங்குபவை

- கூலிக் கிரயத்தினுள் பின்வரும் கொடுப்பனவுகள் அடக்கப்படலாம்:
  1. ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்
  2. நியதிச்சட்ட ரீதியான கொடுப்பனவுகள்

### ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்

ஊழியர்கள் தமது நியம வேலை நேரத்தினுள் / மேலதிக நேரத்தில் வேலை செய்ததற்காக பெற்றுக் கொள்ளும் சகல பெறுவனவுகளும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுக்குள் அடக்கப்படும். அவையாவன :

1. நேர்கூலிக்காக கொடுக்கப்பட்ட அடிப்படை சம்பளம்
2. மறைமுகக் கூலிக்காக கொடுக்கப்பட்ட அடிப்படை சம்பளம்
3. வேறு மேலதிக கொடுப்பனவுகள்
4. மேலதிக நேர வேலை சம்பளம்
5. உபகார சம்பளம்.

### நியதிச் சட்ட ரீதியான கொடுப்பனவு

- ஒரு ஊழியரை வேலைக்கு அமர்த்துவதால் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளைத் தவிர நியதிச்சட்ட முறையான சில கொடுப்பனவுகளையும் நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. இவை சட்டத்தால் வரையறுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமாக இக்கொடுப்பனவுகள் ஊழியர்கள் பெறும் சம்பளத்தினை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டு வரையறுக்கப்படுகின்றது. அவை :

1. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு
2. ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு
3. பணிக் கொடைகள்

**ஊழியர் சேமலாபநிதி** EPF

- இது ஊழியரின் மொ/உழைப்பின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. மொ/உழைப்பினுள் மேலதிக நேர கொடுப்பனவுகள், உபகாரப் பணம் என்பன சேர்க்கப்படக்கூடாது. சம்பளங்களும் படிகளும் ஏனைய படிகளும் மட்டும் சேர்க்கப்படும்.

- தொழில் கொள்வோன் குறைந்தது 12%, ஊழியர் 8% இத் திட்டத்திற்கு செலுத்துதல் வேண்டும். நிறுவனம் இவ்வீதத்தினை விட கூடுதலாக செலுத்த விரும்பினால் செலுத்த முடியும். ஆனால் இவ் விகிதாசாரம் 3 : 2 மாறுதல் கூடாது.

**ஊழியர் நம்பிக்கை நிதியம்** ETF

- இதுவும் ஊழியனின் மொ/உழைப்பின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டியதொன்றாகும். ஆயினும் தொழில் கொள்வோன் மட்டும் 3% இத்திட்டத்திற்கென செலுத்துதல் வேண்டும். இத்திட்டத்திற்கு ஊழியனின் பங்களிப்பு இல்லை.

**பணிக்கொடை** Gratuity

ஒரு நிறுவனத்தில் தொடராக 5 வருடத்தினை பூர்த்தி செய்த ஒவ்வொரு ஊழியனும் இப்பணிக்கொடைக்கு உரித்துடையவர்கள் ஆகின்றனர். ஒரு ஊழியர் இறக்கும் போது / ஓய்வு பெறும்போது / வேலையைவிட்டு விலகும்போது இப்பணிக் கொடை பெறமுடியும். ஊழியத்தின் இறுதி மாதச் சம்பளத்தின் அரைவாசியினை அவ் ஊழியன் பூர்த்தி செய்த வருடங்களால் பெருக்குவதன் மூலம் பணிக்கொடை கணித்துக் கொள்ளப்படும்.

$$\text{பணிக்கொடை} = \frac{\text{இறுதி மாதச் சம்பளம்}}{2} \times \text{பூர்த்தி செய்த வருடங்கள்}$$

**ஊழியர் சார்பாக கூலிக் கிரய கட்டுப்பாட்டில் கவனிக்க வேண்டியவை**

1. சரியான ஆட்சேர்ப்பு, தேர்ந்து எடுத்தல், வேலையில் அமர்த்தல், பயிற்சி அளித்தல் முறைகள்
2. திருப்திகரமான சம்பள முறை
3. திருப்த்திகரமான வேலைச்சூழல்
3. தொழிலாளரின் விளைவினை அளவிடும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூலிக் கிரயக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்**

1. நிறுவனங்களின் மொ/உற்பத்தி கிரயத்தில் குறிப்பிடத்தக்க அளவு கூலிக் கிரயமாக காணப்படுவதால் கூலிக் கிரய கட்டுப்பாடு அவசியமாகிறது.
2. கூலியின் வினைத்திறன் அ/தி அடைந்தால் உற்பத்தி அதிகரிப்பதோடு அலகுக்கான கூலிக் கிரயமும் குறைவடையும்.
3. கூலிப் புரள்வினை குறைத்து கொள்வதற்கு கூலிக்கிரய கட்டுப்பாடு அவசியம்.
4. ஒரு அலகுக்கான கூலிக் கிரயத்தினை காண்பதற்கு கூலிக்கட்டுப்பாடு அவசியம்.

**உழைப்புக் கிரயத்துள் அடங்கும் பிரதான அறிக்கை அம்சங்கள்**

1. ஊழியன் தோற்றியிருந்த காலத்துக்கான அறிக்கை / நேரப்பதிவை மேற்கொள்ளல்
2. தொழில்பட்ட காலப் பதிவு அறிக்கை/வேலை நேரப்பதிவை மேற்கொள்ளல்.

**ஊழியரின் தோற்றியிருந்த காலத்திற்கான அறிக்கை**

ஊழியன் வேலைக்கு வருகை தரும் நேரத்தினையும் வேலையை விட்டு புறப்படும் நேரத்தினையும்பதிவு செய்தல் தொடர்பானது. பிரதானமாக இது தொழீல்சாலைக் கதவடியில் வைக்கப்படும். இது சம்பந்தமான பலவிதமான முறைகள் பயன்படுகின்றன.

| | | |
|---|---|---|
| உ+ம் : வரவு இடாப்பு | - | Attendance Register |
| நேரம் பதியும் மணிக்கூடு | - | Clock Machine |
| டிஸ்க் முறை | - | Disc Method |

**வரவு இடாப்பு**

❒ இவை தொழில்சாலையின் நுழைவாயிலில் வைக்கப்படுகின்றன. இவ் வரவு இடாப்பினை கண்காணிப்பதற்கென ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருப்பார். ஊழியர்கள் வேலைக்கு வருகை தந்த நேரத்தினை எழுதி தமது கையொப்பத்தை இட்டுக் கொள்வார். முகாமையினால் தீர்மானிக்கப்பட்ட நியம நேரத்திற்கு பின் வருகை தருவோர் சிவப்பு கோடிற்குக் கீழ் கையொப்பமிடுவர். ஊழியர்கள் வேலையை விட்டு வெளியேறும் போதும் தமது கையொப்பத்துடன் நேரத்தினையும் குறித்து கொள்வர். நாளாந்தம் பொறுப்பான உத்தியொகத்தரால் பதிவுகள் மூடப்படும்.

**நேரம் பதியும் மணிக்கூடு**

❒ இது கைப்பதிவுக்கு பதிலாக இயந்திரமயப்படுத்தப்பட்ட நேரப்பதிவு முறையாக காணப்படுகின்றது. இதனால் சரியான நேரத்தையும் கால விரயத்தையும் தவிர்க்கக்கூடியதாக இருப்பினும் இதற்கென ஓர் நேரப்பதிவாளரை நியமித்தல் வேண்டும். இல்லையேல் பல ஊழல்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகிவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ ஒவ்வொரு ஊழியர்களுக்கும் தனித்தனி நேரப் பதிவு அட்டவணைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன்தனிதனி இலக்கங்களும் வழங்கப்படுகின்றன. அட்டைகள் நேரப் பதிவாளரின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படும். ஒவ்வொரு நாளும் வருகைதரும் நேரத்திலும் புறப்படும் நேரத்திலும் குறித்த இயந்திரத்தில் அவ் அட்டவணையை செலுத்தி நேரப்பதிவு செய்யப்படும். அவ் அட்டைக்குரிய ஊழியர் அந்நேரத்திற்கு பக்கத்தில் கையொப்பமிடும் முறைகளும் உண்டு. மணிக்கூட்டு இயந்திரத்தில் பொறிக்கப்படும் நேரம் நிறங்களில் காணப்படும். நியம நேரத்தினுள் வருகை தந்து பின் புறப்பட்டு சென்றால் நீல நிறத்திலும் பிந்தி வருவோர்,இடையில் செல்வோல் மேலதிக வேலை செய்வோரின் நேரங்கள் பதிவதற்கு சிவப்பு நிற நேர இலக்கமும் பொறிக்கப்படுகிறது.

❒ இவ்வாறு பொறிக்கப்படுவதால் ஊழியர் நேரப்பதிவேட்டினை பராமரிக்கும் எழுதுவினைஞருக்கு கணிப்புக்களை மேற்கொள்ள வசதியாக உள்ளது.

**மணிக்கூட்டு கடுதாசி நாடா**

❒ நேரம் பதியும் மணிக்கூட்டு முறையில் பல மோசடிகள் ஏற்பட வசதியாக இருப்பதனாலும் நேரப் பதிவாளரினை நியமிப்பதால் ஏற்படும் செலவினத்தை குறைத்து கொள்வதற்கும் மணிக்கூட்டு கடதாசி நாடாமுறை கொண்டுவரப் பட்டுள்ளது. இம்முறையில் ஊழியர்களுக்கு தனித்தனி அட்டைகள் வழங்கப்படுவதில்லை. இலக்கங்கள்மட்டும வழங்கப்படுகின்றது. குறித்த நேரப்பதிவு மணி இயந்திரத்தில் இடப்பட்டுள்ள கடதாசி நாடாவில் கையொப்பத்தினையும் ஊழியர்களுக்குரிய இலக்கத்தையம் இட்டு ப்திவு செய்வதற்காக பொருத்தப் பட்டுள்ள அழுத்யை அழுத்தினால் நேரப்பதிவு நடைபெறும்.

**டிஸ்க் முறை**

❒ ஒவ்வொரு ஊழியனுக்கும் ஒவ்வொரு வட்டத்தகடு கொடுக்கப்பட்டு அவை காலையில் முதலாவது சட்டத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும். தொழிற்சாலைக்கு கடமைக்கு வருமஊழியர்கள் தமக்குரிய தகட்டினை முதலாவது அடுக்கு சட்டத்தில்இருந்து இரண்டாவது அடுக்குச்சட்டத்திற்கு மாற்றி தொங்கவிடப்படுதல் வேண்டும். அதன் பின் நேரப்பகுதிகளயால் அவை எடுக்கப்பட்டு தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்படும். வேலை முடியும் நேரத்தில் அத்தகடுகள் நேரப்பதிவாளரினால் 2ம் அடுக்குச் சட்டத்தில் தொங்கவிடப்படும். வேலைமுடிந்து செல்லும் ஊழியர்கள் தமக்குரிய தகட்டினை 2வது அடுக்கு சட்டத்தில் இருந்து 1 வது அடுக்கு சட்டத்தில் தொங்க விட்டுக்கொள்வர்.

**தொழில் படு காலப்பதிவு அறிக்கை**

ஊழியர்கள் கடமைக்கு தோற்ற இருந்த கால அறிக்கைக்கு மேலதிகமாக ஊழியன் வேலை செய்தகாலம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறித்துக் கொள்ளப்படுவதுண்டு. இதற்காகப் பயன்படுத்தப்படும் அறிக்கைகள் செயற்படு காலப் பதிவு அறிக்கை என அழைக்கப்படுகிறது. இவ் அறிக்கை நிறுவனத்தினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலின் தன்மைக்கும் ஏற்ப வேறுபடுகின்றன. பின்வரும் செயற்படு காலப்பதிவு அறிக்கைகளை நிறுவனங்களில் காணமுடியும்.

1. நேர அட்டை
   (அ) நாளாந்த நேரத்தாள்
   (ஆ) வாராந்த நேரத்தாள்
2. வேலை அனுமதிச்சீட்டு
3. வேலைக்கிரய அட்டை
4. துண்டு வேலைச்சீட்டு
5. வேலை செய்யாது வீணான நேர அட்டை

**நாளாந்த நேர அட்டை**

❒ இந்த அட்டையினை சம்மந்தப்பட்ட ஊழியனே நிரப்பிக் கொள்கிறான். நாளாந்தம் ஒவ்வொரு வேலைக்கும் எடுத்து கொண்ட நேரத்தினை அறிக்கையிட்டு வேலை முகாரிக்கு கிரயத்தினை கணிப்பதற்காக உரிய ஊழியனால் அனுப்பப்படும் நேர அட்டையில் குறிப்பிட்ட முழு காலத்தையும் அவ் ஊழியன் வரவறிக்கையின் காலத்துடன் செம்மை செய்வதுடன் கூலி பயன்பாட்டின் வேறுபாடு குறைத்துக் கொள்ளப்படலாம்.

**நாளாந்த நேர அட்டை**

ஊழியர் பெயர் திகதி
கிரய நிலையம்/கிரய திணைக்களம்
நேர அட்டை இலக்கம் வாரம்

| வேலை கட்டளை இலக்கம் | செய்த வேலை | காலம் | | மணித்தியாலம் | | அங்கீகரிக்கப் பட்ட மணித்தியாலம் | வீகிதம் | கிரயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடங்கியது | முடிந்தது | சாதாரணம் | மேலதிகம் | | | |
| | | | | | | | | |

| | | |
|---|---|---|
| ........................ | ........................ | ........................ |
| ஊழியனின் / திணைக்கள எழுதுவினைஞரின் ஒப்பம் | வேலை வழங்குனரின் ஒப்பம் | கிரயம் கணித்த உத்தியோகத்தர் ஒப்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாராந்த நேரத்தாள்

❒ இதுவும் ஊழியர்களால் நிரப்பப்படவேண்டிய அட்டை ஆகும். நாளாந்தம் ஊழியர்களால் முடிக்கப்படும் வேலை நேரம் என்பவற்றை பதிவு செய்யும்படி ஊழியர் கோரப்படுகின்றனர். இது நாளாந்த நேரத்துண்டினை ஒத்திருந்தபோதிலும் கிரயக் கணிப்பு வேலைகளுக்காக வாராந்தம் அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு வேலைகளுக்கும் வேறுபட்ட நிறங்களைக் கொண்ட துண்டுகள் உபயோகிக்கப்படுகின்றது. இதனால் முடிக்கப்பட்ட வேலைகள் இலகுவில் இனம்காண முடிகிறது.

**வாராந்த நேர அட்டை**

| ஊழியர் பெயர்<br>கிரய நிலையம்/கிரய திணைக்களம்<br>நேர அட்டை இலக்கம் | | | | | | திகதி<br><br>வாரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | வேலை கட்டளை இலக்கம் | காலம் | | மணித்தியாலம் | | அங்கீகரிக்கப் பட்ட மணித்தியாலம் | விகிதம் |
| | | ஆரம்பம் | முடிவு | சாதாரணம் | மேலதிகம் | | |
| | | | | | | | |

| | | |
|---|---|---|
| ......................<br>ஊழியனின் / திணைக்கள எழுதுவினைஞரின் ஒப்பம் | ......................<br>வேலை வழங்குனரின் ஒப்பம் | ......................<br>கிரயம் கணித்த உத்தியோகத்தர் ஒப்பம் |

### வேலைச்சீட்டு

❒ இங்கு ஊழியனுக்கு ஒரு தடவை ஒரு துண்டுடே வழங்கப்படும். இது வேலை மேற்பார்வை யாளரால் வழங்கப்படும் போது இரு நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவையாவன :

1. செய்யவேண்டிய வேலை தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல்.
2. குறித்த வேலைக்காக செலவான நேரத்தை அறிக்கையில் பதிதல்.

அவ்வேலை முடிந்த பிறகு முடிவடைந்த நேரம் துண்டில் குறிப்பிடப்பட்டு இவ்வேலைப் பத்திரம் ஊழியனால் மேற்பார்வையாரிடம் சமர்ப்பிக்கப்படும். இங்கு முடிந்த நேரம் அடுத்த வேலைக்குரிய ஆரம்ப நேரமாக இருக்கும். இதனால் அடுத்த வேலைக்கான புதியவேலைத்துண்டு வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் புதிய வேலையினை உடனே தொடங்கவில்லையாயின் வேலை செய்யாது வீணான நேர அட்டையில் பதியப்படும். இவ்வாறு வேலையினை உடனே தொடங்க முடியாமைக்கு நிறுவன நிகழ்வுகளே (இயந்திர பழுது, மூலப்பொருள் இன்மை) காரணமாயின் ஒதுக்கப்படாத நேர அட்டையில் பதியப்படும்.

**வேலைச் சீட்டு**

| | |
|---|---|
| ஊழியர் பெயர்<br>திணைக்களம் | வேலை இலக்கம்<br>திகதி |
| இடத்தின் இலக்கம்<br>செய்றபாட்டு இலக்கம் | தொடங்கிய நேரம்<br>பூரணப்படுத்திய நேரம் |

| வேலை விபரம் | காலம் | | நேரம் | | விகிதம் | கிரயம் |
|---|---|---|---|---|---|---|
| | ஆரம்பம் | முடிவு | சாதாரணம் | மேலதிகம் | | |
| | | | | | | |

| | | | |
|---|---|---|---|
| ................<br>ஊழியனின் கையொப்பம் | ................<br>மேற்பார்வையாளர் ஒப்பம் | ................<br>பரிசீலனை செய்தவர் ஒப்பம் | ................<br>கிரயப் பிரிவு |

**வேலைக்கிரய அட்டை**

❒ ஒவ்வொரு வேலை தொடர்பாகவும் வேறுபடுத்தி தயார் செய்யப்பட்ட அட்டை இது. அதில் உரிய ஒவ்வொரு வேலைகளிலும் ஊழியர்கள் ஈடுபட்ட காலம் காட்டப்படும். அவ்வேலை முடிந்தபிறகு அந்த வேலைக்கு ஏற்பட்ட மொத்த கிரயம் அதன்மூலமாக கண்டு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேலைக் கிரய அட்டை

| | |
|---|---|
| வேலை இலக்கம் | வடிவ இலக்கம் |
| விபரம் | விஷேட ஆலோசனை |
| ஆரம்ப திகதி | பூரணப்படுத்திய திகதி |

| ஊழியர் இலக்கம் | திணைக் களம் | தொழிற் பாடு | காலம் | | மணித்தியாலம் | | விகிதம் | கிரயம் | எடுத்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரமபித்த | முடிந்த | சாதாரணம் | மேலதிகம் | | | |
| | | | | | | | | | |

தேவையான பொருள்

மொ/கூலிக் கிரயம்

| | | | |
|---|---|---|---|
| ................... | ................ | ................... | ................ |
| மேற்பார்வையாளர் ஒப்பம் | பரிசோதனை செய்தவர் ஒப்பம் | வேலை வழங்கியவர் ஒப்பம் | பரிசீலனை செய்தவர் ஒப்பம் |

### துண்டு வேலைச்சீட்டு

- உற்பத்தி செய்த அலகுகளுக்கேற்ப ஊழியர்களுக்கு கொடுப்பனவை செய்யும் போது அந்தந்த ஊழியர்கள் உற்பதி செய்த மொத்த உற்பத்தி அலகுகளின் தொகையை அறிக்கையிடுவதற்காக இந்த பத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் இங்கு உற்பத்தி செய்த அலகுகளின் அளவு மட்டுமல்ல அதற்கு எடுக்கப்பட்ட காலத்தையும் அறிக்கையிடுதல் முக்கியமாகும். சேமிக்கப்பட்ட காலதின் அடிப்படையில் உபகாரக்கொடுப்பனவுக்காகச் செலவிட்ட நேரத்தை அறிக்கையிடுவதற்கு இந்த அறிக்கை முக்கியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துண்டு வேலைச் சீட்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேலையாளர் பெயர் | | | பத்திர இலக்கம் | | |
| திணைக்களம் | | | எடுத்த நேரம் | | |
| திகதி | மொத்த உற்பத்தி அலகு தொகை | நிராகரிக்கப்பட்ட அலகு தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட அலகு தொகை | விகிதாசாரம் | அளவு |
| | | | | | |
| ஊழியன் ஒப்பம் | | | பரிசோதகர் ஒப்பம் | | |
| திணைக்கள எழுது வினைஞர் ஒப்பம் | | | மேற்பார்வையாளர் ஒப்பம் | | |
| வேலை வழங்குனரின் ஒப்பம் | | | கிரயகணிப்பு உத்தியோகத்தர் ஒப்பம் | | |

**வேலை செய்யாது வீணான நேரத்திற்கான அட்டை**

❒ இயந்திரம் இயங்க மறுத்ததால் அல்லது வேறு காரணங்களால் அல்லது ஊழியர் வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய்யாது இருந்தால் அக்காலங்களை அறிக்கை இடுவதற்காக ஒவ்வொரு ஊழியர் தொடர்பாகுவம் பேணப்படும் அட்டை வேலை செய்யாது வீணாண நேரத்திற்கான அட்டை ஆகும்.

## துண்டு வேலைச் சீட்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஊழியர் பெயர் | | | | திணைக்களம் | | |
| வேலை செய்யாத நேர அட்டை இல. | | | | முடிந்த நேரம் | | |
| திகதி | | | | | | |
| காரணம் | வீணான நேரம் | | | கிரயம் | | நிலையியற் கட்டளை இலக்கம் |
| | இருந்து | வரை | மொத்த மணித்தியாலம் | விகிதம் | பெறுமதி | |
| | | | | | | |

........................ வேலைவழங்குனர்/திணைக்கள எழுதுவினைஞர் ஒப்பம்

........................ கிரயக் கணிப்பு உத்தியோகத்தர் ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குடமை ஒன்றின் நிதியாண்டு காலப்பகுதியில் சேரும் விலகும் பங்காளருக்கான பற்று வட்டிக் கணிப்பீடு

செல்வன் **R.** நீச்சார்ட் லேபனான் ~ வர்த்தகம் , உயர்தரம் 98

**பங்குடைடம :**

"இலாப நோக்குடன் ஓர் பொதுவான முயற்சியில் ஈடுபடுகின்ற ஆட்களிடையே நிலவுகின்ற உறவு முறை பங்குடமை எனப்படும்" இதில் இழிவளவி இருவரும் உச்சளவு இருபது பேரும் பங்காளராக காணப்படுவார்கள். இங்கு இழிவளவு இரு பங்காளர் என்பதை 1890ம் ஆண்டு பங்குடமை சட்டமும், உச்சளவு இருபது பங்களாளர் என்பதை 1982ம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிச் சட்டமும் நிர்ணயிக்கின்ற சட்ட முறைத் தேவையாகும்.

இவ்வாறான பங்குடமையில் பங்காளர் பற்றுகின்ற பற்றுகளுக்கு வட்டி எதுவும் அறவிடப்படுவதில்லை என்பது சட்ட ஏற்பாடாகும். ஆனால் பங்குடமையில் பங்காளர் செய்து கொள்கின்ற ஒப்பந்தத்தில் பற்றுகூட்டி அறவிடுவது எனக் குறிப்பிட்டு இருப்பின், பங்காளரது பற்றுக்களான

1. காசுப் பற்றுக்கும்
2. பொருள் பற்றுக்கும்

குறிப்பிட்டு கூறப்படாதவிடத்து பற்று வட்டி அறவீடு செய்யப்படும்.

பங்காளர் பற்றுகின்ற பற்றானது எவ்வாறு இரண்டு வகையாக இருக்கின்றதோ அதேபோன்றுஅவற்றுக்கான கணிப்பீடுகளும் பொதுவாக இருவகையாக கணிப்பிடப்படும்.

1. சாதாரண பற்று வட்டிக் கணிப்பீடு
2. சராசரி பற்று வட்டிக் கணிப்பீடு

**சாதாரண பற்றுவட்டிக் கணிப்பீடு :**

நிதியாண்டு காலப் பகுதியில் பங்காளர் தமது சொந்த தேவை கருதி பற்றுகின்ற பற்றுக்கு கணிப்பிடப்படுகின்றது வட்டியே சாதாரண பற்று வட்டிக் கணிப்பீடு எனப்படும்.

உ+ம் : ஐங்கரன் பங்குடமையின் பங்காளரான A : B : C பின்வரும் தொகைகளைப் பற்றியிருந்தனர் : A : 6000 B : 5000 C : 4000

ஒப்பந்தம் : பற்றுக்களுக்கு 12% வட்டி அறவீடு செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று வட்டியை கணிப்பீடு செய்து நாட்குறிப்பு பதிவை காட்டுக :

**கணிப்பீடு :** A : 6000 x 12/100 = 720
B : 5000 x 12/100 = 600
C : 4000 x 12/100 = 480

**நாட்குறிப்பு :**

பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு : A : 720
B : 600
C : 480

இலாபநட்ட பகிர்வ கணக்கு செலவு 1800

உ+ம் : சிவன் பங்குடமையின் பங்காளரான X : Y : Z பின்வரும் திகதிகளில் 31/03/98 இல் முடிவுறும் காலத்தில் பற்றியிருந்தனர்.

X : 01.04.1996 = 10,000 Y : 01.07.1996 = 8000 Z : 01.01.1997 = 12,000

மேற்காட்டிய தரவு 31.01.97 ல் முடிவைடயும் ஆண்டுக்குரியது.

ஒப்பந்தம் : பற்றுக்கு 6% வட்டி அறவீடு செய்யப்படும்.
பற்று வட்டியை கணிப்பீடு செய்து நாட்குறிப்பு பதிவை காட்டுக.

**கணிப்பீடு :**

X : 10000 x 6/100 x 12/12 = 600
Y : 8000 x 6/100 x 9/12 = 360
Z : 12000 x 6/100 x 3/12 = 180

நாட்குறிப்பு :

பங்காளர் நடைமுறை கணக்கு வரவு : X : 600
Y : 360
Z : 180

இலாபநட்ட பகிர்வு கணக்கு செலவு : 1140

## சராசரிப் பற்று வட்டிக் கணிப்பீடு

பங்காளர் தமது சொந்த தேவைக்காக பற்றுகின்ற பற்றுக்கு சராசரியாக வட்டி கணிப்பீடு கணிக்கப்பட்டால் அது சராசரி பற்று வட்டிக் கணிப்பீடு எனப்படும். இது பின்வரும் இரு நிபந்தனையிலான பற்றுக்களாக அமைய வேண்டும்.

1. பற்றுக்கள் நிலையான தொகையாக இருத்தல்.
2. பற்றுக்கள்நிலையான காலப்பகுதியில் பற்றுதல்

இச் சராசரி பற்று வட்டிக் கணிப்பீடு பொதுவாக பின்வரும் பற்றுக்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது.

1. ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் சம தொகை பற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒவ்வொரு மாத நடுப்பகுதியில் சம தொகை பற்றுதல்

3. ஒவ்வொரு மாத இறுதியிலும் சம தொகை பற்றுதல்

4. [illegible]

5. ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சம தொகை பற்றுதல்.

**ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் சமதொகை பற்றுதல்:**

பங்காளர்கள் ஒவ்வொரு மாதத்திலும் 1ம் திகதி தமது சொந்த தேவைக்காக பற்றுவதைக் குறிக்கும் பற்று இதுவாகும். இது ஒழுங்கான கால இடைவெளியில் இடம்பெறும்.

உதாரணம் :

பரமேஸ்வரன் பங்குடமையின் பங்காளரான A : B : C ஆகியோர் பின்வருமாறு பற்றுக்களை பற்றியிருந்தனர்:

A : ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் 2000

B : ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் 1500

C : ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் 1000

மேற்காட்டிய தரவு 31.12.97 முடிவுற்ற ஆண்டுக்குரியது.

ஒப்பந்தம் : பற்றுக்கு 12% வட்டி அறவீடு செய்யப்படும்.

பற்றுக் கணிப்பீடு செய்து நாட்குறிப்பை காட்டுக :

கணிப்பீடு :

1. A இனது பற்று வட்டிக் கணப்பீடு

J 1st + F 1st + M 1st + A 1st + ...............D 1st

பற்று வட்டி

= 2000 + 12/100 x 12/12 + 2000 x 12/100 x 11/12 + 2000 x 12/100 x10/12.........2000 x 12/100x1/12

= 2000 x 12/100 [ 12/12 + 11/12 + 10/12 ............... 1/12]

= 2000 x 12/100 x 78/12     Sn = n/2 [a+b]     a = 12

$S_{12}$ = 12/2 [12 +1)     L = 1

= 2000 x 12/100 x 6 1/2     $S_{12}$= 6 x 3     n = 12

$s_{12}$ = 78

= 1560

2. B இனது பற்று வட்டிக் கணிப்பீடு

பற்றுவட்டி

= 1500 + 12/100 x 12/12 + 1500 x 12/100 x 11/12 + 1500 x 12/100 x10/12.........1500 x 12/100x1/12

= 1500 x 12/100 [ 12/12 + 11/12 + 10/12 .............. 1/12]

= 1500 x 12/100 x 8/12

= 1500 x 12/100 x 6 1/2

= 1170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. C இனது பற்று வட்டி கணிப்பீடு

பற்று வட்டி

= 1000 + 12/100 x 12/12 + 1000 x 12/100 x 11/12 + 1000 x 12/100 x10/12.........1000 x 12/100x1/12
= 1000 x 12/100 [ 12/12 + 11/12 + 10/12 ............... 1/12]
= 1000 x 12/100 x 8/12
= 1000 x 12/100 x 6 1/2
= 780

நாட்குறிப்பு : பங்களாளர் நடைமுறை கணக்கு வரவு :

A : 1560
B : 1170
C : 780

இலாபநட்ட பகிர்வு கணக்கு செலவு 3510

ஆகவே ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் சம தொகையாகப் பற்றப்படும் பற்று வட்டிக் கணிப்பீடு பின்வரும் சமன்பாட்டின் மூலம் காட்டப்படும்.

சமன்பாடு 1 :

பற்று வட்டி = ஒரு மாத பற்று × பற்று வட்டிவீதம் ×மாத அலகுகளின் எண்ணிக்கை/12

சமன்பாடு 2 :

பற்று வட்டி = ஒரு மாத பற்று × பற்று வட்டி வீதம் × 6 1/2

**ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் சம தொகை பற்றுதல். :**

பங்காளர் தமது சொந்த தேவைக்கான பற்றுக்களை மாதத்தின் நடுப் பகுதியில் பற்றியதற்கு கணிப்பிடப்படும் கணிப்பீடு இதுவாகும். இது ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் இடம்பெறும்.

உதாரணம் :

கந்தன் பங்குடமையின் பங்களாரான A : B : C ஆகியோர் பின்வரும் திகதியில் தமது பற்றுக்களை பற்றினர் :

| | | |
|---|---|---|
| A | ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் | 2000 |
| B | ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் | 1500 |
| C | ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் | 1000 |

மேற்காட்டிய தரவு 31.12.97 முடிவுற்ற ஆண்டுக்குரியது.

ஒப்பந்தம் : பற்றுக்கு 12% வட்டி அறவீடு செய்யப்படும்

1. ஆண்டுக்கான பற்று வட்டியினைக் கணிப்பீடு செய்க.
2. பற்று, பற்று வட்டிக்கான நாட்குறிப்பங பதிவை (காசு உட்பட) காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடு :

1. A இனது பற்று வட்டிக் கணப்பீடு

$J^{15th}$ + $F^{15th}$ + $M^{15th}$ + $A^{15th}$ + ..............$D^{15th}$

பற்று வட்டி

= 2000 + 12/100 x 11.5/12 + 2000 x 12/100 x 10.5/12 + 2000 x 12/100 x9.5/12.........2000 x 12/100x0.5/12
= 2000 x 12/100 [ 11.5/12 + 10.5/12 + 9.5/12 .............. 0.5/12]
= 2000 x 12/100 x 72/12 Sn = n/2 [a+b] a = 11.5
$S_{12}$ = 12/2 [11.5 + 0.5) L = 0.5
= 2000 x 12/100 x 6 $S_{12}$= 6 x 12 n = 12
$s_{12}$ = 72
= 1440

2. B இனது பற்று வட்டிக் கணிப்பீடு

$J^{15th}$ + $F^{15th}$ + $M^{15th}$ + $A^{15th}$ + ..............$D^{15th}$

பற்றுவட்டி

= 1500 + 12/100 x 11.5/12 + 1500 x 12/100 x 10.5/12 + 1500 x 12/100 x9.5/12.........1500 x 12/100x0.5/12
= 1500 x 12/100 [ 11.5/12 + 10.5/12 + 9.5/12 .............. 0.5/12]
= 1500 x 12/100 x 72/12
= 1500 x 12/100 x 6
= 1080

3. C இனது பற்று வட்டி கணிப்பீடு

பற்று வட்டி

= 1000 + 12/100 x 11.5/12 + 1000 x 12/100 x 10.5/12 + 1000 x 12/100 x9.5/12.........1000 x 12/100x0.5/12
= 1000 x 12/100 [ 11.5/12 + 10.5/12 + 9.5/12 .............. 0.5/12]
= 1000 x 12/100 x 72/12
= 1000 x 12/100 x 6
= 720

பற்று நாட்குறிப்பு : ஆண்டுக்கானது
பற்றுக் கணக்கு வரவு :

A : 2000 x 12 = 24000
B : 1500 x 12 = 18000
C : 1000 x 12 = 12000

காசு அல்லது வங்கி கணக்கு செலவு = 54000

பற்று வட்டிக்கான நாட்குறிப்பு :
பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு :

A : 1440
B : 1080
C : 720

காசு அல்லது வங்கி கணக்கு செலவு = 3240

ஆகவே ஒவ்வொரு மாத நடுப்பகுதியில் சமதமொகையாக பற்றப்படும் பற்றுவட்டிக் கணிப்பீடு பின்வரும் சமன்பாட்டின் மூலம காட்டப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமன்பாடு 1 :

பற்று வட்டி = ஒரு மாத பற்று × பற்று வட்டிவீதம் ×மாத அலகுகளின் எண்ணிக்கை/12

சமன்பாடு 2 :

பற்று வட்டி = ஒரு மாத பற்று × பற்று வட்டி வீதம் × 6

**ஒவ்வொரு மாத இறுதியிலும் சம தொகை பற்றுதல் :**

பங்காளர் தமது சொந்த தேவைக்கான பற்றுக்களை மாதத்தின் இறுதியில் பற்றியதற்கு கணிப்பிடப்படும் கணிப்பீடு இதுவாகும். இது ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் இடம்பெறும்.

உதாரணம் :

திருக்குமரன் பங்குடமையின் பங்களாரான A : B : C ஆகியோர் பின்வருமாறு தமது பற்றுக்களை பற்றினர் :

| | | |
|---|---|---|
| A | ஒவ்வொரு மாத இறுதியிலும் | 2000 |
| B | ஒவ்வொரு மாத இறுதியிலும் | 1500 |
| C | ஒவ்வொரு மாத இறுதியிலும் | 1000 |

மேற்காட்டிய தரவு 31.12.97 முடிவடையும் ஆண்டுக்குரியது.

ஒப்பந்தம் : பற்றுக்களுக்கு 6% வட்டி அறவீடு செய்யப்படும்

பற்று வட்டி கணிப்பீடு செய்து நாட்குறிப்புப் பதிவைக் காட்டுக :

கணிப்பீடு :

1. A இனது பற்று வட்டிக் கணப்பீடு

$J^{31st}$ + $F^{28th}$ + $M^{30th}$ + $A^{31st}$+ ...............$D^{31st}$

பற்று வட்டி

= 2000 + 6/100 x 11/12 + 2000 x 6/100 x 10/12 + 2000 x 6/100 x9/12.........2000 x 6/100x0/12
= 2000 x 6/100 [ 11/12 + 10/12 + 9/12 ............... 0/12]
= 2000 x 12/100 x 66/12 Sn = n/2 [a+b] a = 11
$S_{12}$ = 12/2 [11 + 0) L = 0
= 2000 x 6/100 x 5 1/2 $S_{12}$= 6 x 11 n = 12
$s_{12}$ = 66

= 660

2. B இனது பற்று வட்டிக் கணப்பீடு

$J^{31st}$ + $F^{28th}$ + $M^{30th}$ + $A^{31st}$+ ...............$D^{31st}$

பற்று வட்டி

= 1500 + 6/100 x 11/12 + 1500 x 6/100 x 10/12 + 1500 x 6/100 x9/12.........1500 x 6/100x0/12
= 1500 x 6/100 [ 11/12 + 10/12 + 9/12 ............... 0/12]
= 1500 x 12/100 x 66/12
= 1500 x 6/100 x 5 1/2
= 495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. C இனது பற்று வட்டிக் கணப்பீடு

$J^{31st}$ + $F^{28th}$ + $M^{30th}$ + $A^{31st}$ + ..............$D^{31st}$

பற்று வட்டி

=1000 + 6/100 x 11/12 +1000 x 6/100 x 10/12 + 1000 x 6/100 x9/12.........1000 x 6/100x0/12

= 1000 x 6/100 [ 11/12 + 10/12 + 9/12 .............. 0/12]

= 1000 x 12/100 x 66/12

= 2000 x 6/100 x 5 1/2

= 330

நாட்குறிப்பு :

பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு :

A : 660

B : 495

C : 330

பகிர்வுக் கணக்கு செலவு :

A : 660

B : 495

C : 330

ஆகவே ஒவ்வொரு மாத இறுதியிலும் சமதமொகையாக பற்றப்படும் பற்றுவட்டிக் கணிப்பீடு பின்வரும் சமன்பாட்டின் மூலம காட்டப்படும்.

சமன்பாடு 1 :

பற்று வட்டி = ஒரு மாத பற்று × பற்று வட்டிவீதம் ×மாத அலகுகளின் எண்ணிக்கை/12

சமன்பாடு 2 :

பற்று வட்டி = ஒரு மாத பற்று × பற்று வட்டி வீதம் × 5 1/2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர் சேரல் விலகலின் போதான பற்று வட்டிக் கணிப்பீடு

இதுவரை பங்காளர் ஒருவர் நிதியாண்டு முழுவதும் பங்குடமையில் நிலையாக அல்லது இடைவெளியில் நிலையான தொகைகளைப் பற்றிய போது அப்பற்றுக்களை வட்டிக் கணிப்பீடு பற்றி நோக்கினோம். இங்கு பங்காளர் சேரல் விலகல் இடம்பெறும் போது பற்று வட்டிக் கணிப்பீடு எவ்வாறு அமையும் என நோக்குவோம்.

உதாரணம் : "குமரக் குட்டி" எனும் பங்குடமை அமைப்பில் K மற்றும் R ஆகியோர் ஒப்பந்தத்தின் பேரில் பற்றுக்களுக்கு 12% வட்டி அறவீடு செய்வதென்ற பொது வாசகத்தைக் கொண்டுள்ளது. 31.12.98 இல் ஆண்டில் பங்காளர் மாற்றங்கள் காரணமாக இடம்பெற்ற ஒரு சில மாற்ற நடவடிக்கை வருமாறு :

31.03.98 இல் கால முடிவில் R இறந்து விட்டார். 01.04.98 இல் T என்பவர் பங்காளராகச் சேர்ந்தார். மேலும் 01.10.98 இல் P என்பவர் பங்காளராகச் சேர்ந்து கொண்டார்.

பங்காளர் ஒவ்வொருவரும் பங்குடமையில் ஒவ்வொரு மாதமும் 1000/- வைப் பற்றியிருந்தனர். பற்று வட்டிக் கணிப்பீடு பின்வருமாறு அமையும்.

பங்காளர் சேரல் விலகல் வருகையுடன் நிதியாண்டு காலப்பகுதி - கணக்கீட்டு நோக்கத்திற்காக பிரிக்கப்படும் விதத்தையும் அதற்கமைய மாத அளவுகள் எவ்வாறு அமையும் என்பதையும் பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகிறது. (K யை அடிப்படையாகக் கொண்ட பகிர்வு)

| மாதங்கள் | முன் 3 மாதம் | | | நடு 6 மாதம் | | | பின் 3 மாதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம் | நடு | இறுதி | ஆரம் | நடு | இறுதி | ஆரம் | நடு | இறுதி |
| ஜன | 3 | 2.5 | 2 | 6 | 6 | 6 | 3 | 3 | 3 |
| பெப் | 2 | 1.5 | 1 | 6 | 6 | 6 | 3 | 3 | 3 |
| மார் | 1 | 0.5 | – | 6 | 6 | 6 | 3 | 3 | 3 |
| ஏப்ர | – | – | – | 6 | 5.5 | 5 | 3 | 3 | 3 |
| மே | | | – | 5 | 4.5 | 4 | 3 | 3 | 3 |
| யூன் | | | – | 4 | 3.5 | 3 | 3 | 3 | 3 |
| யூலை | – | – | – | 3 | 2.5 | 2 | 3 | 3 | 3 |
| ஓகஸ் | – | – | – | 2 | 1.5 | 1 | 3 | 3 | 3 |
| செப் | | – | – | 1 | 0.5 | – | 3 | 3 | 3 |
| ஒக் | | – | – | – | – | – | 3 | 2.5 | 2 |
| நவம் | | – | – | | – | – | 2 | 1.5 | 1 |
| டிசம் | – | – | – | – | – | – | 1 | 0.5 | – |
| | 6 | 4.5 | 3 | 39 | 36.0 | 33 | 35 | 31.5 | 30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பற்று வட்டி | முன் 3 மாதம் | நடு 6 மாதம் | பின் 3 மாதம் | மொத்த வட்டி |
|---|---|---|---|---|
| K | $1000 \times {}^{12}/_{100} \times {}^{6}/_{12}$ = 60/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{39}/_{12}$ = 390/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{33}/_{12}$ = 330/- | = 780/- |
| R | $1000 \times {}^{12}/_{100} \times {}^{6}/_{12}$ = 60/- | -- | -- | = 60/- |
| T | -- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{21}/_{12}$ = 210/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{24}/_{12}$ = 240/- | = 450/- |
| P | -- | -- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{6}/_{12}$ = 60/- | = 60/- |

இதே பங்காளர் ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் மாதாந்தம் 1000 ரூபாவைப் பற்றியிருப்பின் பற்று வட்டிக் கணிப்பீடு பின்வருமாறு அமையும்.

| பற்று வட்டி | முன் 3 மாதம் | நடு 6 மாதம் | பின் 3 மாதம் | மொத்த வட்டி |
|---|---|---|---|---|
| K | $1000 \times {}^{12}/_{100} \times {}^{4.5}/_{12}$ 45/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{36}/_{12}$ 360/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{31.5}/_{12}$ 315/- | = 720/- |
| R | $1000 \times {}^{12}/_{100} \times {}^{4.5}/_{12}$ 45/- | -- | -- | = 45/- |
| T | -- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{18}/_{12}$ 180/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{22.5}/_{12}$ 225/- | = 405/- |
| P | -- | -- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{4.5}/_{12}$ 45/- | = 45/- |

ஒவ்வொரு மாத இறுதியிலும் பற்றியிருப்பின்

| பற்று வட்டி | முன் 3 மாதம் | நடு 6 மாதம் | பின் 3 மாதம் | மொத்த வட்டி |
|---|---|---|---|---|
| K | $1000 \times {}^{12}/_{100} \times {}^{3}/_{12}$ 30/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{33}/_{12}$ 330/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{30}/_{12}$ 300/- | = 660/- |
| R | $1000 \times {}^{12}/_{100} \times {}^{3}/_{12}$ 30/- | -- | -- | = 30/- |
| T | -- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{15}/_{12}$ 150/- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{21}/_{12}$ 210/- | = 360/- |
| P | -- | -- | $1000 \times {}^{12}/_{100} \times {}^{3}/_{12}$ 30/- | = 30/- |

உசாத்துணை நூல் : கற்றல் கற்பித்தல் வழிகாட்டி
கணக்கியல் குறிப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. இலாபமாக காட்டும் போது
கடன்பட்டோர் கணக்கு வரவு
மீளப்பெற்ற அறவிடமுடியாக் கணக்கு செலவு

இவ்வாறு இரண்டு இரட்டைப் பதிவுகள் பதியப்படுவதற்கான காரணங்கள் :

01. மீள செலுத்திய கடன்பட்டோரை அடையாளம் காணலாம்.
02. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிக்க உதவியாக அமையும்
03. கடன்பட்டோர் சார்பாக தெளிவான பெறக்கூடியதாக அமையும்.

## கடன்பட்டோர் கழிவேற்பாடு (Provision for discounts on debtors)

எதிர்காலத்தில் கடன்பட்டோருக்கு கொடுக்கப்படும் கழிவிற்கு நிகழாண்டில் பதிவதே கடன்பட்டோர் கழிவேற்பாடு எனப்படுகிறது.

இதற்குச் சார்பான வாதம்

கடன் விற்பனை வருமானமாக உள்ளதால் அதனால் ஏற்படக்கூடிய நட்டம் அவ்வாண்டே காட்டப்படவேண்டும் என்பதாகும்.

இதற்கு எதிரான வாதம்

கழிவு காலத்தின் அடிப்படையிஓல் வழங்கப்படுவதால் கொடுக்கப்படும் காலத்தில் பதியப்பட வேண்டும் என்பதாகும்.

இவ் கடன்பட்டோர் கழிவேற்பாடு ஐயக்கடன் ஏற்பாடு கழித்தமீதிக்கே கணிப்பிடப்படும். காரணம கழிவு அறவிடமுடியாத தொகைக்கு வழங்கப்படுவதில்லை என்பதாகும்.

அதற்கான இரட்டைப் பதிவு
இலாப நட்டக் கணக்கு வரவு
கடன்பட்டோர் கழிவு ஏற்பாட்டுக் கணக்கு செலவு

உதாரணம் :

| ஆண்டு | கடன்பட்டோர் ரூபா | ஐயக்கடஉ் ஏற்பாடு ரூபா | கழிவேற்பாடு வீதம் |
|---|---|---|---|
| 19 x 4 | 5000 | 300 | 2 |
| 19 x 5 | 6000 | 460 | 2 |
| 19 x 6 | 4500 | 350 | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு
# கடன்பட்டோர் கழிவேற்பாடு
## BADDEBTS PROVISION FOR BADDEBTS
## PROVISION FOR DISCOUNTS ON DEBTORS

செல்வன் பா. ஜெயரஞ்சன் – வர்த்தகம் உயர்தரம் 1998

### அறவிட முடியாக் கடன் (**Bad Debts**)

கடன் அடிப்படையில் விற்கப்பட்ட பண்டத்தின் பணத்தை வாடிக்கையாளரிடம் இருந்து பெறமுடியாது போதலே அறவிட முடியாக் கடன் எனப்படுகிறது. இது வாடிக்கையாளன் இறந்து போவதால் அல்லது ஓர் சொத்துமில்லா முறிந்து போவதால் அல்லது நாட்டு அரசியல் எல்லையை விட்டு வெளியேறுவதால் ஏற்படும்.

இத்தொகை இலாபநட்டக் கணக்கில் சாதாரண செலவு போல் காட்டப்பட வேண்டும். ஓர்கடன் அறவிடமுடியாக் கடனாக காட்டப்பட்டதும் அக்கடன் கடன்பட்டோர் கணக்குல் பெறுமதி அற்றதாகிவிடும். எனவே கடன்பட்டோர் கணக்கில் இருந்து நீக்கப்பட வேண்டும். இதற்கான இரட்டைப் பதிவு :

கட~~ன்பட்டோர் க/கு வரவு~~

அறவிடமுடியாக் கடன் கணக்கு ~~செலவு~~ வரவு

கடன்பட்டோர் க/கு செலவு

உதாரணம் :

விற்பனை குமார் 8000. யசோ 16000. அறவிடமுடியாக் கடன் குமார் 8000, யசோ 6000 பெற்ற காசு யசோவிடம் 10000.

குமார் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 8000 | அ.மு.க. | 8000 |

யசோ கணக்கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 16000 | அ.மு.க. | 6000 |
| | | காசு | 10000 |
| | 16000 | | 16000 |

அறவிடமுடியாக் கடன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| குமார் | 8000 | இ-ந. க-கு | 14000 |
| யசோ | 600 | | |
| | 14000 | | 14000 |

குறிப்பிட்ட திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இ-ந. க-கு

| | | |
|---|---|---|
| விற்பனை விநியோக செலவு அ.மு. கடன் | 14000 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயக்கடன் ஏற்பாடு (**Provision for Baddebts**)

கடன்பட்டோரிடம் இருந்து ஓர் தொகை நீண்ட காலமாக கடன்பெறப்படாத இடத்து அது ஐயம்கொள்ளப்பட்டு அத்தொகைக்கு முன்கூட்டியே பதிவு மேற் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதுவே ஐயக்கடன் ஏற்பாடு எனப்படுகிறது. சரியான கடன்பட்டோரை ஐந்தொகையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே இதற்கு ஏற்பாடு செய்வதன் பிரதான நோக்கம் ஆகும்.

இவ்வாறு ஐயக்கடன் ஏற்பாட்டு வீதம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன :

01. கடன்பட்டோரை தனித்தனியே ஆய்வு செய்தல்.
02. கடனின் என்ன வீதம் ஐயமாக இருக்கும் என முந்திய ஆண்டுகளின் அனுபவத்தில் பெறல்

அனேகமாக கடனின் வருமதி காலத்தைப் பொறுத்து இந்த வீதம் முடிவெடுக்கப்படும். அதாவது கூடிய காலம் கிடைக்காமல் இருக்கும். கடனும் கூடிய வீதமும் குறைந்த காலக் கடனுக்கு குறைந்த வீதமும் கணிப்படப்படும்.

எடுத்துக்காட்டாக :

| காலம் | மொத்தம் | ஐயக்கடன் வீதம் | தொகை (ஐயக்கடன்) |
|---|---|---|---|
| ஒருமாதத்திலும் குறைவான காலம் | 8000 | 1 | 80 |
| 1 மாதம் - 2 மாதம் வரை | 5000 | 3 | 150 |
| 2 மாதம் - 3 மாதம் வரை | 1000 | 4 | 40 |
| 3 மாதம் - 1 வருடம் | 600 | 5 | 30 |
| 1 வருடத்திற்கு மேல் | 500 | 20 | 100 |
| | 15100 | | 400 |

இவ் ஐயக் கடன் ஏற்பாட்டிற்கு இரட்டைப் பதிவு :

இலாபநட்டக் கணக்கு வரவு

ஐயக் கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு

உதாரணம் :

கடன் பட்டோர் 20000 ஐயக் கடன் ஏற்பாடு 10 வீதமடான கடன் (2000) ஐயமாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு

| | |
|---|---|
| | இ-ந. க-கு 2000 |

குறிப்பிட்ட திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இ-ந. க-கு

| | |
|---|---|
| விற்பனை விநியோக செலவு அ.மு. ஐயக்கடன் 2000 | |

குறிப்பிட்ட திகதியில் ஐந்தொகை

| | | |
|---|---|---|
| | நடைமுறைச்சொத்து | |
| | கடன்பட்டோர் | 20000 |
| | ஐ.கடன் ஏற்பா | 2000 |
| | | 18000 |

ஐயக்கடன் கணிப்பு முறை

$$= 2000\not{0} \times \frac{1\not{0}}{1\not{0}\not{0}}$$

$$= 2000$$

## ஐயக்கடன் ஏற்பாட்டை அதிகரித்தல் (Increasing the Provision)

ஐயக்கடன் ஏற்பாட்டு வீதம் அதிகரித்தாலோ அல்லது கடன்பட்டோர் தொகை அதிகரித்தாலே இவ் வீதத்தினால் கணிப்பிடப்படும் ஐயக்கடன் ஏற்பாட்டு தொகை அதிகரிக்கும். இதுவே ஐயக்கடன் ஏற்பாடு அதிகரிபபு எனப்படுகிறது.

இதற்கான இரட்டைப் பதிவு :

இலாபநட்ட கணக்கு வரவு

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு

உதாரணம் :

மேற்குறிப்பிட்ட உதாரணத்திற்கமைய அடுத்த வருடம் கடன் பட்டோர் 25000 ஆக உயர்வடைகிறது எனின்,

ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ | 2500 | மீதி | 2000 |
| | | இ-ந. க-கு | 500 |
| | 2500 | | 2500 |

குறிப்பிட்ட திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இ-ந. க-கு

| | |
|---|---|
| ஐயக்கடன் 500 | |

குறிப்பிட்ட திகதியில் ஐந்தொகை

| | | |
|---|---|---|
| | நடைமுறைச்சொத்து | |
| | கடன்பட்டோர் | 25000 |
| | ஐ.கடன் ஏற்பா | 2500 |
| | | 22500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயக்கடன் ஏற்பாட்டை குறைத்தல் (Reducing the Provision)

ஐயக்கடன் ஏற்பாட்டு வீதம் குறைவடைந்தாலோ அல்லது கடன்பட்டோர் தொகை குறைவடைந்தாலே இவ் வீதத்தினால் கணிப்பிடப்படும் ஐயக்கடன் ஏற்பாட்டு தொகை குறைவடையும். இதுவே ஐயக்கடன் ஏற்பாடு குறைதல் எனப்படுகிறது.

இதற்கான இரட்டைப் பதிவு :

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு வரவு

இலாபநட்டக் கணக்கு செலவு

உதாரணம் :

மேற்குறிப்பிட்ட உதாரணத்திற்கமைய அடுத்த வருடம் கடன் பட்டோர் 23000 ஆக குறைகிறது எனின்,

ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| இ-ந. க-கு | 200 | மீதி | 2500 |
| மீ-செ. | 2300 | | |
| | 2500 | | 2500 |

குறிப்பிட்ட திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இ-ந. க-கு

| | | | |
|---|---|---|---|
| | | ஐயக்கடன் | 200 |

குறிப்பிட்ட திகதியில் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறைச்சொத்து | |
| | | கடன்பட்டோர் | 23000 |
| | | ஐ.கடன் ஏற்பா | 2300 |
| | | | 20700 |

ஐயக்கடன் கணிப்பு முறை

$= 23000 \times \frac{10}{100}$

$= 2300$

## மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் (Bad debts recovered)

கடந்த காலங்களளில் அறவிடமுடியாக் கடனாகக் கருதப்பட்ட தொகை நிகழான்டில் திரும்ப பெற்றுக் கொள்வதே மீளப்பெற்ற அறவிட முடியாக்கடன் எனப்படுகிறது. இது முன்பு அறவிட முடியாக்கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கும். அதாவது அறவிட முடியாக் கடன் கணக்குக்கு வரவு வைப்பதால் வருமானத்திற்கு எதிரான நட்டமாக காட்டப்பட்டது. எனவே அது தற்போது கிடைக்கும் போது இலாபமாக காட்டப்பட வேண்டும்.

இதற்கான இரட்டைப் பதிவு :

01. காசு பெறப்படும் போது

காசுக்கணக்கு வரவு

கடன்பட்டோர் கணக்கு செலவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட திகதியில் முடிவடைந்த
ஆண்டிற்கான இ-ந. க-கு

| | | | |
|---|---|---|---|
| 19-4 | | 19-6 க.ப.கழிவு | |
| கழிவு ஏற்பாடு | 94 | ஏற்பாடு | |
| 19-5 | | குறைவு | 28 |
| கழிவு ஏற்பாடு | 17 | | |

கடன்பட்டோர் கழிவேற்பாட்டு
கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.செ. | 94 | 19-4 இ-ந | 94 |
| மீ.செ. | 111 | 19-5 மீ.வ | 94 |
| | | இ.ந. | 17 |
| | 111 | | 111 |
| இ.ந. | 28 | 19-6 மீ.வ. | 111 |
| மீ.செ. | 83 | | |
| | 111 | | 111 |
| | | 19-7 மீ.வ. | 83 |

குறிப்பிட்ட திகதியில் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைசொத்து | | |
| | 19-4 க.பட் | 5000 | |
| | ஐ. கடன் | 300 | |
| | | 4700 | |
| | க.ப.கழிவு. ஏ. | 94 | 4606 |
| | 19-5 க.பட் | 6000 | |
| | ஐ.க. ஏற். | 450 | |
| | | 5550 | |
| | க.ப. கழிவு ஏற். | 111 | 5439 |
| | 19-5 க.பட. | 4500 | |
| | ஐ.க. ஏற் | 350 | |
| | | 4150 | |
| | க.ப.கழி. ஏற் | 83 | 4067 |

உசாத்துணை நூல்கள் :


01 கணக்கியல் 1 D.Sam.

02. Business Accounting Framwoods (Seventh Edition)

03. 1991 விசேஷ A/L புள்ளிவழங்கும் திட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளல் கொடுத்தல் கணக்கும் வருமானச் செலவுக் கணக்கும்

## RECEIPTS & PAYMENT ACCOUNTS AND INCOME & EXPENDITURES ACCOUNTS

க. ஸ்ரீஹரன், வர்த்தகம் – உயர்தரம் 1998

இலாப நோக்கத்துடன் இயங்குகின்ற வியாபார நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தத்தமது நிதியாண்டும் இறுதியில் தமது பெறுபேறுகளையும் நிலமைகளையும் அறிந்து கொள்வதற்காக வியாபார இலாப நட்ட ஐந்தொகை போன்ற முடிவுக் கணக்குகளைத தயாரிக்கும்போது சேவை நோக்கத்துடன் இயங்குகின்ற அமைப்புக்களாகிய விளையாட்டுக் கழகங்கள் பாடசாலை உயர்தர மாணவர் மன்றங்கள் சனசமூக நிலையங்கள் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் கழகங்கள் மன்றங்கள் களரிகள் போன்றன யாவும் தமது சேவைக்கால முடிவில் தமது பெறுபேற்றினையும் மிகையையும் அறிந்து கொள்வதற்காக தயாரித்துக் கொள்ளப்படும் கணக்குகள் கொள்ளல் கொடுத்தல் கணக்கும் வருமானச் செலவுக் கணக்குமாகும்.

இங்கு இலாப நோக்கம் கொண்ட வியாபார அமைப்புக்களில் ஈடுசெய்யப்படும் பணமானது மூலதனம் எனவும் சேவைநோக்க அமைப்புக்களில் ஈடுசெய்யப்படும் பணமானது திரள்நிதி/திரண்ட நிதியம் எனவும் அழைக்கப்படுகின்றது. இத்தோடு இலாப நோக்கம் கொண்ட வியாபார அமைப்புக்களின்முக்கியமான வருமான ஊடகம் விற்பனை ஆகும். இதேபோல் சேவை நோக்கம் கொண்ட வியாபார அமைப்புக்களின் முக்கியமான வருமான ஊடகம் அங்கத்தவர்களிடம் இருந்து திரட்டப்படும் சந்தாப் பணமாகும். இதனைவிட சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்கள் தமக்கும் தேவையான மேலதிதகமான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மதுபானச்சாலைகள் குளிர்பானச் சாலைகள் சிற்றுண்டிச்சாலைகள் இன்னிசை நிகழ்ச்சிகள் படக்காட்சிகள் போன்றவற்றை நடாத்தியும் பிறவழிகளில் வருமானத்தினைப் பெற்றுக்கொள்கின்றன. இவ்வேளையில் சேவை நோக்கம் கொண்ட வியாபார நிறுவனங்கள் பிறவருமான ஊடகங்களின் மூலம் கிடைக்கும் இலாபத்ததினை கணிப்பிட்டுக் கொள்வதற்காக புறம்பாக வியாபார இலாபநட்டக் கணக்கினைத் தயாரித்துக் கொள்கின்றன.

மேற்கூறப்பட்ட கொள்ளல் கொடுத்தல் கணக்கும் வருமானச் செலவுக் கணக்கும் இரண்டும் சேவை நோக்கம் கொண்ட வியாபார நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டாலும் கூட இரண்டிற்கும் இடையே பின்வரும வேறுபாடுகள் காணப்படுகின்றன:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொள்ளல் கொடுத்தல் கணக்கு | வருமானச் செலவுக் கணக்கு |
|---|---|
| 1. காசுக் கணக்கை ஒத்தது | 1. இலாப நட்டக் கணக்கை ஒத்தது |
| 2. வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் செலவினங்கள் செலவுப் பக்கத்திலும் பதியப்படும். | 2. வருமானங்கள் செலவுப் பக்கத்திலும் செலவினங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படும். |
| 3. பெறவேண்டிய வருமானங்கள் பதியப்படமாட்டாது. | 3. முற்பணமாகப் பெற்ற வருமானங்கள் முற்பணமாகக் கொடுத்த செலவுனம் பதியப்படும் |
| 4. அட்டுறு செலவு பதியப்படமாட்டாது. | 4. அட்டுறு செலவு பதியப்படும். |
| 5. மூலதனச் செலவுகளும் வருமானச் செலவுகளும் பதியப்படும். | 5. வருமானச் செலவுகள் மட்டும் பதியப்படும். |
| 6. இறுதி மீதி காசு மீதி / வங்கி மீதியை ஒத்தது. | 6. இறுதி மீதி வருமானத்திலும் கூடிய செலவினம் / செலவிலும் கூடிய வருமானத்தை ஒத்தது. |
| 7. ஆரம்ப மீதியுடன் தொடங்கும் | 7. இறுதி மீதி திரள்நிதியுடன் கூட்டப்படுவதால் ஆரம்ப மீதியுடன் தொடங்கமாட்டாது. |

## சந்தா அல்லது உறுப்புரிமைக் கட்டணம்
## Subscription / Membership Fee

சேவைநோக்க வியாபார அமைப்பில் முக்கியமான வருமான ஊடகமாக கருதப்படுவது சந்தாவாகும். இச்சந்தாப் பணமானது மாதாந்தம் வருடாந்தம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. எப்படியாயினும் சந்தாவைப் பெற்றுக் கொள்ளும்போது காசுக்கணக்கு வரவு சந்தாக் கண்ககு செலவு என பதியவிடப்படுகிறது.

இங்கு நிகழாண்டுக்குரிய சந்தாப்பணமானது முன்னைய ஆண்டில் பெற்றுக் கொள்ளுமாக இருப்பின் அது ஆரம்ப சந்தா முற்பணம எனப்படும். இது நிகழாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட சந்தாவில் இருந்து கழிக்கப்படும்.

முன்னைய ஆண்டிற்குரிய சந்தா முன்னைய ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டால் நிகழாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின்அது ஆரம்ப சந்தா நிலுவை எனப்படும். இது நிகழாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட சந்தாவிலிருந்து கழிக்கப்படும். நிகழாண்டுக்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தா இந்நிதியாண்டு முடிவு திகதிவரை கிடைக்கப் பெறாது இருக்குமாயின் அது இறுதி சந்தா நிலுவை எனப்படும். அது நிகழாண்டில் பெற்றுக்கொண்ட சந்தாவுடன் காட்டப்படும்.

## ஆயுட்கால சந்தா
## Life Membership Subscription

குறிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் தான் குறிக்கப்பட்ட கழகத்தில் அங்கத்தவனாக இருக்கும் ஆயுள்காலம் வரைக்குமான சந்தாவை நிகழாண்டில் முற்பணமாக செலுத்திக் கொள்வது ஆயுட்கால சந்தா எனப்படும். ஆயுட்கால சந்தாவைப் பெறும்போது

காசுக்கணக்கு வரவு
ஆயுட் கால சந்தாக் கணக்கு செலவு

ஆயுட்கால சந்தாவில் இருந்து குறிப்பிட்ட காலத்திற்குரிய சந்தாவினை கழித்தெடுக்கும் போது

ஆயுட்கால சந்தாக் கணக்கு வரவு
சந்தாக் கணக்கு செலவு

ஆயுட்கால சந்தாவிலிருந்து நிகழாண்டுக்குரிய சந்தா போக மிகுதித் தொகை முழுவதும் ஐந்தொகையில் பொறுப்பாகக் காட்டப்படும்.

மேற்கூறப்பட்டவையே இவ் அத்தியாயத்தில் நாம் அறிந்து கொள்கின்ற முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றது.

31.12.1997 ல் காரை ஒளி விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல் கொடுத்த் கணக்கு வருமாறு:

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01.01.97இல் மீதி | 16.000 | மைதான வாடகை | 3.000 |
| அங்கத்தவர் சந்தாப்பணம் | 94.000 | மைதானத் திருத்தம் | 1.000 |
| சஞ்சிகை வெளியீட்டு வருமானம் | 4,000 | பரிசுகளும் விருதுகளும் | 4.000 |
| கலைவிழா வருமானம் | 4.000 | வீர வீராங்கனை உபசரிப்பு | 2.500 |
| துவி.வண்டி பாதுகாப்பு வருமானம் | 6,000 | தளபாடம் | 5,00 |
| நன்கொடை கட்டிடக் கொ/வு | 16,000 | மின்சாரம் 31.03.98 வரை | 5.000 |
| செலவிற்காக | 2.000 | காப்புறுதி | 3,500 |
| கொடி விற்பனை | 9.000 | விளையாட்டு உபகரணம் | 6.000 |
| | | கழக மனை | 10,000 |
| | | கழக காவலாளி வேதனம் | 2,500 |
| | | மீ/செ | 110,500 |
| | 151.000 | | 151,000 |
| மீ/வ | 110.500 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வருவன மேலதிக தகவல்களாகும் :**

கழகத்தின் நிதியாண்டு ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்படும் சொத்துக்கள் , பொறுப்புக்கள் விபரம் வருமாறு :

| விபரம் | 01.01.97 | 31.12.97 |
|---|---|---|
| சந்தா நிலுவை | 2,500 | 3,000 |
| சந்தா முற்பணம் | 1,000 | 2,500 |
| ஆயுட்கால சந்தா | 16,000 | 11,000 |
| முற்செலுத்திய மைதான வாடகை | 300 | 900 |
| அட்டுறு காப்புறுதி | 500 | 1,000 |
| விளையாட்டு உபகரணம் | 14,000 | 18,000 |
| தளபாடம் | 6,000 | 10,000 |
| 10% முதலீடு | 12,000 | 12,000 |
| கலைவிழா வருமான வருமதி | 500 | 800 |
| கழகமனை | 6,000 | 14,000 |

வருமானச் செலவுக் கணக்கையும் ஐந்தொகையையும் தயாரிக்குமானால் :

ஆரம்ப நிலவரக் கூற்று

| | | | |
|---|---|---|---|
| திரள்நிதி | 39,800 | சந்தா நிலுவை | 2,500 |
| சந்தா மு,பணம் | 1,000 | மு,கொ,மை,வாடகை | 300 |
| ஆயுட்கால சந்தா | 16,000 | விளை.உபகரணம் | 4,000 |
| ஆயுட் காப்புறுதி | 500 | கழக மனை | 6,000 |
| | | முதலீடு | 12,000 |
| | | விழா வருமதித | 500 |
| | | 1.1.97ல் மீ/வ | 16,000 |
| | 57,300 | | 57,300 |

சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சந்தா நிலுவை | 2,500 | காசு | 94,000 |
| சந்தா | 2,500 | சந்தா நிலுவை | 3,000 |
| வருமானச் | | சந்தா முற்பணம் | 1,000 |
| செலவு | 98,000 | ஆயுட்கால சந்தா | 5,000 |
| | 103,000 | | 103,000 |

சந்தா நிலுவைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 2,500 | சந்தா | 2,500 |
| சந்தா | 3,000 | மீ/செ | 3,000 |
| | 5,500 | | 5,500 |
| மீ/வ | 3,000 | | |

சந்தா முற்பணக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சந்தா | 1,000 | மீ/வ | 1,000 |
| மீ/செ | 2,500 | சந்தா | 2,500 |
| | 3,500 | | 3,500 |
| | | மீ/வ | 2,500 |

ஆயுட்கால சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சந்தா | 5,000 | மீ/வ | 16,000 |
| மீ/செ. | 11,000 | | |
| | 16,000 | | 16,000 |
| | | மீ/வ | 11,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மைதான வாடகைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 3,000 | முற்பண வாடகை | 900 |
| முற்பண வாடகை | 300 | வரு.செலவு க/கு | 2,400 |
| | 3,300 | | 3,300 |

### முற்சேலுத்திய மைதான வாடகைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 300 | மைதான வாடகை | 300 |
| மைதான வாடகை | 900 | மீ/செ | 900 |
| | 1,200 | | 1,200 |

### காப்புறுதிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 3,500 | அட்டுறு காப்புறுதி | 500 |
| அட்டுறு காப்புறுதி | 1,000 | வரு.செலவு க/கு | 4,000 |
| | 4,500 | | 4,500 |

### அட்டுறு காப்புறுதிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காப்புறுதி | 500 | மீ/வ | 500 |
| மீ/செ | 1,000 | காப்புறுதி | 1,000 |
| | 1,500 | | 1,5000 |

### கலைவிழா வருமாணக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கலைவிழா வருமதி | 500 | காசு | 4,000 |
| வருமான வெலவு கணக்கு | 4,3000 | கலைவிழா வருமதி | 800 |
| | 4,800 | | 4,800 |

### கலைவிழா வருமான வருமதிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 500 | கலைவிழா வருமானம் | 500 |
| கலைவிழா வருமானம் | 800 | மீ/செ. | 800 |
| | 1,300 | | 1,300 |
| மீ/வ | 800 | | |

### 31–12–97 ல் முடிவடைந்த ஆண்டிற்கான காரைஒளி விளையாட்டுக் கழகத்தின் வருமான செலவுக் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரண பெறு. தேய்வு | 2,000 | சந்தா | 98,000 |
| தளபாடப் பெறுமானத்தேய்வு | 1?000 | முதலீட்டு வருமானம் | 1,200 |
| மைதானத் திருத்தம் | 1,000 | சஞ்சிகை வெளியீட்டு வருமானம் | 4,000 |
| பரிசுகளும் விருதுகளும் | 4,000 | துவிச்சக்கரவண்டி பாது.வருமானம் | 6,000 |
| வீர வீராங்களை உபசரிப்பு | 2,500 | நன்க/டை | 2,000 |
| மின்சாரம் | 2,400 | கொடி விற்பனை | 9,000 |
| கழக மனைப் பெறுமானத்தேய்வு | 2,000 | கலைவிழா வருமானம் | 4,300 |
| கழகக்காவலாளி வேதனம் | 2,500 | | |
| மைதான வாடகை | 2,400 | | |
| காப்புறுதி | 4,000 | | |
| செலவிலும் கூடிய வருமானம் | 100,700 | | |
| | 124,500 | | 124,500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31-12-97ல் உள்ளவாறாக கரைஒளி விளையாட்டுக் கழகத்தின் ஐந்தொகை

| பொறுப்புக்கள் | | தொகை | தொகை |
|---|---|---|---|
| திரள் நிதி | | 39,800 | |
| செலவிலும் கூடிய வருமானம் | | 100,000 | |
| | | 140,000 | |
| கூட்டுக : நன்கொடை | | 16,000 | 156,500 |
| குறுங்காலக் கடன் | | | |
| சந்தா முற்பணம் | | 2,500 | |
| ஆயுட்கால சந்தா | | 11,000 | |
| அட்டுறு காப்புறுதி | | 1,000 | 14,500 |
| | | | 171,000 |
| **சொத்துக்கள்** | **கொள்விலை** | **தி,பெ,தேய்வு** | **மீதி** |
| நிலையான சொத்து: | | | |
| விளாயட்டு உபகரணங்கள் | 20,000 | 2,000 | 18,000 |
| தளபாடம் | 11,000 | 1,000 | 10,000 |
| கழக மனை | 16,000 | 2,000 | 14,000 |
| | 47,000 | 5,000 | 42,000 |
| 10% முதலீடு | | | 12,000 |
| நடைமுறை சொத்து: | | | |
| சந்தா நிலுவை | | 8,000 | |
| முற்பணம் செலத்தீய மைதான வாடகை | | 900 | |
| பெறவேண்டிய மு. வருமுானம் | | 1,200 | |
| கலைவிழா வருமதி | | 800 | |
| முற்.செலுத்திய மின்சாரம் | | 600 | |
| காசு மீதி | | 110,500 | 117,000 |
| | | | 171,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்படைப்புக் கணக்கு அல்லது கையடைப்புக் கணக்கு

செல்வன் ந. ஐங்கரன் வர்த்தக மாணவன் – உயர்தரம் 1998

இலாப நோக்குடன் இயங்குகின்ற வியாபார நிறுவனங்கள் தமது இலாபத் தன்மையை அதிகரித்துக் கொள்வதற்காக பல்வேறுபட்ட விற்பனை முறைகளில் ஈடுபட்டுக் கொள்கின்றனர். அவ்விற்பனை முறைகளாக

1. காசுவிற்பனை
2. கடன் விற்பனை
3. ஏல விற்பனை
4. கேட்புமுறை விற்பனை
5. விற்க அல்லது திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்படும் பொருட்களின் விற்பனை
6. ஒப்படை விற்பனை என பல வகைக்கடுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள விற்பனை முறைகளில் இங்கு நாம் முக்கியமாக எடுத்துக் கொள்வது ஒப்படை விற்பனையாகும். ஒப்படை விற்பனை என்பது ஓரிடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது விற்பனை செய்யப்படுகினற் பொருட்களை இன்னோரிடத்துக்கு அனுப்பி அவ்விடத்தில் அப்பொருட்களை ஓர் முகவரின் மூலம் விற்பனை செய்து கொள்கின்ற முறையினைக் குறிக்கும். இவ் விற்பனை முறையில் பின்வரும் இரு முக்கியமான நபர்கள் தொடர்புபடுகின்றனர்:

1. ஒப்படைப்போன் அல்லது கையடைப்போன்

2. ஒப்படை கொள்வோன்

**ஒப்படைப்போன்**

ஒப்படை விற்பனைக்காக ஒப்படைப் பண்டங்களை ஒப்படை கொள்வோனுக்கு அனுப்பி வைத்துக் கொள்கின்ற முதல்வரைக் குறிப்பது. அதாவது பொருள் சொந்தக்காரனைக் குறிப்பது ஒப்படைப்போன் ஆகும். இவரது நோக்கம் அதிகளவு இலாபத்தை உழைத்துக் கொள்ளுதல் ஆகும்.

**ஒப்படை கொள்வோன்**

ஒப்படைப்போனால் அனுப்பப்பட்டுள்ள ஒப்படைப் பண்டங்களை பொறுப்பேற்று அப்பண்டங்களை விற்பனை செய்து கொள்கின்ற முகவரைக் குறிப்பது ஒப்படை கொள்வோன் ஆகும். இவ் ஒப்படை கோள்வோன் ஒப்படைப்போன் சார்பில் தான் தரகினைப் பெற்றுக் கொள்வதற்காக ஓர் முகவராக தொழிற்பட்டுக் கொள்கின்றான்.

ஒப்படைப்போனால் ஒப்படை கொள்வோருக்கு வழங்கப்படுகின்ற தரகுகளாக

(அ) சாதாரண தரகு அல்லது விற்பனைத் தரகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பொறுப்புத் தரகு அல்லது நம்பிக்கைப் பொறுப்புப் பணிசை அல்லது டெல்கிறேட் தரகு

(இ) இலாபத்தரகு அல்லது மேலதிக தரகு

ஒப்படை கொள்வோனால் மேற்கொள்ளப்படுகின்ற மொத்த விள்பனையின்மீது (காசு, கடன் விற்பனை) கணித்து வங்கப்படுவது சாதாரண தரகாகும்.

ஒப்படை கொள்வோன்கடன் விற்பனைகளை மேற்கொள்ளும் போது அதனால் ஏற்படுகின்ற அறவிடமுடியாக் கடன், அனுமதித்த கழிவு போன்ற நட்டங்களை ஒப்படை கொள்வோனே பொறுப்பேற்றுக்கொள்கிறான் என்பதற்காக வழங்கப்படுகின்ற தரகு பொறுப்புத்ஙதரகு ஆகும. இப் பொறுப்புத் தரகானது ஒப்படைப்போனால் வங்கப்படாத இடத்து ஒப்படை கொள்வோன் கடன் விற்பனைகளை மேற்கொண்டு அதன் மூலம் அறவிடமுடியா கடன், அனுமதித்த கழிவு நட்டம் ஏற்படுமாயின்அதற்கு ஒப்படைப்போனே பொறுப்பாளியாவான். பொறுப்புத் தரகு வழங்கப்பட்டு நட்டங்கள்ஏற்படுமாயின் அதற்கு ஒப்படை கொள்வோனே பொறுப்பாளியாவான். பரீட்சை வினாக்களில் பொறுப்புத் தரகானது கடன் விற்பனைக்கு என குறிப்பிட்டுக்கூறப்படாத இடத்து மொத்த விற்பனைக்கு கணிக்கப்படல் வேண்டும்.

ஒப்படைப்போனால் குறித்து அனுப்பிய பட்டியல் விலையை விட ஒப்படை கொள்வோன் அதிகளவு விலைக்கு விற்பனாயின் அவ்அதிகரித்த மேலதிகத் தொகைக்கு கணித்து வழங்கப்படும் தரகு இலாபத் தரகு ஆகும்.

**மாதிரிக் கிரயப் பட்டியல்**

ஒப்படைப்போனால் ஒப்படை கொள்வோனுக்கு பொருட்கள் அனுப்பப்படும்போது பொருட்கள் தொடர்பான சகல விபரங்கள் குறிக்கப்பட்டு ஒப்படைப்போனால் அனுப்பப்படும் பட்டியல் மாதிரிக் கிரயப்பட்டியலாகும். இம மாதிரிக் கிரயப் பட்டியலொன்றில் பின்வரும்விடயங்கள் காணப்படலாம்.

1. அனுப்பப்படும் பொருளின் கொள்விலை
2. பொருள் விற்க்கப்படவேண்டிய பட்டியல் விலை
3. பொருள் விற்கப்பட வேண்டிய விற்பனைமுறை
4. அனுப்பப்பட வேண்டிய முற்பணம்
5. அறவிடப்படவேண்டிய தரகுத்தொகை
6. மிகுதிப் பணத்தொகை அனுப்பப்படவேண்டிய முறை.

**விற்பனை விபரக் கணக்கு கூற்று**

ஒப்படைப்போனால் அனுப்பப்பட்டுள்ள ஒப்படைப் பண்டங்களை பொறுப்பேற்றுக் கொண்டது தொடக்கம் அதற்கான இறுதிப் பணத்தொகை அனுப்பும் காலம் வரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ள நடவடிக்கைகள் உள்ளடங்கலான ஒப்படை கொள்வோனால், ஒப்படைப்போனுக்கு அனுப்பப்படும் கடிதம் விற்பனை விபரக் கூற்று ஆகும். இதில் அடங்குகின்ற விடங்கள் :

1. பொறுப்பேற்றுக் கொண்ட பண்டங்களின் எண்ணிக்கை
2. காசுக்கு, கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையும் விற்பனையின் பெறுமதியும்
3. இருப்பாக உள்ள பண்டங்களின் எண்ணிக்கை
4. ஒப்படை கொள்வோனுக்கு ஏற்பட்டுள்ள செலவுகள்
5. இடைக்காலத்தில் அனுப்பப்பட்டுள்ள முற்பணம் தொடர்பான விபரம்
6. எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள தரகுத் தொகைகள் பற்றிய விபரம்.
7. மிகுதியாக அனுப்பப்படுகின்ற அனுப்பப்பட வேண்டிய தொகைகள் பற்றிய விபரம்

**ஒப்படை விற்பனை சம்பந்தமாக ஒப்படைப்போன் ஏட்டில் பராமரிக்கப்படும் பேரேட்டுக் கணக்குகள்**

(அ) ஒப்படைக் கண்ககு
(ஆ) ஒப்படை கொள்வோன் கணக்கு
(இ) ஒப்படைக்கு அனுப்பிய சரக்கு கணக்கு
(ஈ) இதர பேரேட்டுக் கணக்குகள் :

1) காசு அல்லது வங்கிக்கணக்கு
2) வருஉண்டியல் கணக்கு

**ஒப்படை விற்பனை சம்பந்தாக ஒப்படை கோள்வோன் ஏட்டில் பராமரிக்கப்படும் பேரேட்டுக் கணக்குகள்**

1. ஒப்படைப்போன் கணக்கு
2. காசு அல்லது வங்கிக் கணக்கு
3. பெற்ற தரகு கணக்கு
4. ஒப்படை கடன்பட்டோர் கணக்கு
5. சென்மதி உண்டியல் கணக்கு

**ஒப்படை விற்பனை சம்பந்தமாக ஒப்படைப்போன் ஏட்டில் இடம்பெறும் முக்கியமான கொடுக்கல் வாங்கல்களுக்கான நாட்குறிப்புப் பதிவுகள்**

1. ஒப்படைப்போன் ஒப்படை கொள்வோனுக்கு பொருட்களை அனுப்பும் பொழுது
   ஒப்படைக் கணக்கு வரவு
   ஒப்படைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கு செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒப்படைப்போனுக்கு ஏற்படும் செலவுகள்
ஒப்படைக்கணக்கு வரவு
காசு அல்லது வங்கிக் கணக்கு செலவு

3. ஒப்படைப்போனால் அனுப்பப்பட்ட பொருட்கள்இடையில் களவாடப்பட்டால் அல்லது சேதமடைந்தால்
இலாபநட்டக் கண்கரு வரவு
ஒப்படைக்கணக்கு செலவு

4. ஒப்படைப்போனால் அனுப்பப்பட்டுள்ள பொருட்கள்இடையில் களவாடப்படின் அந்நட்டத்தின் குறிக்கப்பட்டளவு தொகையினை ஏதேனும் ஓர் கம்பனி பொறுப்பேற்றுக் கொள்ளுமாயின்
பொறுப்பேற்கும் கம்பனி வருமதி கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

5. ஒப்படை கொள்வோன் ஒப்படைப் பண்டங்களை பொறுப்பேற்க முன் தனக்கு விற்பனைக்கு மேலதிகமென குறிக்கப்பட்டளவு செலவுடன் திருப்பி அனுப்பும போது

(அ) திருப்பி அனுப்பும் செலவிற்கு
ஒப்படைக் கணக்கு வரவு
ஒப்படை கொள்வோன் கணக்கு செலவு

(ஆ) பொருளின் கிரயத்திற்கு
ஒப்படைக்கு அனுப்பிய கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

(இ) மொத்த நட்டத்திற்கு
இலாபநட்டக் கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

6. ஒப்படை கொள்வோன் மேற்கொள்ளும் செலவுகள்
ஒப்படைக் கணக்கு வரவு
ஒப்படை கொள்வோன் கணக்கு செலவு

7. காசு விற்பைன
ஒப்படை கொள்வோன் கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

8. கடன் விற்பனை
ஒப்படை கடன்பட்டோன் கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. முற்பணம் காசாக ஒப்படை கொள்வோன் அனுப்பும் போது
காசு / வங்கிக் கணக்கு வரவு
ஒப்படை கொள்வோன் கணக்கு செலவு

10. முற்பணம் உண்டியலாக ஒப்படை கொள்வோன் அனுப்பும்போது
வருமதி உண்டியல் கணக்கு வரவு
ஒப்படை கொள்வோன் கணக்கு செலவு

11. ஒப்படைப்போன் முற்பணமாகக்கிடைத்த வருமதி உண்டியலை முதிர்பு காலத்திற்கு முன்பாக வங்கியில் ஒப்படைத்து கழிவுடன் மாறறும் போது
உண்டியல் கழிவு கணக்கு வரவு (கழிவுத் தொகைக்கு)
காசு / வங்கிக் கணக்கு வரவு (தேறும் தொகைக்கு)
வருமதி உண்டியல் கணக்கு செலவு (மொத்தத் தொகைக்கு)

12. ஒப்படை கொள்வோனை ஒப்படைப் பண்டங்கள் சென்றடைந்த பின் நட்டம் ஏற்படுமாயின் (களவு, சேதம்)
ஒப்படைக் கொள்வோன் கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

13. ஒப்படை கொள்வோன் எடுத்துக்கொள்ளும தரகுத் தொகைக்கு
ஒப்படைக் கணக்கு வரவு
ஒப்படை கொள்வோன் கணக்கு செலவு

14. ஒப்படை கடன்பட்டோனிடமிருந்து ஒப்படை கொள்வோன் பணத்தினை வசூலிக்கும்
போது அனுமதித்த கழிவு, அறவிடமுடியாக்கடன் போன்ற நட்டங்கள் ஏற்படின் (பொறுப்புத் தரகு வழங்கப்பட்டிராத போது)
ஒப்படைக் கணக்கு வரவு
ஒப்படைக் கடன்பட்டோன் கணக்க செலவு
(பொறுப்புத்தரகு வழங்கப்பட்டிருந்தால் இந்நட்டத்திற்கு பதிவினைக் கட்ட வேண்டிய அவசியமில்லை)

15. ஒப்படை கொள்வோனால் விற்கப்படாமல் இறுதியில் இருப்பாக உள்ள பொருளின் மொத்தப் பெறுமதிக்கு ( பொருளின் கிரயம் + ஒப்படைப்போன் செலவு + ஒப்படை கொள்வோனின் விற்பனை சாராத செலவுகள்)
ஒப்படையில் இறுதி இருப்புக் கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

ஒப்படை விற்பனை சம்பந்தமாக ஒப்படை கொள்வோன் ஏட்டில் இடம்பெறும் முக்கியமான கொடுக்கல் வாங்கல்களுக்கான நாட்குறிப்புப் பதிவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒப்படை கொள்வோனுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு
ஒப்படைப்போன் கணக்கு வரவு
காசு / வங்கிக் கணக்கு செலவு

2. ஒப்படை கொள்வோன் முற்பணமாக
(அ) காசினை அனுப்பும் போது
ஒப்படைப்போன் கணக்கு வரவு
காசு / வங்கி கணக்கு செலவு
(ஆ) உண்டியல் ஒன்றை ஒப்புக்கொண்டு அனுப்பும்போது
ஒப்படைப்போன் கணக்கு வரவு
சென்மதி உண்டியல் கணக்கு செலவு

3. ஒப்படை கொள்வோன் பழுதைடந்த நிலையில் காணப்பட்ட பொருட்களை செலவுடன் திருப்பி அனுப்பும் போது செலவிற்கு
ஒப்படைப்போன் கணக்கு வரவு
காசு / வங்கிக் கணக்கு செலவு

4. ஒப்படை கொள்வோன் மேற்கொள்ளும் விற்பனை
(அ) காசு விற்பனை
காசு/வங்கிக் கணக்கு வரவு
ஒப்படைப்போன் கணக்கு செலவு

(ஆ) கடன் விற்பனை
ஒப்படை கடன்பட்டோர் கணக்கு வரவு
ஒப்படைப்போன் கணக்கு செலவு

5. ஒப்படை கொள்வோன் தனக்குரிய தரகினை கழித்துக் கொள்ளும்போது
ஒப்படைப்போன் கணக்கு வரவு
பெற்ற தரகு கணக்கு செலவு

6. ஒப்படை கொள்வோன் ஒப்படை கடன்பட்டோனிடமிருந்து பணத்தினை பெறும்போது
காசு/வங்கிக் கணக்கு வரவு
ஒப்படை கடன்பட்டோன் கணக்கு செலவு

7. ஒப்படைகொள்வோன் முற்பணமாக ஒப்புக்கொண்ட உண்டியலுக்கான பணத்தினை செலுத்திக் கொள்ளும் போது
சென்மதி உண்டியல் கணக்கு வரவு
காசு / வங்கிக் கணக்கு செலவு

8. ஒப்படை கொள்வோன் தனக்குரிய கணித்துக் கொண்ட தரகினை மீள எடுத்தக் கொள்ளும் போது
பெற்ற தரகு கணக்கு வரவு
காசு / வங்கிக் கணக்கு செலவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படை கொள்வோன் தனது ஏட்டில் ஒப்படைப் பண்டங்களை பொறுப்பேற்றுக் கொண்டது தொடக்கம் இடம் பெறும் நடவடிக்கைகளை பதிவுசெய்து வருவான்.

உ_+ம் :
கொழும்பிலுள்ள நளன் சகோதரர்கள்நிறுவனம் யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் முகவர் நிறுவனமான கமல் கம்பனிக்கு ஒவ்வொன்றும் 10000 ரூபா கொள்விலையான 25 சைக்கிள்களை ஒப்படை அடிப்படையில் அனுப்பிவைத்தது. அதே தினத்தில் இவற்றை அனுப்பி வைப்பது தொடர்பாக பின்வரும் செலவு ஏற்பட்டது

| | |
|---|---|
| பொதியாக்கும் செலவு | 8000 |
| காப்புறுதிக் கட்டணம் | 5000 |
| கப்பற்கேள்வு | 10000 |

இடைப்போக்கின்போது 5 சைக்கிள்கள் கொண்ட ஒரு பகுதி சேதமடைந்தது. அதனால் கம்பனிக்கு ஏற்பட்ட திருத்தற் செலவுக்கட்டணங்கள் 3000 ரூபா கமல் கம்பனி காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து 2000 ரூபாவுக்கன கோரிக்கைப் பணத்தைப் பெற்றது.

பொருட்களைப் பொறுப்பேற்ற கமல் கம்பனி 50000 ரூபாவுக்கான ஒரு மூன்றுமாத உண்டியலை ஒப்புக்கொண்டு நளன் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தது. இவ் உண்டியலை நளன் சகோதரர்களால் 1200 ரூபாவை உண்டியற் கழிவாகக்கழித்து பணமாக்கிக் கொள்ளப்பட்டது. (உண்டியல் கழிவு ஒப்படைக்குரியதாகும்). கமல் கம்பனிக்கு பின்வரும் செலவுகள் ஏற்பட்டது. ஏற்றியிறக்கும் செலவு 4000 ரூபா, களஞ்சியச் செலவு 5000 ரூபா.

12 சைக்கிள்கள் ஒன்று 18000 ரூபா படி விற்றதுடன் 7 சைக்கிள்கள் ஒன்று 20000 ரூபாவாக கடனுக்கு விற்கப்பட்டது. கடன் விற்பனைக்குரிய பணம் அறவிட்ட போது அதில் 4000 அறவிடமுடியாக் கடனாகவும், 3000 ரூபா கொடுத்த கழிவாகவும் பதிவழிக்கப்பட்டது. மொத்த விலையில் 10% சாதாரண தரகும் 5% பொறுப்புத் தரகினையும் கழித்துக்கொண்டு மிகுதித் தொகைக்கு கமல் கம்பனி ஓர் காசோலையை அனுப்பி வைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணக் கோட்பாடு பற்றி மாணவன் கண்ணோட்டம்

(Subramaniam Gamini - Student -A/L, 1998)

இந்து மதக் கொள்கைகளின் வலிந்த அமைப்பகக் கோட்பாடு என்கின்ற ரீதியிலே வர்ணக் கோட்பாடு பிரதானமான இடத்தினை பிடித்துள்ளது. இந்து மாத்தின் மூல இலக்கியமாக கொள்ளப்படும் வேதங்களையும் உபநிஷதங்களையும் அடிப்படையாக்க ண்டே வர்ணப் பாகுபாடுகள் அமைந்திருந்தன. இம் மூல இலக்கியங்களிலே வர்ணம என்பது சாதிக்கு இட்டு அழைக்கப்படுகின்றது. எனினும் சாதாரண பாமரமக்கள் நிறம் என்றே கருதுவர். ஆனர் இந்து மதத்தில் வர்ணம் என்பது சாதியையே குறிப்பீடு செய்கின்றது. வேதங்கள் தொழிலின்அடிப்படையிலும் உபநிஷதங்கள் குணத்தின் அடிப்படையிலும் வர்ணத்தினை வகுத்திருப்பதினைக் கான்கின்றோம்.

வர்ணப்பாகுபாடு பற்றி இருக்கு வேதத்தில் "புருஷ சூத்தம்" என்ற பகுதியில் நான்கு வர்ணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன பிராம்மணன் -வேட்டல், வேட்பித்தல், ஓதல் ஓதவித்தல், ஈதல், ஏற்றல் என்றும்; சஷ்த்திரியன் போர் செய்தர் அதர்மத்தை அழித்தல் தர்மத்தை நிலைநாட்டல் ஏனறும், வைசிகன் விவசாயம் வணிகம ஆற்றுதல் ஏனறும், சூத்திரன் மேற்கிறிப்பிட்ட மூன்று வர்ணத்தினருக்கும உதவி செய்தர் என்றும தொழிலின்அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு கூறப்படுகின்றது. இவ்வாறு வகுக்கப்பபடடதன் நோக்கம சமுதாயத்தினை பாதுகாக்கும் பொறுட்டே ஆகும். அந்தவகையில் பிராம்மணன் தெய்வத்திடம் இருந்து நாட்டைப் பாதுகாத்தவனாகவும், சஷ்த்திரியன் அந்நியர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாத்தவனாகவும், வைசிகன் வறுமையிலிருந்து நாட்டைப் பாதுகாத்தவனாகவும், சூத்திரன் இவர்களின் பாதுகாப்பிற்கு உதவியவன் ஆகவும் கூறப்படுகின்றது.

ஆனால் வேதங்கள் தொழில் அடிப்படையில் வகுத்த வர்ணங்களை உபநிஷதங்கள் குணங்களின் அடிப்படையில் வகைப்படுத்தியிருப்பதைக் காண்கின்றோம். அதாவது மனிதர்களுக்குரிய குணங்களை உபநிஷதங்கள் மூன்றாக வகைப்படுத்தினர். அதாவது சத்வீக குணம என்பது செந்தன்மை மிக்க உயரிய மேன்மை தாங்கிய குண இயல்புகள் அதாவது அன்பு, அகிம்சை தயவு, இரக்கம், கருணை போன்ற உயரிய குணங்களை கொண்டவர்கள் ஆவர். என்றும், ராசதகுணம் என்பது உடல் வலிமையும் மன வலிமையும் மிகுதியான குண இயல்புகள் அதாவது வீரம செறிந்தவர்கள், நாட்டுப்பற்றுமிக்கவர்க்ள, அஞ்சாமை, சரணைடயாமை, நீதி வழுவாமை, புமுதுகு காட்டி ஓடாமை போன்ற குணங்களையுடையவர்களாவர் என்றும்; தாமச குணம் என்பது சோம்பல் மிகுதியான குண இயல்புகள் என்றும் குறிப்பீடு செய்துள்ளது. இவ் குண இயல்புகள் ஒவ்வொரு மனிதர்கள் மத்தியிலும் உண்டே ஆயினும விகிதாசார அடிப்படையில் அவை கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. இந்த மூன்று குண இயல்புகளிலும் சத்வீக குணம் மேலோங்கப் பெற்றவன் பிராம்மணன் என்றும், ராசத குணம் மிகுதியாகவுள்ளவன் சஷத்திரயன் என்றும்; தாமச குணம உள்ளவன் வைசிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்; மேற்கூறப்பட்ட மூன்று வகையான குணங்களிற்கும் அப்பாற்பட்டவர்களே சூத்திரர்களாவர். பகவத் கீதையில் கண்ணன் அருச்சுனனிடம்,

"அருச்சுன நானே நான்கு வர்ணங்களையும் படைத்து அவர்களிற்குரிய
கடமைகளையும் நானே வகுத்திருந்தேன்"

எனக் குறிப்பிட்டிருந்தமை பகவத் கீதை வர்ணப் பாகுபாடு பற்றி கூறிய கருத்தாகவே காணப்படுகிறது.

ஸ்மிருதிகளில் சாதிப்பிரிவு ஒழுக்கம் பற்றியது; தொல்காப்பியத்தில் சாதிப்பிரிவு தொழில் பற்றியது.

"ஒழுக்கம் உடைமை குடமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

எனத் திருக்குறளிலும் ஒழுக்கமே சாதிக்கு வேலி போடுகின்றது. கல்வியிலும் பிற நலன்களிலும் உயர்ந்தோரே உயர்ந்தோர் எனப் புறநானூறு முதலாம் சங்க இலக்கியங்களும் பறைசாற்றுகின்றன. தேவாரம் தந்த திருநாவுக்கரசர்,

"கோத்திரமும குலமும் கொண்டு என்செய்வீர்"

என்று பாட,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்று திருமந்திரம் தந்த திருமூலர் பாடுவார்.

"சாதுர் வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குயகர்ம விபாகச". அதாவது குணங்களுக்குத் தக்கதாகக் கர்மத்தை வகுத்து நான்கு வர்ணங்களையும்நான் படைத்தேன் என்று கண்ணனே கீதையில் சொல்கின்றான். எனினும் பாரதி,

"நாலு குலங்கள்அமைத்தான் – அதை
நாசமுறப்புரிந்தனர் மூட மனிதர்"

சீலம் அறிவு கருமம் – இவை
சிறந்தவர் குலத்தினிற் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே – வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை எல்லாம் – இன்று
பசுக்கி விட்டால் எவர்க்கும் நன்மையுண்டு "

என்பான்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தின் பேரினால் சாதிகள் பிறப்பித்தல் பூசல்களுக்கு வித்திட்டு, சமயத்துறையில் வெறுப்பும் காழ்ப்பும் கொள்ளச் செய்யும். நம்முடைய மத்தியிலே நமக்குத் தெரியாமலே இடம் பிடித்துக் கொண்ட சாதிகள் தகர்த்து எறியப்பட வேண்டும். எல்லோரும் ஒரு குலமாக ஒன்றுபடச் சமயத்துறையில் இந்த மறுமலர்ச்சி வேண்டும். இது காலத்துக்கேற்ற மறுமலர்ச்சி. சுரக்கமாகச்சொன்னால் எல்லோரும் பிராம்மணர் ஆகலாம். வேண்டியது மனப்பரிபாகமே -

" சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சற் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானத்தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீயெறீ ரழித்தல்அழ கலவே
நிதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தரவர் தாமே
விதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே"

-திர அருட்பா-

மனபரிபாகத்துக்கேற்ப ஒருவன் பிராம்மணன் ஆகலாம்; இன்னொருவன் சஸ்த்திரியன் ஆகலாம்; மற்றொருவன் வைசியன் ஆகலாம்; வேறொருவன் சூத்திரனாகவே இருக்கலம். பரிபாகம் அடையாதவனுக்குப்பரவித்தை விளங்காது. பரிபாகத்திலுள்ள ஏற்றத்தாழ்வை அங்கீகரித்தே ஆக வேண்டும். ஒருவனுடைய குணத்தையும் கர்மத்தையும் நிர்ணயிப்பதற்கும்பிறப்பு-முக்கிய காரணமாக இருக்கமாட்டாது. பண்பும் தொழிலுமே பரிபாகத்தை விளக்கும்.

"பிறரிடத்து வேலைக்காரனாக இருந்து, இட்டவேலையைச் செய்து சம்பளம பெற்றுச் சீவிப்பவன் சூத்திரனாகிறான். இக் காலத்துக்குமாஸ்தாக்கள் எல்லோரும் சூத்திரர்களாம். நல்ல மனப்பான்மையுடன் ஆசிரிய வேலை செய்பவர்கள் பிராம்மண கர்மம் செய்கின்றார்கள். இக் காலத்தில் புதியதாகத தோன்று ய்ய வக்கீல்களும், டாக்டர்களும் இடை அல்லது கடைத்தரமான வைசியர்களாம். இவர்கள் சமூகத்துக்குச் செல்வத்தை உண்டுபண்ணுபவர்கள் அல்லர்; செல்வத்தை ஏற்பவர்களாம். அரசாங்கத்தில் முறையாக ஆட்சி செலுத்துபவர்கள் சஸ்த்திரிய கர்மம் இயற்றுகின்றார்கள். அவர்கள் சம்பளம் ஏற்பதில் குறை இல்லை. ஆனால் வயிற்றுப்பிழைப்புக்காக என்று அத்தொழில்களை நாடுவார்களானால் அவர்கள் சூத்திரர்களாகின்றார்கள். கைக்கூலி அல்லது இலஞ்சம் ஏற்கின்ற எல்லோரும் சூத்திரர்களேயம். உடல் வாழ்க்கை ஒன்றில்மட்டும் கருத்து வைத்திருப்பவன் சூத்திரன். அதற்கு மேல் உயர்ந்த சிந்தையும் செயலம் உடையவன் செய்தொழிலுக்கு எற்ப வைசியன், சஷத்திரியன் அல்லது பிராம்மணன் ஆகின்றான். எக்குடியில் பிறந்தார் என்பதை முன்னிட்டு ஒருகூனைப்பிராம்மணன் தோன்றலாம். பிறப்பு உரிமையில் பொருள் ஒன்றுமே இல்லை. மனபரிபாகமே முக்கியமானது. ஒதே குடும்பத்தில் பிறந்துள் ளநான்கு சகோதரர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு வர்ணத்தைச்சேர்ந்தவனாக இருக்கலாம். ஒரு சமுதாயத்தில் உள்ள மக்களுள் பெரும்பான்மையோர் ஏதேனும் ஒரு வர்ணத்தின் சுபாவத்தை உடையோராயிருக்கலாம் ஏ்னறு சுவாமி சித்பவானந்தர் சொல்லுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் கண்ணன் பார்த்தனுககுச் சொல்கின்றான்,

"ப்ராஹ்மண சஷத்திரிய விசாம் சூத்ராணாம் சபரந்தப
கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர்குணை."

பிரம்மண, சஷத்திரிய, வைசிய, சூத்திரர்களுடை யகர்மங்கள் அவரவர் இயல்பில் உதித்த குணங்களுக்கு அமையப்பிரிக்கப்பட்டிருக்கின்றன. அகக்கரணங்களின்அடக்கம், புறக்கரணங்களின்அடக்கம், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, சாஸ்திர ஞானம், சுபானுபவஞானம், ஈசுவர நம்பிக்கை, உடல் வாழ்க்கைக்கு அப்பால் ஒர வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை ஆகிய இவை அனைத்தும் இயல்பாயுண்டாகிய பிராம்மண கர்மங்களாகும். ஆரத்தன்மை, துணிவு, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, கொடை, இறைமை ஆகியவை இயல்பில் உன்டாகிய சஷத்திரிய கர்மங்களாம். உழவும், கால்நடை காத்தலும், வாணிகமும் இயல்பாயுண்டாகிய வைசிகர்மங்களாம். இட்டபணிஆற்றுவது சூத்திரனுககு இயற்கையில் ஏற்பட்ட கர்மமாகும். மனிதன் ஒவ்வொருவனும் தன்னுடைய கருமத்தில் கருத்து உடையவனாக இருப்பின் நிறைநிலைக்குரிய பக்குவம் அடையக்கூடும்.

தன் கருமத்தில் கருத்து வைப்பவன் எப்படி நிறை நிலை எய்துகின்றான் என்று சொல்கின்றேன், கேட்பாயாக, "எவனிடம் இருந்து உயிர்கள், பொருள்கள், உற்பததியாயினவோ எவனால் இவ் வையகம எல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஈசுரவரனைச் சுய கர்மத்தால் வணங்கி மனிதன் பக்குவ நிலையை எய்துகின்றான்.

சாதி இரண்டொழிய வேறில்லை என்று தானே ஔவைப்பிராட்டி பாடுகின்றாள். ஆதி இறைவன் சாதி வகுக்கவில்லை. ஒவ்வொரு மனிதனையும் தெய்வீகச் சுடரின் ஒரு பொறியாகக் காண்பது நல்லவன் பண்பாடு. நம்மைத் தனியாகப்பிரித்து வைக்கும் ஒரு சுவரை எழுப்பிக்கொள்ளக்கூடாது. நம்மைச்சுற்றியுள்ள மக்களைப்புரிந்து கொள்வதற்காக நம்மை நாமே உயர்த்திக்கொள்ள வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த காலத்திலே ஒரு நாள் பிரயலமான ஒரு மடத்துக்குப் போனார். சமஸ்கிருத பாஷையிலே அங்கே சம்பாஷணை தொடங்கியது. சிறிது நேரம் சென்றபின்மடாதிபதி, "உமது சாதி என்ன ?" என்று கேட்டார். சுவாமிகள் திடீரென அவ்விடத்தை விட்டு வெளியேறினார். "ஏன் போகின்றீர்கள்?" என்று மடாதிபதி வினாவினார். "இங்கே நான் எதிர்பார்த்தபடி யாரும் இல்லை; எனவே திரும்பிப்போகின்றேன்" எனச் சுவாமி பதில் அளித்தார்.

இன்னுமொரு சம்பவம இங்கே குறிப்பிடல் பொருந்தும். ஸ்ரீ நாராயணகுரு வயல் வரம்பு ஒன்றின்மேல் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவருககு எதிரே நம்பூதிரி ஒருவர் வந்துகொண்டிருந்தார். நம்பூதிரியைத் தம்பிரான் என அழைப்பது வழக்கம். தம்பிரானுக்கு எனையவர்கள் ஒதுங்கி நின்று வழிவிட வேண்டும். ஆனால் ஸ்ரீ நாராயண குரு அப்படி ஒதுங்கி வழிவிட வில்லை. ஸ்ரீ நாராயண குருவைப் பார்த்து நம்பூதிரி "உம்முடைய சாதி என்ன ?" என்று கேட்டார் "பார்த்தால் என்ன சாதி தென்படுகிறது?" என்ற ஸ்ரீ நாராயணகுரு பதில் சொன்னார். "சாதியைப் பார்த்துத் தெரிந்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா?" என்றார் நம்பூதிரி. "பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியுமா?" என்று ஸ்ரீ நாராயணகுரு நம்பூதிரியாருக்கு நல்ல விடை சொன்னார்.

நாகரீக வளர்ச்சி காரணமாக மனிதனது தேவைகள் அதிகரிக்கத் தொடங்கின, தொழீல்கள்அதிகரித்தமை காரணமாக ஒவ்வொரு தொழில்களுக்கும் ஒவ்வொரு வர்ணங்கள் எனக் கொண்டு பல வர்ணங்கள் பெருகின. அத்துடன்அந்நியர்கள் வருகையைத்தொடர்ந்து பின்னர் தொழிற்கல்வி ஏற்படுத்தப்பட்டது. இதன் காரணமாக கல்வியை கற்று கல்விரீதியாக பல தொழில்கள் பெருகின. குறிப்பாக ஆசிரியர், வைத்தியர், லிகிதர் போன்றன. இவ்வாறு பல தொழிகள் பெருகியபொழுது பெருகிவரும் தொழில்களுக்கு வர்ணம கற்பிக்க முடியாமையினால் முன்னவன் செய்த தொழிலின் அடிப்படையில் அவன் பின் வந்த சந்ததியினர் அத்தொழிலை செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி இட்டு அழைக்கப்படலாயின. ஆகுவே? தொழில் வழீவந்த பரம்பரை அடிப்படையில் இன்று உயர்வு தாழ்வுகளை கற்பித்து பல வர்ணங்கள் பேணப்பட்டு வருவதைக்காண்கின்றோம்.

எனினும இம் மாற்றங்களின் விளைவாக இந்து மதம் வகுத்துத் தந்த பிராம்மணன், சஸ்த்திரியன், வைசிகன், சூத்திரன் என்னும் நான்கு வர்ணங்களில் பிராம்மணன்மட்டுமே வழக்கில் இருக்க ஏனைய மூன்று வர்ணங்களும் வழக்கொழீந்து அதற்குப்பதிலாக பல வர்ணங்கள் உருப் பெற்றதோடு இந்து மதம் தொழில், குணம என்ற அடிப்படையில் வர்ணத்தை வகுத்திருக்க இன்று பரம்பரை ரீதியாக வர்ணங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சமுதாயம் நலத்துடன் வாழ வேண்டும் என்கின்ற உயரிய நோக்கில் வர்ணம வகுக்கப்படட்டிருக்க இன்று உயர்வு? தாழ்வு என்னும் வேறு பாட்டை காட்டும வகையில் வர்ணங்கள் உருழுபெற்றுள்ளது. இவற்றையே இன்று காணப்படும் வர்ணவகுப்பு மாற்றங்களை சுட்டி உணர்த்துவனவாக உள்ளது.

இந்து மத சீர்திருத்த வாதிகளில் ஒருவராகிய மகாத்ம காந்தி வர்ணப் பாகுபாட்டினை ஆதரித்து, அதற்கு "ஆன்மீக பொருளியல் சட்டம்" என்னும் பெயரினை சூட்டியிருந்தார். அதாவது ஒவ்வொருவனும்தத்தமது கடமைகளை ஒழுங்காக ஆற்றுவதனால் அவன் ஈடேற்றத்தினை பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூறியிருந்தனர். வர்ணப் பாகுபாட்டினை ஏற்றிருந்த இவர் அவற்றிற்கிடையே உயர்வு, தாழ்வு, பாராட்டப்படுவதனை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை.

இவ்வாறே ஏனைய சீர்திருத்த வாதிகளான இராஜராம் மோகன் றோய், சுவாமி தயானந்த சரஸ்வதி, சாரதா அம்மையர், விவேகானந்தர், மகாகவி பாரதிதயார் போன்றோர் இப்பாகுபாட்டினை நீக்ககுதற்காக பல பிரச்சாரங்களினை மேற் கொண்டு வந்திருந்தனர். ஆனால் இப் பாகுபாட்டினை மரபு ரீதியாக கடைப்பிடித்து வந்த மக்கள் உடனடியாக நீக்குவதற்கு விரும்பவில்லை.

எனவே பிற்காலத்தில் நாகரீக வளர்ச்சி; அந்நியர்களது வருகை; கல்வியறிவு ஆகிய காரணிகளினாலும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பி உரிமை, சம கல்வி வாய்ப்பு, சமதொழில் வாய்ப்பு, தீணடாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம், கலப்பு திருமணம போன்ற நடவடிக்கைகளின்காரணத்தால் இன்றைய சமுதாய நிலையில் இப்பாகுபாடு ஓரளவிற்கு தளர்ச்சியடைந்துள்ளது என்றே கருத்திக்கொள்ள முடிகின்றது. ஆனால் தனி மனிதன், குடும்பம் என்ற நிலைகளில் இன்றும வர்ணப்பாகுபாடுகள் பேனப்பட்டு வருகின்றது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாடு பெறும் முக்கியத்துவம்

செல்வன் எம். மயூரன் - கலைப்பிரிவு , உயர்தரம் 98.

இன்று சமய நெறிகளில் கௌமார நெறியும் ஒன்றாகும். கௌமாரம் முருகுப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றது. கலியுக வரதனாம் கந்தவேள் பெருமான் இந்துக்களால் போற்றப்படுகின்றான். பகைவரின் ஆற்றலை வற்றச் செய்பவன் கந்தவேள் என்றே வடமொழி நிகண்டாகிய அமரகோசம் குறிப்பிடுகின்றது. இந்துக்களின் மூல நூலாகிய வேத்தில் முருக வழிபாடு பற்றி நேரடியாகக் கூறப்படவில்லை. இக் கால முனிவர்கள் யாகங்களை பூர்த்தி செய்யும் போது சுப்பிரமணியோம் சுப்பிரமணியோம் என மும்முறை கூறுவதாகவும் தைத்திரிய ஆரணியகம் கூறுகின்றது. வேதங்களிற்கு இதம் செய்து கொண்டு பிரகாசிக்கும் தெய்வமென இங்கு சுப்பிரமணியன் போற்றப்படுகின்றான். ஆகமங்களில் காமிகம், காரணம், சுப்பிரபேதம் என்பவற்றில் முருகனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. முருகனிற்கு தனிக் கோவில் அமைக்கும் முறையை உத்திரகாமியம் எடுத்துக் கூறுகின்றது. இருபத்தெட்டு சிவாகமங்களின் சாரமென போற்றப்படுகின்றன. குமார தந்திரத்தில் முருகனின் வரலாறு, வழிபாடு, பிரதிஸ்டை, விழா, விரதம் என்பன விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதிகாசங்களில் முருகன் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. இராமாணயத்தில் விசுவாமித்திரர் இராம இலக்குமணரிற்கு கங்கை வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது முருகனைக் குறிப்பிடுகின்றார். மகாபாரதத்தின் வன பர்வத்தில் தர்மபிரானின் வேண்டுகோளிற்கிணங்க முருகனின்நாமங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பகவத்கீதையில் கிருஸ்ண பரமாத்மா சேனைத் தளபதிகளில் நான் ஸ்கந்தன் போன்றவன் எனக் குறிப்பிடுகின்றார்.

புராணங்களின் எழுச்சியின் பின் முருக வழிபாடு வட இந்தியாவில் சிறப்பிடம் பெற ஆரம்பித்தது. வட மொழி சிவபுராணங்களில் ஒன்றான ஸ்கந்தபுராணம் முருகப் பெருமானின் தோற்றம் அவரின் திருவருள் சிறப்பு ஆகியவற்றை எடுத்துக் கூறியுள்ளது. இந்நூலை ஆதாரமாகக் கொண்டே கச்சியப்பச் சிவாச்சாரியார் தமிழில் கந்தபுராணம் பாடினார். சைவ சித்தாந்த தத்துவத்தினை விளக்கும் ஞானத் திருநூலாக சைவத் தமிழ் மக்களால் கந்தபுராணம் போற்றப்படுகின்றது. சமய சாஸ்திர பொக்கிசமாக இந்நூல் காணப்படுகின்றது. தொல் பொருட சின்னம் பலவற்றில் முருகுப் பெருமானின் வடிவம குறிப்பிடப்பட்டுள்ளது. குசானர், யௌதேயர் போன்றோரின் நாணயங்களில் முருகனின் உருவமும் மயில் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. குஷான மன்னன் கணிஷ்க மன்னனின் நாணயத்தில் கிரேக்க எழுத்தில் 'ஸ்கந்தோ விசாகோ' என முருகப் பெருமானின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குப்தர் ஆட்சிக் காலத்தில் முருக வழிபாடு பரத கண்டம் முழுவதுட பரவியது. புக்த மன்னர்களின் பெயர்கள் குமாரகுப்தன், ஸ்கந்த குப்தன் என முருக நாமங்கள் கொண்டுள்ளன. இம் மன்னர்களால் முருகனின் கோயில்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. தக்கணத்திலே குமாரக் கடவுளை வப்பஸ்சுவாமி, வப்பவட்டாரகர் என்ற பெயர்களில் அழைப்பர். காளிதாஸ மகாகவி அருளிய குமார தந்திரம் எனும் காப்பியம முருகனைப் பற்றியே குறிப்பிடுகின்றது. சமஸ்கிருத இலக்கிய ஆசிரியரான பாணின் எழுதிய வியாகரண சூத்திரத்திலும் ஸ்ரீ தத்துவ நிதியிலும முருகக் கடவுளைக் கற்றியே கூறியுள்ளார்கள். வேத மாத்திரியின் விரத கண்ட எனும் நூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேய என்ற கடவுளின் புனித கிரிகைகள் விரதங்கள் என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. பம்பாய் பிரதேசத்தை ஆண்டு வந்த சாளுக்கிய மன்னர் தங்கள் அரசு தங்களிற்கு காத்த்திகேயனின் திருவருளால் கிடைத்தவை என கல் வெட்டுகளில் பொறித்துள்ளனர்.

தமிழகத்தில் மிகத்தொன்மையான காலந்தொட்டே முருகு வழிபாடு நிலவி வந்தது. உயர்ந்து காணப்படும மலைக்கு உயர்ந்து விளங்கும தெய்வமாக முருகன் குறிக்கப்பட்டதை 'சேயோன் மேயனமவனர உலகம்' என தொல்காப்பியம் குறிப்பிடும் முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் முருகுனிற்கு தமிழ் நாட்டில் கோவில் இருந்ததை அறுமகச் செவ்வேள் அணிதிகழ் கோவில் எனக் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியமான புறநானூற்றில் சங்கப்பிலவர்கள் திருத்தகு சேவப் எனவும் குறிப்பிடுகின்றனர். முருக உபாசகரின் சிறந்த பாராயண நூலாகவும் திருமுருகாற்றுப்படை காணப்படுகின்றது. இந்நூல் 11ம் திருமுறையில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது. கலித்தொகை, அகநானூறு ஐங்குறு நூறு? குறுந்தோகை, ப்துப்பாத்து ஆகிய நூல்களில் எல்லாம் முருகுப் பெருமான் போற்றப்படுகின்றார். தமிழ் நாட்டில் ஆதித்த நல்லூரில் கண்டு பிடிக்கப்பட்ட புனித பொருட்களில் முருகப் பெருமானின் சின்னங்கள் பல காணப்படுகின்றன. மலையும் மலைசார்ந்த இடமுமாமகிய குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் தமிழ் மக்களால் போற்றப்படுகின்றார்.

ஈழத்தில் முருகவழிபாடு மிகத் தொன்மைக் காலந்தொட்டே நிலவி வருகின்றது. அனைத்து இன மக்களாலும் வழிபடப்படுகின்றன. கதிர்காமம் பழமையும் பெருமையும் மிக்க புராதன தலமாகும். கந்தபுராணத்தில் கதிர்காமம் ஏககூடம் எனச் சித்தரிக்கப்படுகின்றது. அருணகிரிநாதர் இறவாமல் பிறவால் எனும் திருப்புகழில் கந்தனைச்சிறப்பிக்கின்றார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரும்-அதிரமலை மாணிக்க கங்கை என வரும் பாடலில் கதிரமலை காணாத கண்ணென்ன கண்ணே எனப் போற்றுகின்றார். ஈழத்தின் வடபால் அமைந்த ஆலயங்களில் அலங்காரக் கந்தனாக நல்லூரும் அன்னதானக் கந்தனாக செல்வச் சந்நிதியும், அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரம் கந்தனும் கிழக்கு மாகாண்திலுள்ள மண்டூர் முருகுனும் பிரசித்தி பெற்ற முருக தலங்களாகும். கந்தப் பெருமானின் திவ்விய சரிதத்தைக் கூறுகின்ற கந்தபுராணத்தின் பிறந்தகம் தமிழகம் என்றால் புத்தகம் யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்திலுற்ற முருக தலங்கள் அனைத்திலும் கந்தபுராண படனம் சிறப்பா கநடைபெற்று வருகின்றது. அத்னவதம் போதித்த ஆதி சங்கராச்சாரியார் முருகுப் பெருமான்மீது சுப்பிரமணிய புஜங்கம் என்ற பக்தி ரசம் ததும்பும் பாமாலையை வட மொழியில் பாடினார். பகழிக் கூத்தர் பின்னைத் தமிழில் முருகனைப்ப ாடிப் பரவினார். சிறந்த முருக உபாசகரான அருணகிரிநாதர் முருகுப் பெருமான மீது பாடிய பாடல்கள் ஆறாகும். திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம என்பன அவையாகும். பாம்பன் சுவாமிகள், தண்டவாணி தேசிகர், இராமலிங்க சுவாமிகள் முதலானோரும் முருகுப் பெருமான மீது பல பாடல்கள் பாடியுள்ளனர். இந்துக்கள்மத்தியில் பொதுவாகவும்தமிழர்கள் மத்தியில் சிறப்பாகுவம் பல்லாண்டு காலமாகவும் குறிப்பாக சைவர்கள் மத்தியில் முருக வழிபாடு சிவ வழிபாடுடன் இணைந்தே காணப்படுகின்றது. சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகவே முருகனை சித்தரிக்கும் சிவனுடைய மூர்த்தங்கிளல் ஒன்றான சோமாஸ்கந்த மூர்த்தத்தில்அருள் வடிவாகா முருகப் பெருமான் காட்சி தருகின்றார். இவ்வாறு இந்துசமயத்தில் கௌமார நெறி பல நூற்றாண்டு காலமாக திகழ்ந்து வருகின்றது.

**"கந்தனை வணங்கி கலியுகத்தினை வெவ்வோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் மீட்பு

செல்வன் பொ.இ. அகிலநாயகம் – உயர்தரம் 98 – கலை

கிறிஸ்துவின் மீட்பு என்பது மனிதனை அவனது பால வாழ்க்கையில் இருந்து விடுதலையளித்து அவனையும் தமது அன்பின் பரலோக இராச்சியத்திற்கு அழைப்பதே ஆகும். இது எல்லோருக்கும் பொதுவான ஓர் உன்னதமான ஆழைப்பாகும்.

ஆதியிலே கடவுள் தமது அன்பின் சாயலாகவும் பாவனையாகவும் மனிதனை மண் கொண்டு படைத்தார். இவ்வாறு இறைவனால் படைக்கப்பட்டு ஓர் உன்னதமான இடத்தில் பரிசுத்தமான நிலையில் வாழ்ந்து வந்த மனிதன் உலக மாயங்களுக்கு அடிமைப்பட்டு இறைவனை மறந்து பாவம் செய்தான். இதன் விளைவாக தன் அருள் நிலையினை இழந்தான். அத்துடன் மனித குலத்தையே தொடர்ந்து பாதித்து வரக் கூடியதான சென்ம பாவத்தினையும தன்னுடன் சேர்த்துக் கொண்டான். இதன் விளைவாக துன்பம், துயரம், நோய், கஷ்டம், மரணம் என்பனவும் மனிதனின் வாழ்க்கையின் தொடர்கதையாயிற்று.

ஆனாலும் கருணையும், மன்னிப்பும் பரம அன்பும் கொண்ட இறைவன் பாவம செய்த மனிதனை மீட்பதாயும் அதன் பயனாக என்றுமே மகிழ்ச்சியான ஓர் வாழ்க்கையினை பெற்றுத் தரக்கூடிய ஓர் மீட்பையும் அவரின்மீட்பின் பரிசுத்தத் தன்மையினையும் முன்னறிவித்து ஓர் மீட்பரை அனுப்புவதாக ஆதிப் பெற்றோருக்கு வாக்குறுதியளித்து தமது இல் வாக்குறுதியைக் கடவுள் காலக் கிரமத்தில் நிறைவேற்றினார்.

இவ்வாறு இறைவன் தமது மீட்பின் வாக்குறுதிதயை நிறைவேற்ற ஓர் மனித இனத்தைத் தெரிவு செய்து அவ் இனத்தினை நெறிப்படுத்தி வழிநடத்தினார். நீங்கள் எனது சொல்லைக் கேட்டு என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள் ஆகில் நீங்கள் எனது ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சபையாய் இருப்பீர்கள் என்றார். இவ்வாறு இறைவனால் தெரிவு செய்யப்பட்ட இனம் இஸ்ராவேல் இனம் அல்லது யூத இனம் என அழைக்கப்பட்டது. இவ்வாறு இறைவனால் அழைக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் பற்பல கஸ்ர, துன்ப, துயரங்களையும், அரசியல் அடிமைத் தனங்களையும அனுபவித்தனர். இவ்வாறு இஸ்ராயேல் இனம் உரோயையர்களுக்கு அடிமைகளாக வாழ்ந்து வந்த காலத்தில் இன்றைக்கு 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு வாக்களிக்கப்பட்ட மெசியா, யூதேயா, நாட்டு பெத்தலேகேம் பட்டணத்தின் நசரேத்தூர் என்னும் இடத்தில் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதக் குலத்தில் இருந்து தான் மீட்டூர் தோன்றுவார் என்பது யூதர்களின் நம்பிக்கை. ஆனால் அல் மீட்பர் தோன்றுவார் என்பது யூதர்களின் நம்பிக்கை ஆனால் அல் மீட்பர் எப்பொழுது தோன்றுவார் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர் எவ்வாறான மீட்பர் எவ்வாறான மீட்பினை அளிப்பார் என்பதனைக் கூட அவர்கள் இவை நடந்தேறும் வரை புரிந்து கொள்ளவில்லை. யூதர்கள் தாம் அரசியல் ரீதியான விடுதலை அடைய ஓர் லௌகிக, படைப்பலமிக்க யுத்தம் புரிகின்ற தமக்கு உலகின் சுதந்திரத்தைத் தரக் கூடிய ஓர் மீட்பரான அரசனையே அவர்கள் நெடுங்காலம் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால் யூத குலத்தினில் நின்று பரிசுந்த ஆவியின் வல்லமையால் மரியாளின் வயிற்றினிலே பிறந்த இயேசு கிறிஸ்து யூத இனத்தவர்களின் எதிர்பார்ப்புகளுககு எதிர்மாறானவராய் இருந்தார்.

தாம் தான் வாக்களிக்கப்பட்ட மீட்பர் என இயேசு கூறிப் போதித்த போது மீட்பரைக் குறித்து யூதர்கள் சஞ்சலப்பட்டார்கள். இயேசுவின் வருகையினைக் குறித்து பழைய ஏற்பாட்டு இறை வாக்குகள் யாவும் நிறைவாச "நிறைவேறிய" போதிலும் இயேசுவை இறைவனாக மீட்பராக ஏற்றுக்கொள்ள யூதர்கள் பின் வாங்கினார்கள். இவ்வாறான ஓர் சூழ்நிலையிலேதான் இயேசுவின் நற்செய்திப் பணி தொடங்கியது.

பாவ அடிமைத் தனத்தில் நின்று விடுதலையும் ,அதன் வழியாக என்றென்றும் மகிழ்ச்சியாக வாழக்கூடிய நித்திய பரலோக இராட்சியமே அவரது போதனையின் மையமாகவும், கருவாயும், குறிக்கோளாயும் அமைந்தது. தமது இப்பிணியினை நிறைவேற்ற இயேசு பல்வேறு மக்கள்மத்தியில் பல்வேறு விதமாக போதிக்கின்றார். "நானே உலகின் ஒளி" நானே உண்மையும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றேன். என் வழியாகவன்றி வேறு எவ் வழியாலும் தந்தையிடம் செல்ல முடியாது என்ற இப்போதனையின் ஊடாக தாமே வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்றும் தமது வழியாகவே பரலோக இராச்சியம் உங்களுக்குச் சொந்தமாகும் என இயேசு போதிக்கின்றார். ஆனாலும் யூத இனம் தம்மை ஓர் புனித இன மக்களாக எண்ணி தமக்கு மட்டுமே மீட்பு உண்டு எனவும் ஏனைய புற இனமக்கள் பாவிகள் எனவும் அவர்கள் கடவுளுக்கு விரோதமானவர்கள் என எண்ணினர். ஆனால் இயேசு "நீதிமான்களை அன்றி பாவிகளையே தேடிவந்தேன்" "தொண்ணூற்றொன்பது நீதிமான்களை அன்றி மனம் திரும்புகின்ற ஓர் பாவியைக் குறித்து பரலோக இராச்சியத்தில் மிக்க மகிழ்ச்சி உண்டாகும் எனக் கூறுகின்றார்". இப் போதனையினூடாக இயேசு எவனொருவன் தன்னையேற்றுத்தனது பாவ வாழ்க்கையினைக் களைந்து எறிந்துவிட்டு என் அண்டை வந்து என்னைப் பின் செல்வானாகில் அவனுககு பாவ விடுதலையும் நிச்சயப் பரலோக இராட்சியம் உண்டு எனக் கூறுகின்றார். இயேசு மக்களால் வெறுக்கப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளைக் குணமாக்கினார். பாவிகளை மன்னித்து ஏற்றுக் கொண்டார். மக்களை அன்பு செய்தார். மெசியா பாடுகள் பல படுவார். அனைவராலும் கைவிடப்பட்டு மரித்து மூன்றாம் நாள் வெற்றிவீரனாக விடுதலையின் வீரனாக உயிர்த்தெழுவார். இவ்வாறு இயேசு தமது பாடுகள், மரணம் தீர்ப்பின் ஊடாக (பாஸ்கா மறைபொருள்) ஆன்மீக விடுதலையினைப் பெற்று எல்லோருக்கும் அளித்தார். தம்மை ஏற்று விசுவாசிக்கின்ற ஒவ்வொருவனுககும் இது உரியது என்றார்.

இயேசு தமது பணியினை நிறைவேற்றி முடித்தபின்னர் விண்ணகம் செல்லும் முன்னர் தம் சீடர்களின் நடுவிலே தோன்றி "எருசலேமிலும் யூதயா, சமாரியா முழுவதிலும் மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்கும் நீங்கள் என் சாட்சிகளாய்இருப்பீர்கள்" எனக் கூறி பரலோகம் சென்றார். பின்னர் அப்போஸ்தலர்கள் இதனைத்தமது தலையான கடமையாகக் கொண்டு இயேசுவின் மீட்பின் நற்செய்தியினை உலகம் எங்கும் பரப்பினார்கள். யூதர்களுக்கு மட்டுமல்லாது இன மக்கள் எல்லோருக்கும நற்செய்தியை அறிவித்தார்கள். நற்செய்தியினை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவனுக்கும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு அளித்தனர். இயேசுவின் பெயரால் அப்போஸ்தலர்கள் புதுமைகள் பல புரிந்து தமது திருச்சபையினைக் கற்பாறையின்மீது வீடு கட்டிய விவேகிக்கு ஒப்பாகக் காட்டினர். இவ்வாறு ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்திலிக்க, திருச்சபை எங்கும் பரவி இயேசுவின் விடுதலையினையும் பரலோக இராட்சியத்தினையும் மக்கள் இனம் அனைத்திற்கும் அறிவித்தது. இவ்வாறு ஆதிக் கிறிஸ்தவ சமயம் கிறிஸ்துவின் மறு வருகையினை எதிர்பார்த்து அனைத்துச் செயற்பாட்டிலும் ஒரே உள்ளம் கொண்டவர்களாக அன்புச் சமூகமாக வாழ்ந்தார்கள்.

இவ்வாறு அப்போஸ்தலர் வழியாய் வளர்ந்து வந்த திருச்சபை இன்றும் பாப்பரசர், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் வழியாக இயேசுவின்மீட்பின் விடுதலையின் செய்தியை வெவ்வேறு மக்கள் இனத்திற்கும் அவர்களின் பண்பாட்டுடன் சேர்த்து நற்செய்தியை அறிவித்துக் கிறிஸ்துவின் மீட்புத் திட்டத்தில் தனது உன்னதப் பணியினைச் சிறப்புடனும், மகிழ்ச்சியுடனும செய்து சிறிஸ்துவின் மீட்பினையும் பரலோகஇராட்சியத்தினையும் தானும் பெற்று நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள நம்மை அழிக்கின்றது. இது மக்கள் இனம் அனைத்திற்கும் உரிய மீட்பு எனப் பறை சாற்றுகின்றது. நாமும் விசுவாசிப்போம். இயேசுவின் மீட்பினைப் பெற்றுக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச் சூழல் பாதுகாப்பும் ரியோ பூமி மாநாடும்

செல்வன் சே.ஜெனார்த்தனம்
(பழைய மாணவன் - கலைப்பிரிவு உயர்தரம் 1997)

இன்று உலக நாடுகள் எதிர்நோக்கும் சவால்களுள் சூழல் மாசடைதல் பிரச்சினையும் ஒன்றாகும். மனித சமூகம் பல்துறையில் விழீப்படைந்த காலம் தொட்டு குறிப்பாக 18ம் நூற்றாண்டுக்குப்பின்இன்னொரு போதும் கண்டிராத மாற்றங்களை உலகம் இன்று கண்டிருக்கின்றது. மனிதனின்அறிவு வளர்ச்சி காரணமாக விஞ்ஞானம், தொழிலநுட்பம் காரணமாக 18ம் நூற்றாண்டு தொட்டு இற்றைவரையான 200 ஆண்டு காலப்பகுதிக்குள் மிக மிக விரைவாக வளர்ந்தன. இவற்றின், உயர்ச்சி பூமியில்மனித சமூகத்தின்ஆதிக்கத்தை வேரூன்றச்செய்தது. ஆக்கங்கள் பல உயர்வடைந்தன. இவற்றை மறுக்கமுடியாது இருப்பினும் மறுபுறம் இவையாவும்சிறிது சிறிதாக சூழலுக்கு ஊறுபயக்கத் தொடங்கின.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் மனிதன் எண்ணிப்பார்க்க முடியாத சாதனைகளைச் செய்தான். ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ தான்வாழும சூழலின் அழிவிற்கும காரணமானான். மனிதனின் அபரிமிதமான விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி நிலம், நீர், வளி ஆகிய சூழலின் பிரதான கூறுகளை மாசுபடுத்தின, மாசுபடுத்துகின்றன. எனவே "சூழற்சமநிலை" கெடுவதற்கு பிரதான காரணி மனிதன் என்பது மறுக்க முடியாததொன்று. இதனை இன்றைய அறிவியல் உலகு இதை உணராமல் இல்லை. எனவே 20ம் நூற்றாண்டின்விளிம்பில்நிற்கும்மனித சமுதாயம் மலரப்போகும் புதியதொரு தசாப்தத்தை "பசுமையான"தாக ஆக்குவதற்குத்திடசங்கற்பம பூண்டுள்ளது. இதற்கான வித்து "ரியோ பூமி மாநாட்"டில் பல உலக நாட்டுத் தலைவர்களின்ஒட்டுமொத்த முயற்சியால் இடப்பட்டது.

### ரியோ பூமி மாநாடு

இம்மாநாடு உலகம் முன்னொருபோதும் கண்டிராத ஒன்று. 1992ம் ஆண்டு யூன் மாதம பிரேசிலின் தலைநகரான் ரியோடி ஜெனிரோவில் 179 க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் சுற்றுச்சூழல் ரீதியாக உலகை நிலைத்து நிற்கும் வளர்ச்சிக்கு இட்டுச் செல்வது தொடர்பாக சிந்தித்தனர், இது வரவேற்கத்தக்கது அவசியமானது. இது "செயற்திட்டம்" எனும் அர்த்தமுள்ள பரிமாணமாக உயர்ந்தது. நமது உலகை 21ம் நூற்றாண்டிலிருந்து அதாவது எதிர்காலத்தில் பொருளாதார, சமூக, சுற்றுச் சூழல் ரீதியாக நீடித்து நிலைத்து நிற்கும் விதத்தில் வளர்த்தெடுப்பது என்பது பற்றி இந்த "செயற்திட்டம் 21" பேசுகின்றது.

### அடிப்படையான திட்டங்கள்

நிலம், நீர், வளி எனும் சூழலின் கூறுகள் மாசுபடுவதற்கு அடிப்படையான திட்டங்கள் பல "செயற்திட்டம் 21" இல் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலம்**

நிலம், காடழிப்பு, திட்டக்கழிவ கள் மற்றும் கழிவுநீர் இரசாயனப்பொருட்களின் உபயோகங்கள் போன்றவற்றால் பெரிதும் பரிக்கப்படுகின்றது. ஆனால் "பூமி மாநாட்டின் தீர்மானங்கள்" இவற்றைக் கட்டுப்படுத்த வழிகோலுவதாக அமைகின்றன.

காடழிப்பைக்கட்டுப்படுத்தி அதிலிருந்து சுற்றுச் சூழல் ரீதியான பாதுகாப்பை உறுதி செய்ய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அவற்றில் சுற்றுச்சூழல் தாக்கங்களுக்கு ஈடுசெய்கின்ற அதிக பயனளிக்கின்ற மரங்கள் வளர்க்கப்பட வேண்டும். மரங்கள் வீணாக்கப்படுதல் கட்டுப்படுத்தப்படல் வேண்டும், இப்போது ஒதுக்கித் தள்ளப்படுகின்ற மரங்கள்மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும், மக்கள் வசிக்கும் இடங்கள் அனைத்தும் பசுமையாக்கப்படும் விதத்தில் நகர்ப்புறக்காடுகள்அமைக்கப்படுதல் போன்ற பல திட்டங்கள்பயனறிக்கக் கூடியன.

தடக்கழிவுகள் மற்றும் கழிவுநீர் ஆகியனவும் நிலம் மாசுபடுவதற்கு அதிக காரணமாகவுள்ளன. எனவே, இவற்றை குறைக்க பின்வரும்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கழிவுகளை உற்பத்தி செய்பவர்களே அதனை அகற்றும செலவுகளை ஏற்க வேண்டும் என்பதை உறுதிசெய்ய வேண்டும். வாழ்க்கை முறைகள் உற்பததி மற்றும் நுகர்வு முறைகளை மாற்றியமைத்து கழிவுகளின் உற்பததியைத்தடுப்பதற்கான அணுகுதல் தேவை உற்பத்திகளை கூடிய வரை குறைத்து கழிவுகளை மாறு சுத்திகரிப்பு செய்து பாதுகாப்பாகத் திரட்டி பராமரிக்க வேண்டி தேசிய திட்டங்கள்தீட்டப்பட வேண்டும் போன்ற திடக்கழிவு மற்றும் கழிவு நீர்போன்றவற்றால் ஏற்படும் மாசுபாட்டைக்குறைக்கவல்ல வள விவசாய உற்பத்திகளோடு இரசாயனப்பொருட்களின்பிரயோகங்களும் இணைந்திருப்பதால் நிலம் மாசுபடுவதற்கு விவசாயத்துறையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல ஏற்படவேண்டும். அதாவது வேதியல் பொருட்களை திறம்பட உபயோகித்தல், வேளாண் கழிவுகளைக்குறைத்தல் அல்லதுமறுசுழற்சி செய்தால் குறைந்த உள்ளீடு மற்றும் குறைவாற்றல் தொழில் நுட்பங்களை (இதில் உள்ளூர்ப் பழக்கங்களும் அடங்கும்) பயன்படுத்த ஊக்குவித்தல் போன்றவை விவசாயத்துறையில ஏற்படலாம். இவை நிலம மாசுபடுதலை தடுக்க அல்லது குறைக்க வல்லன.

**நீர்**

இங்கு குறிப்பாக கடலையேஇது மையமாக்கொண்டது கடல்மாசுபாட்டை தடுக்க அல்லது குறைக்க எவ்வெவ்வழிகளை கையாள வேண்டும் என்பது பற்றி ஆராயப்பட்டது. பொதுவாக பெருகிவரும் மக்கட்தொகைக்கு உணவையும் பிறவளங்களையும் கடல்வாரி வழங்குகின்றது. இருப்பினுமஇன்று கடல்களின் மாசுபாடு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. கழிவுகள், வேதிப் பொருட்கள், வண்டல்கள், குப்பை, பிளாஸ்டிக், உலோகங்கள், ஏனைய மற்றும் கதிரியக்கக்கழிவுகள் ஆகியன. கடலின் சுற்றுச்சூழலுக்கு மாபெரும் கேடுகளை விளைவிக்கின்றவற்றில் குறிப்பிடத்தக்க. எனவே, இவற்றைத்தடுக்க சில நடவடிக்கைகள்மேற்கொள்ளலாம அதாவது மாசுபடுத்துபவர் செலவிடவேண்டும் என்ற கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும், கடலோர மக்களின்வாழ்க்கைத்தரத்தை )குறிப்பாக வளர்முக நாடுகளில் உள்ளோரின்) உயர்த்த வேண்டும் அவர்கள் கடற்கரை சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உதவுவார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புக்களை நிறுவவேண்டும, சரக்குக் கப்பல்கள் ஏற்படுத்தும் மாசுபாடு மற்றும்விபத்துக்களைத் தடுத்து கடுமையான சர்வதேச விதிமுறைகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம கடல் மாசுபாட்டைக் குறைக்க முடியும்.

## வளி

வளி மாசுபடுவதற்கு சக்திகளின்பங்கு அதிகமாகும். பொருளாதார, சமூக, வளர்ச்சிக்கும் உயர்ந்த வாழ்க்கைத்தரத்திற்கும சக்தி உபயோகம இன்றியமையாதது. ஆயினும் இன்று உலகம் உருவாக்கிவரும் சக்தி உற்பததி இதே அளவில் தொடருமானால் அது அபாயத்தில் போய்முடியும். சக்தியுற்பததியோடு போக்குவரத்து அதிகரிப்பு குளோரோ, புளோரோ காபன்போன்ற ஒசோன் படலத்தைப்பாதிக்கின்ற வாயுக்கரியின் உபயோகம் போன்றனவே வளி மாசு படுவதற்கு பிரதான காரணங்களாகும். இதைத்தடுக் கசில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதாவது தற்போது இருக்கும சக்தி திட்டங்கள், சக்தி சேமிப்பு உடையதாக மாற்றப்பட வேண்டும். புதுப்பிக்கப்கூடிய சக்தி மூல்களான சூரியசக்தி, காற்று, நீர், கடல், புவி வாயு போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், சுற்றுச்சூழலுக்கு அதிக ஆபத்து விளைவிக்காத, குறைவான வாயுவை வெளியேற்றுவிக்கின்ற வாகனங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டு. குளோரோ, புளோரோ காபன் போன்ற ஒசோன் படலத்தை பாதிக்கின்ற நச்சு வாயுக்களுக்குப்பதிலாக பிற பொருட்கள் உபயோகிக்கப்பட வேண்டும். ஆகவே, வளி மாசுபடுதலை பெருமளவு குறைக்கலாம்.

தீர்மானங்களின் செயல் வடிவம்

ரியோவில் "நிலைத்திருக்கும் வளர்ச்சிக்காக" எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் செயல்வடிவம பெறுவதற்கு சர்வதேச கூட்டுறவு, நிதியுதவி,தொழில் நுட்ப பசிமாற்றம், நிலைத்திருக்கும் வளர்ச்சியை நிர்வகித்தல், கல்வி பயிற்சி மற்றும்விழிப்புணர்வு போன்றனவும் அத்தியாவசியமாகின்றன.

எனவே, இவையாவும் ஒன்று சேர்ந்து ரியோவின்தீர்மானங்களுக்கு செயல்படிவம கொடுக்குமேயானால் அத்திட்டங்கள் யாவும 21ம் நூற்றாண்டில் பசுமைத்திட்டமாய் அமையும் என்பதில் வியப்பொன்றுமில்லை.

நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனியின் அறிமுகமும் பயன்பாடும்

திரு. S. சுதாகரன், கணனி ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி

இன்றைய நவீன உலகில் சணனி பற்றி தெரிந்திருக்காதவர்கள் இல்லையென்ற நிலை உருவாகிவருகின்ற பொழுதிலும் அதைப்பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும அறிந்திராதோர் பலர் உளர் என்பது வெளிப்படையாகவுள்ளது.

கணனியின் தன்மைகளும் பயன்பாடுகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகும இக்கால கட்டத்தில் அதைப்பற்றிய ஒரு அடிப்படை விளக்கங்கள் கூட இன்றி அதைப்பற்றி கதைப்பதற்கோ கலந்துரையாடுவதற்கோ தகுதியற்றவர்கள் போல் ஒதுங்கி நிற்பதை எமது சமூகத்தில் பலர் மத்தியில் காண்பது ஒரு துர் அதிர்ஷ்டவசமானது. இதற்கான முக்கிய காரணம் எம் மத்தியின் கணனிப்பிரயோகங்கள்மிகக் குறைவாகவுற்றதேயாகும். ஆனால் தற்பழுது சிறிதளவில் தானும் கணனிப்பிரயோகங்கள் எம்மத்தியில் அதிகரித்து வருவதார் அனேகமானோர் மத்தியில் கணனி பற்றிய அறிவை பெறும் ஆர்வமும் அதன் பிரயோகங்களை தெரிந்திருக்கும் தன்மையும மேலோங்கி வருவதை காணமுடிகிறது.

இன்று யாழ்ப்பாணத்திலுள்ள அனேகமான பாடசாலைகளில் குறைந்தது ஒரு கணனியாவது இருக்கின்ற பொழுதிலும் அதை இயக்குவதற்கு தகுதியானவர்கள் இல்லையென்ற காரணத்தால் அவை பயன்படாற்ற இயந்திரமாக இருப்பது கவலையளிக்கப்கூடிய ஒரு விடயம். சில பாடசாலைகளில் செய்முறை ரீதியில் பெற்றுக்கொண்ட அனுபவத்தை மட்டும் கொண்டு அதன் முழுத்திறனையும் (Efficiency) பயன்படுத்தத் தெரியாது தமது தேவைகளை பூர்த்தி செய்யும் நிலைமைகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. எந்த ஒரு நிர்வாக அலகையும் செம்மையாகவும் விரைவாகவும் செய்துமுடிப்பதற்கு கணனியை உபயோகிக்கலாம் என்ற நிலைப்பாடு இருக்கின்ற பொழுதிலும் அது பற்றிய பயிற்சிகளும் செய்முறை விளக்கங்களும் போதியளவு இல்லாதிருக்கின்ற தன்மைகள் காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

இன்று கணனிச் சந்தையில் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் முன்னணிக் கணனித் தயாரிப்புகளில் இரண்டு தன்மைகளை எடுத்து நோக்க வேண்டியுள்ளது. ஒன்று Computer Hardware மற்றது Computer Software ஒரு நல்ல மனிதனுடைய தன்மைகளை கருத்தில் கொள்ளும் பொழுது அவனுடைய உடல் அமைப்பையும் உளத்திறனையும் (அறிவு) எடுத்துக் கொள்வதைப் போல் கணனியிலும் அதன் Hardware features (திண் கணிமத்தின் தன்மைகள்) யும் Software Features (மென் கணிமம்)யும் கருத்தில் கொள்ள வேண்டும். காலத்திற்கு காலம் கணனியின் தேவைகள் பெருகி வரும் இக்கால கட்டத்தில் இவ்விரண்டு தன்மைகளும் மிகவும் வளர்ச்சியுற்று வருகின்றன.

ஒரு மனிதனிடம் உள்ள அறிவு எவ்வளவு மேலோங்கியுள்ளதோ அவ்வளிற்கு வன் மிகவும் பயன்பாடுள்ளவனாகின்றான். அதேபோல் ஒரு கணனியிலுள்ள (பதியப்பட்டுள்ள) Software எவ்வளவு சிறத்ததாகவுள்ளதோ அவ்வளவிற்கு அந்த கணனியில் பயன்பாடும் சிறந்ததாகவுள்ளது. இங்கு Software ஆனது கணனியை செயற்படுத்துவதற்கான / நெறிப்படுத்துவதற்கான / ஒரு வேலையை செய்வதற்கான Programs (செயற்திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு) ஆகும். இவை கணனியிலுள்ள Secondery Storage Unit எனப்படும் காந்தப்பூச்சுத் தட்டுகளில் (Magnetic Disks) நிரந்தரமாகப்பதியப்பட்டிருக்கும். தேவையேற்படும் பொழுது கணனியின் நினைவகம் (Main Memory) எனும் பகுதிக்கு Magnet Disk இலுள்ள Programs பெற்றுக்கொள்ளப்படும். இவையே Electronic Signals ஆக மாற்றப்பட்டு கணனியை செயற்பட வைக்கின்றன. Main Memory இலுள்ள இந்த கணனிக்கு Power Supply (மின்னிணைப்பு) இருக்கும் பொழுது மட்டுமே அங்கு பதியப்பட்டிருக்கும். Power Supply இல்லாது போனதும் அவை அழிந்துவிடும். பின்பு கணனியை இயக்கும் போது இவற்றை Disk இல் இருந்து Main Memory இற்கு பெற்றுக்கொள்ள வேண்டும். இதே போல் ஒரு பாவனையாளர் கணனியைப் பயன்படுத்தும் பொழுது அவரால் எழுதப்படும் Programms அல்லது அவர் செய்துமுடிக்க வேண்டிய வேலைக்கான Data (தரவுகள்) இவை யாவும் கணனிக்கு வழங்கப்படும் பொழுது, தற்காலிகமாக Main Memory இல் பதியப்படுகின்றன. இவை நீண்ட காலப் பயன்பாட்டிற்காக சேமித்து வைப்பதற்காக Magnetic Disk இலும் பதியப்படுகின்றன. இவ்வாறு பதியப்படும் Programs or Data Magnetic Disk இலுள்ள Files என்று அழைக்கப்படும். இவற்றை மீண்டும் பயன்படுத்தும் பொழுது அடையாளம் காண்பதற்காக பொருத்தமான பெயர்களை (File Names) வழங்கியே Magnetic Disk இல் பதியப்படும்.

ஒருவர் தனது வேலையொன்றை செய்துமுடிக்கும் நோக்குடன் அது சம்பந்தமான அறிவை ஒரு புத்தகத்தை தேர்ந்தெடுத்து வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதைப் போன்ற கணனியிலும் ஒரு பிரயோகத்துக்குத் தேவையான Program ஐ Magnetic Disk இல் இருந்து Main Memory இற்கு பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக கணனியின் Magnetic Disk இலுள்ள எல்லா Programs ஐயும் Software கணனியின் என்று அழைக்கப்படுகின்றது.

இந்த வகையில் கணனியின் Software ஐ பின்வரும் பிரிவுகளாக எடுத்து நோக்கலாம் :

1. System Software

2. Application Software

System Software எனப்படுவது கணனியைச் செயற்படுத்தவதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான Programs ஆகும்.

Application Software எனப்படுவது கணனியில் ஒரு பிரயோகத்தை பெறுவதற்கு உபயோகப்படும Programs ஆகும். உதாரணமாக Word processing applications, Spreas Sheet Applications, Data Base Management Systems போன்றவற்றை கணனியூடாக நிறைவேற்றுவதற்கு அவற்றுக்குரிய பொருத்தமான Software ஐ Magnetic Disk இல் இருந்து Main Memory இற்கு Load பண்ணி எமது வேலையை தொடரவேண்டும்.

இந்த வகையில் சிறந்த ஒரு கணனியென்று நாம் கருதும் பொழுது அக்கணனியின் Hardware, Software போன்றவற்றின் தன்மைகள் சிறந்ததாக இருக்கவேண்டும். மேலும் கணனிபற்றிய அறிவை நாம் பெறும் பொழுது இந்த இரண்டு தன்மைகளையும் கற்க வேண்டும். கணனியை பயன்படுத்தப் போகும் ஒரவர் தனது ஒரு குறிப்பிட்ட ஒரு பயன்பாட்டை (Application) மாத்திரம் செயற்படுத்துவதாக இருந்தால். அந்த பயன்பாட்டிற்குரிய Software ஐ எப்படி கணனியில் Main Memory இற்கு Magnetic Disk இல் இருந்து மாற்றுவது. அதில் எவ்வாறு தனது பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற விடயங்களைக் கற்றாலே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

செல்வன் ம.ஜோன்றைடின் - உயர்தரம் 2000 - கலைப்பிரிவு

"கல்வி கரையில் கற்பவர்நாள் சில" என்பது ஆன்றோர் வாக்கு. வாழ்வின் சகல துறைகளையும் வியாபித்து நிற்கும கல்வியினை கரை காண்பது என்பது இயலாத ஒன்று. அதன் ஆழத்தையும் அகலத்தையும் நாடித் தேடிப் போவது என்பது ஒரு நீண்ட பயணமாகும். எனவே தான் கல்வியானது வாழ்நாள் பயணம் என்று கூறப்படுவதுண்டு. அப் பயணத்தினை மேற்கொள்பவர் எவர்க்கும் அருந்துணையாக அமைபவை அறிவு சேர்க்கும் நூல்கள். இந் நூல்களே கல்வியன்அரும் பெரும் பொக்கிஷம். இந்த பொக்கிஷத்தை தேடிக் கற்பதற்கு நூலகம் என்ற களஞ்சியம்ஈடினையற்ற உதவியாக அமைகிறது. படிப்பதற்குரிய நூல்கள் அவற்றின் பயன்பாடு நோக்கி படிப்பை பல்வகைத் தன்மையுடையதாகக் கூறலாம். படிப்புலகில் பரந்த அறிவு அவசியம். இவ்அறிவு, கருத்து, உறுதிப்பாடு ஆகிய தேவைகளை நிறைவு செய்வது கற்றோரின் முதற் கடமையாகும்.

